சீக்ரட் நாவல் Rs 10/- இதழ் 22

# வெல்டன் விவேக்



## ராஜேஷ்குமார்



## 1

அந்த ஞாயிற்றுக்கிழமை மழையோடு விடிந்து கொண்டிருந்தது.

விவேக் ஜாக்கிங் சூட்டை மாட்டிக் கொண்டு சமையலறையைப் பார்த்துக் குரல் கொடுத்தான்.

“ரூபி...”

ரூபலா சமையலறையிலிருந்து எட்டிப் பார்த்தாள். விவேக் ஜாக்கிங் சூட்டில் நிற்பதைப் பார்த்ததும் முகத்தில் கோபத்தை ஒட்ட வைத்துக் கொண்டு இடுப்பில் இரண்டு கைகளை வைத்தபடி வெளியே வந்தாள்.

''ஸார் ஜாக்கிங் கிளம்பிட்டீங்க போலிருக்கு?''

''ஆமா...''

''வெளியே மழை பெய்யுது... ஸார்...''

''அது மழையல்ல. தூறல்... நான் கார்ல பீச்சுக்கு போய்ச் சேர்றதுக்குள்ளே இந்த தூறலும் நின்னுடும். இந்த தூறலுக்கெல்லாம் பயந்தா முடியுமா...?''

''நான் சொல்றதை சொல்லிட்டேன். அப்புறம் உங்க இஷ்டம். மழையில நனைஞ்சு ஏதாவது உடம்புக்கு வந்துட்டா அப்புறம் கஷ்டப்படப் போறது நீங்கதான்... ஸார்...''

''பாட்டி மாதிரி அட்வைஸ் பண்ணிட்டிருக் காதே...! டீ ரெடியா இல்லையா...? இப்பவே மணி அஞ்சே முக்கால். இந்நேரம் கார்ல நான் கிளம்பியிருக்கணும். லேட்... லேட்... மகா லேட்...''

ரூபலா நாடக பாணியில் இரண்டு கைகளையும் குவித்தாள்.

''என் பிராணநாதரே...! ஒரு இரண்டு மணித் துளிகள் பொறுத்துக் கொள்ளுங்கள். பால் கொதிநிலைக்கு வந்ததும் உடனே தேநீர் தயாரித்துத் தருகிறேன். நீங்களும் அதைப் பருகிவிட்டு இந்த மழையில் ஜாக்கிங் போனாலும் சரி... வார்ஃபீல்டுக்கே போனாலும் சரி... எனக்கு அதைப்பற்றிக் கவலையேதும் இல்லை.''

ரூபலா சொல்லிக் கொண்டிருக்கும்போதே வாசலில் அழைப்பு மணி 'டிடிங்' என்று கூப்பிட்டது. விவேக்கைப் பார்த்தாள் ரூபலா.

''இந்த நேரத்துக்கு யார்ன்னு தெரிய லையோ?''

''யாராயிருக்கும்ன்னு நினைக்கிறே...?''



www.cleanindians.com

''எப்படித் தெரியும்... போய்க் கதவைத் திறந்தால் தானே வந்திருக்கிறது யார்ன்னு தெரியும்?''

''வந்திருக்கிறது யார்ன்னு நான் கண்டு பிடிச்சுட்டேன்.''

''எப்படி...?''

''அவங்க காலிங்பெல்லை அடிச்ச விதத்தை வெச்சுத்தான்...''

மறுபடியும் காலிங்பெல் 'டிடிங்' என்றது. ''எனக்குத் தெரிஞ்சு போச்சு...'' என்றாள் ரூபலா.

''யாரு... சொல்லு பார்க்கலாம்...''

''கோகுல்நாத் அங்கிள்...''

''கிடையாது.''

''அங்கிள் இல்லேன்னா வேற யாராயிருக்க முடியும்? வேலைக்காரி ஏழு மணிக்கு முன்னாடி எந்த ஜென்மத்திலேயும் வரமாட்டா...''

''சரி... நான் சொல்லட்டுமா...?''

''சொல்லுங்க...''

''வந்திருக்கிறது விஷ்ணு. போய்க் கதவைத் திற.''

ரூபலா ஆச்சரியப்பட்டுக் கொண்டே போய்க் கதவைத் திறந்தாள்.

வெளியே -

விஷ்ணு நின்றிருந்தான். வலது கையில் சுருட்டி வைக்கப்பட்டிருந்த அன்றைய நாளிதழ்.

''வி...விஷ்ணு... என்ன இவ்வளவு காலங் கார்த்தால வந்திருக்கே...? நீ காலிங்பெல்லை அடிச்ச விதத்தை வெச்சே உன்னோட பாஸ், வந்திருக்கிறது நீதான்னு கண்டுபிடிச்சுட்டார்...''

விஷ்ணு புன்னகைக்க முயன்று முடியாமல் இறுகிய முகத்தோடு உள்ளே வந்தான். விவேக் அவன் முகத்தைப் படித்துவிட்டு ரூபலாவிடம் திரும்பினான்.

''ரூபி! இவன் குட்மார்னிங் சொல்லாமே வர்றதைப் பார்த்தா பேப்பர்ல ஏதோ ஹாட் நியூஸ் இருக்கும் போலத் தெரியுது...''

விஷ்ணு விவேக்கிற்குப் பக்கத்தில் வந்து நின்றாள். ''ஸார்... பேப்பர்ல வந்திருக்கிறது HOT ந்யீஸ் கிடையாது. BAD அண்ட் SAD ந்யூஸ். நீங்க இன்னும் பேப்பரையே பார்க்கலைனு நினைக்கிறேன்.''

''பேப்பர் போடற பையன் ஆறரை மணிக்குத்தானே வருவான். என்ன ந்யூஸ் காட்டு...''

விஷ்ணு அந்த நாளிதழைப் பிரித்து எட்டாவது பக்கத்தின் வலதுபக்க கார்னரைக் காட்டினான். விவேக் பார்வையை அங்கே கொண்டு போக, கண்களுக்கு அந்தக் கறுப்புக் கட்டடம் கட்டிய செய்தி கிடைத்தது.

## இயற்கை எய்தினார்

**இந்திய விமானப் படையின் ஓய்வுபெற்ற முன்னாள் ஏர்மார்ஷல் மித்ராராய் நேற்று இரவு பதினோரு மணி அளவில் அகால மரணம் அடைந்து இறைவன் திருவடி சேர்ந்தார்கள் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறோம்.**

இப்படிக்கு

குடும்பத்தார்.

விவேக் திடுக்கிட்ட பார்வையோடு நிமிர்ந்தான்.

''மைகுட்னஸ்... ரெண்டு நாளைக்கு முன்னாடி கூட இவரை ஒரு ஃபங்க்ஷன்ல பார்த்து ரொம்ப நேரம் பேசிட்டிருந்தேன். சென்னை க்ளைமேட் ஒத்துக்கலை. சீக்கிரமாகவே ஊட்டியில் இருக்கிற மகன் வீட்டுக்குப் போய் செட்டில் ஆயிடணும்னு சொன்னார். வெரி நைஸ் பர்ஸன். மரணம் எப்படின்னு போன் பண்ணிக் கேட்டியா விஷ்ணு...?''



''என்னோட அப்பாவுக்கும் உங்களுக்கும் மித்ராராய் நல்ல பழக்கமுள்ளவர்ங்கிற காரணத்தால உடனடியா அவர் வீட்டுக்கு போன் பண்ணினேன். ஒரே என்கேஜ்ட் டோன். போன் கால்ஸ் நிறைய வந்துட்டிருக்கும். ஸோ ட்ரை பண்றதுல பிரயோஜனம் இல்லைன்னு நினைச்சு விஷயத்தை உங்ககிட்டே கன்வே பண்ணிட்டு போலாம்ன்னு வந்தேன் ஸார்...''

''இங்கிருந்து போன் பண்ணிப் பாரு...''

விஷ்ணு டெலிபோனை நோக்கிப் போக, விவேக் பக்கத்தில் இருந்த நாற்காலிக்கு தளர்ந்து போய் உட்கார்ந்தான். ரூபலா அவனை நெருங்கினாள்.

''என்னங்க... நீங்களும் விஷ்ணுவும் உடனே கிளம்பி மித்ராராய் வீட்டுக்குப் போறதுதான் பெட்டர். போன் பண்ணி பேசிட்டிருக்க நேரமில்லை...''

''இல்லை ரூபி... இறந்து போயிருக்கிறது சாதாரண நபர் கிடையாது. இரண்டு வருஷத்துக்கு முந்தி வரை இராணுவத்தின் விமானப் படையில் சீஃப் ஏர்மார்ஷலாக இருந்தவர். இராணுவ விதிகள் படி அவரோட பாடி இப்போ வீட்ல இருக்கா... இல்ல இராணுவ பாரக்ஸ் ஏதாவது ஒண்ணுக்கு கொண்டு போயிருக்காங்களான்னு தெரிஞ்சுகிட்டு நாம போறது பெட்டர்.'' சொன்ன விவேக் பெரு மூச்சொன்றை விட்டுவிட்டுத் தொடர்ந்தான்.

''மித்ராராய் எப்பேர்ப்பட்ட மனிதர்...! பாகிஸ்தானுக்கும் நமக்கும் போர் மூண்டபோது நாட்டு விமானங்களை வெச்சுக்கிட்டு சாகசம் பண்ணினவர். பாகிஸ்தானைச் சேர்ந்த விமானப் படைத் தளபதிகளுக்கு மித்ராராய் பேரைக் கேட்டாலே வயித்தைக் கலக்கும்...''

ரூபலா கேட்டாள்.

''அவர்க்கு இப்போ என்ன வயசு இருக்கும்?''

''அறுபத்தி நாலு....'' சொன்ன விவேக் ''ஆனா... பார்க்கிறதுக்கு யங் அண்ட் எனர்ஜிடிக்கா



www.cleanindians.com

இருப்பார். அவர்க்கு மரணம் இவ்வளவு சீக்கிரத்துல வரும்னு நான் நினைச்சு கூட பார்க்கலை...'' என்றான்.

விஷ்ணு திரும்பி வந்தான். ''ஸார்...! லைன் கிடைக்கலை. தொடர்ந்து என்கேஜ்ட் டோன். அங்கே கால்ஸ் தொடர்ந்து வந்துட்டிருக்குன்னு நினைக்கிறேன்.''

''சரி... கிளம்பு... நாம நேர்லயே போய் ஹோமேஜ் பண்ணிட்டு வந்துடலாம்...''

விவேக் பக்கத்து அறைக்குப் போய் தன் ஜாக்கிங் சூட்டிலிருந்து வேறு ட்ரஸ்ஸுக்கு மாறி வெளியே வந்தான்.

''விஷ்ணு...! கிளம்பு...''

ரூபலா குரல் கொடுத்தாள்.

''என்னங்க... டீ கேட்டீங்க...''

''வேண்டாம் ரூபி... மனசு கனத்துப் போய் கிடக்கு...''

விவேக் விஷ்ணுவோடு வெளியே வந்து போர்டிகோ இருட்டில் கரைந்து நின்றிருந்த மாருதிக்குள் ஏற விஷ்ணு பின் தொடர்ந்து வந்து ஏறி உட்கார்ந்தான்.

கார் கிளம்பியது. ரோட்டுக்கு வந்து வேகம் பிடித்தது.

''விஷ்ணு...!''

''ஸார்...''

''மித்ராராய் அகால மரணமடைந்தார்ன்னு தானே பேப்பர்ல போட்டிருந்தது...?''

''ஆமா ஸார்.''

''அகால மரணம்ன்னா இயற்கையான மரணம் கிடையாது. ஸோ... ஏதோ ஒரு விபரீதம் நேர்ந்திருக்கு...''

''மே பி ஸார்...''

காரின் டேஷ்போர்டுக்கு கீழே இருந்த டெலிபோனைக் காட்டினான் விவேக்.



www.devaleanindians.com

''இப்ப ட்ரை பண்ணிப் பாரு...''

விஷ்ணு கொக்கியில் மாட்டியிருந்த அந்த கார்ட்லஸ் டெலிபோனைத் தொட்டு ரிஸீவரை எடுத்துக் கொண்டான். மித்ராராயின் வீட்டுக்கு எண்களைத் தட்ட மறுமுனையில் உடனே ரிங் போயிற்று.

''ஸார்... ரிங் போகுது...''

விவேக் காரின் வேகத்தை சட்டென்று குறைத்த, இடதுகையில் ரிஸீவரை வாங்கிக் காதுக்குக் கொடுத்தான்.

''ஹலோ...''

''எஸ்...''

''அது மித்ராராய் வீடா...?''

''ஆமா...''

''நான் விவேக். க்ரைம் ப்ராஞ்ச். பத்து நிமிஷத்துக்கு முன்னாடிதான் பேப்பர்ல மெஸேஜ் பார்த்தேன். மித்ராராய்க்கு என்னாச்சு...?''

''சடன் ஹார்ட் அட்டாக் ஸார்.''

''இயற்கையான மரணமா...?''

''ஆமா ஸார்...''

''பேப்பர்ல அகால மரணம்ன்னு போட்டிருந்தது.''

''அது அவசரத்துல கொடுத்த செய்தி ஸார்.''

''நீங்க யார் பேசறது...?''

''அவரோட பி.ஏ.ஸார்...''

''பாடி இப்போ எங்கே இருக்கு...?''

''அவரோட வீட்லதான் ஸார்... பொதுமக்கள் அஞ்சலி செலுத்தறதுக்காக வீட்டு போர்டிகோ விலேயே ஒரு மேடை போட்டு பாடியைக் கிடத்தியிருக்கோம்...''

''பாடியோட ப்யூனரல் எப்போ...?''

''எப்படியும் சாயந்தரம் ஆயிடும் ஸார். டெல்லியிலிருந்து வைஸ் பிரஸிடெண்ட்,

மித்ராராய்க்கு அஞ்சலி செலுத்த வரப்போறதா செய்தி...''

''ராத்திரி எத்தனை மணிக்கு மரணம் நிகழ்ந்தது...?''

''பதினோரு மணி சுமார்க்கு ஸார்... உயிர் பிரியும்போது பக்கத்துல நான் மட்டும்தான் இருந்தேன். டாக்டர்க்கு போன் பண்ணி அவர் வந்து பார்க்கிறதுக்குள்ளே உயிர் போயிடுச்சு ஸார். பட் அவர் உயிர் பிரியும்போது கூட அவர் வாயிலிருந்து வெளிப்பட்ட வார்த்தை ஜெய் ஹிந்த் ஸார்'' சொன்ன பி.ஏ. மன்னிப்பு கேட்கும் தோரணையில் பேச்சைத் தொடர்ந்தார். ''எக்ஸ்க்யூஸ்மீ ஸார்... மித்ராராய் உடலுக்கு அஞ்சலி செலுத்தறதுக்காக வி.ஐ.பி.ஸ் வந்துகிட்டு இருக்காங்க. நான் போய் அவங்களை ரிஸீவ் பண்ணணும்.''

''ஓ.கே...! நீங்க போய் ரிஸீவ் பண்ணுங்க. நான் இப்போ அங்கேதான் வந்துகிட்டிருக்கேன்...''

''வாங்க ஸார்...''

விவேக் ரிஸீவரை டேஷ்போர்டுக்குக் கீழேயிருந்த கொக்கியில் மாட்டிவிட்டுக் காரின் வேகத்தை அதிகரித்தான்.

விஷ்ணு கேட்டான்.

''போன்ல என்ன ஸார் சொன்னாங்க?'' விவேக் விபரம் சொல்ல விஷ்ணு தீர்க்கமாய் தலையாட்டினான்.

''ஹார்ட் அட்டாக் வர்ற மாதிரியான உடம்பா அவர்க்கு? நம்ப முடியலை ஸார். மித்ராராய்க்கு ஒய்ஃப் இருக்காங்களா ஸார்...?''

''இல்லை... அவங்க எப்பவோ காலமாயிட்டாங்க. அவர்க்கு உறவுன்னு இருக்கிறது ஊட்டியில இருக்கிற ஒரே மகன் மட்டும்தான்...''

''அவரோட மரணத்துல ஏதோ ஒரு மர்மம் இருக்கிற மாதிரி என் மனசுக்குப் படுது ஸார்...''

''அங்கே போய்ப் பார்ப்போம்... வித்தியாசமா மனசுக்கு ஏதாவது பட்டா விஷயத்தைக் கிளறுவோம்...''



www.cleanindians.com

கார் பனகல் பார்க்கைச் சுற்றிக் கொண்டு உஸ்மான் ரோட்டில் பாய்ந்து பர்கிட் ரோட்டு வளைவில் திரும்பி நூல் பிடித்த மாதிரி ஓடியது. தி.நகர் டெர்மினஸ்ஸிலிருந்து பஸ்கள் சொற்பப் பயணிகளோடு வெளியேறிக் கொண்டிருந்தன. பால்பூத்தில் பெண்கள் காத்திருந்தார்கள். பெட்டிக்கடை வாசல்களில் படபடத்துக் கொண்டிருந்த செய்தித்தாள்களின் போஸ்டர்களைப் படித்தே தன் அரசியல் அறிவைப் பெருக்கிக் கொண்டிருந்தார்கள் சிலர்.

கார் பர்கிட் ரோட்டின் கோடிக்குப் போய் மித்ராராயின் வீடு இருந்த ஆர்த்தி அவென்யூவுக்குள் புகுந்தது.

ரோட்டின் இரண்டு பக்கங்களிலும் நிறைய கார்கள் தெரிய மித்ராராயின் வீட்டுக்கு முன்னால் இரண்டு போலீஸ் ஜீப்புகளும் போலீஸ் கமிஷனரின் வெள்ளை நிற அம்பாசிடர் காரும் தெரிந்தது.

விவேக்கும் விஷ்ணுவும் காரை விட்டுக் கீழே இறங்கி நடந்தார்கள்.

அந்தத் தெருவே மௌனத்தில் உறைந்து போயிருந்தது.

''விஷ்ணு...''

''ஸார்...''

''ஒரு மலர்வளையம் வாங்கிட்டு வந்திருக்கலாம்...''

''மறந்தே போயிட்டோம் ஸார்.''

காம்பௌண்ட் கேட் விரியத் திறந்து கிடந்தது. இருவரும் உள்ளே நுழைந்தார்கள். போலீஸ் யூனிபார்ம்கள் நிறையத் தெரிய, அவர்களுக்கு நடுவே சில வி.ஐ.பி.க்களின் முகங்களும் தெரிந்தன.

விவேக் போர்டிகோ படிகளில் ஏற, அவனைப் பார்த்துவிட்ட கான்ஸ்டபிள்களும்

மற்ற போலீஸ் அதிகாரிகளும் சல்யூட்டுக்கு வந்து தளர்ந்தார்கள்.

போலீஸ் கமிஷனர் எதிர்கொண்டார்.

''வாங்க மிஸ்டர் விவேக்... நானே உங்களுக்கு ஃபோன் பண்ணி இங்கே வரவழைக்கலாம்ன்னு இருந்தேன்...''

''ஸார்... மித்ராராயோட மரணம் எதிர்பார்க்காத ஒண்ணு... விஷ்ணு வந்து பேப்பரைக் காட்டின போது அதிர்ந்து போயிட்டேன்...''

''விவேக்...! நீங்க நினைக்கிற மாதிரி எக்ஸ் ஏர்மார்ஷல் மித்ராராய் இறக்கலை...''

விவேக், விஷ்ணு நிமிர்ந்தார்கள்.

''ஸார்.... நீங்கள் என்ன சொல்றீங்க...?''

கமிஷனர் திரும்பி நின்று உள்ளே கையைக் காட்டினார். விவேக் பார்வையை உள்ளே கொண்டு போனான்.

மித்ராராய் சோபாவுக்கு சாய்ந்து உட்கார்ந்த படி கலவர முகத்தோடு பத்திரிகை நிருபர்களுக்கு மத்தியில் பேசிக் கொண்டிருந்தார்.

விவேக் சுவாசிக்கத் திணறிவிட்டுக் கேட்டான்.

''ஸார்... அந்த பேப்பர் ந்யூஸ்...?''

''பொய்...''

''அந்த ந்யூஸைக் கொடுத்தது யாரு...?''

''அதை நீங்கதான் கண்டுபிடிக்கணும்.''



## 2

விவேக் இன்னமும் திகைத்துக் கொண்டிருக்க போலீஸ் கமிஷனர் கவலை ஈஷியிருந்த குரலோடு சொன்னார்.



www.cleanindians.com

''மிஸ்டர் விவேக்...! எக்ஸ் ஏர்மார்ஷல் மித்ராராய் ஹார்ட் அட்டாக்கில் இறந்துட்டதா நேத்து ராத்திரி ஒன்பது மணி சுமார்க்கு 'காலைக் குரல்' பத்திரிகை அலுவலகத்துக்குப் போய் யாரோ மரண அறிவிப்பு விளம்பரம் கொடுத்திருக்காங்க. அந்தப் பத்திரிகையோட விளம்பரப் பிரிவில் இருந்த நபர் இவர்தான்'' சொன்ன போலீஸ் கமிஷனர் சற்றுத் தள்ளி நின்றிருந்த ஒரு நடுத்தர வயது நபரைக் காட்ட, தலைநரைத்து கண்ணாடி போட்டிருந்த அந்த நபர் இன்னமும் அதிர்ச்சி விலகாத முகத்தோடு பக்கத்தில் வந்தார். தழுதழுத்த குரலில் சொன்னார்.

''ஸார்...! எப்படியோ இந்தத் தப்பு நேர்ந்துடுச்சு. அந்த ஆளைப் பார்த்தப்ப எனக்கு எந்த சந்தேகமும் வரலை. நீட்டா ட்ரஸ் பண்ணி ஒரு ஆர்மி ஆபீஸர் மாதிரி இருந்தார். ஜீப்ல வந்து இறங்கி வேகவேகமாக உள்ளே வந்தார். எக்ஸ் ஏர்மார்ஷல் மித்ராராய் அரை மணி நேரத்துக்கு முன்னாடி ஹார்ட் அட்டாக்கில் இறந்துட்டார். உங்க பத்திரிகையில் மரண அறிவிப்பு போடணும்... இந்தாங்க அவரோட போட்டோன்னு சொல்லி மித்ராராயின் போஸ்ட்கார்ட் சைஸ் போட்டோவையும் கொடுத்தார்.''

விவேக் அவரை ஒரு கோபப் பார்வை பார்த்தான். ''மித்ராராய் இந்திய விமானப்படையின் தலைமைத் தளபதி. அவர் இறந்துட்டார்ன்னு ஒருத்தர் வந்து சொல்லி மரண அறிவிப்பு விளம்பரம் கொடுக்கும்போது அது உண்மையான செய்தியா இல்லையான்னு கன்ஃபார்ம் பண்ணிக்க மாட்டீங்களா?''

''கன்ஃபர்ம் பண்ணிகிட்டேன் ஸார்.''

''யார் கிட்ட...?''

''பி.டி.ஐ.கிட்ட...''

''அதாவது ப்ரஸ் ட்ரஸ்ட் ஆஃப் இண்டியா!''

''ஆமா ஸார்...''

''பி.டி.ஐ.யில் யார்கிட்டே பேசினிங்க...?''

''யார்ன்னு தெரியலை ஸார்...! மரண அறிவிப்பு விளம்பரம் கொடுக்க வந்த நபரை எதிரில் உட்கார வெச்சுகிட்டே செய்தி உண்மையான்னு கேட்டேன். உண்மைதான்னு சொன்னாங்க... பட் நேத்து ராத்திரி என்கிட்ட பேசினது பி.டி.ஐ. பீப்பிள் கிடையாது. யாரோ லைன் க்ராஸ் பண்ணி பி.டி.ஐ. பீப்பிள் மாதிரி பேசியிருக்காங்க என்கிற உண்மை கொஞ்ச நேரத்துக்கு முந்திதான் எனக்குத் தெரிஞ்சுது...''

விவேக் விஷ்ணுவிடம் திரும்பினான்.

''விஷ்ணு...! கார்ல நாம வரும்போது டெலிபோன்ல பி.ஏ.மாதிரி பேசினதுகூட யாரோ லைனை க்ராஸ் பண்ணிப் பேசினதுதான்...''

''எஸ் ஸார்... இப்படி ஒரு பொய்யான மரண அறிவிப்பு வெளியிடறதால யார்க்கு என்ன லாபம்ன்னு தெரியலை.''

போலீஸ் கமிஷனர் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு குரலைத் தாழ்த்தினார்.

''மிஸ்டர் விவேக்...! இதை யாரோ விளையாட்டுக்காகப் பண்ணின மாதிரி எனக்குத் தெரியலை. இந்த விபரீத விளம்பரத்துக்குப் பின்னாடி ஏதோ விஷயம் இருக்கு.''

www.cleanindians.com

''மித்ராராய் இது விஷயமா என்ன சொல்றார் ஸார்...?''

''அவர் ரொம்பவும் அப்செட்டான நிலைமையில் இருக்கார். எந்தக் கேள்வியைக் கேட்டாலும் சரியான பதில் இல்லை. அவர் இந்த அதிர்ச்சியிலிருந்து விடுபட இன்னும் சில மணி நேரமாவது பிடிக்கும்... பத்திரிகை நிருபர்கள்தான் அவரை விடாம துளைச்சு எடுத்துட்டிருக்காங்க...''

''நான் அவரைப் பார்த்து பேசிட்டு வந்துடறேன் ஸார்...''

''ப்ளீஸ்...'' போலீஸ் கமிஷனர் வேறு யாரையோ பார்த்துப் பேசக் கிளம்பிவிட, விவேக், விஷ்ணு பின்தொடர பத்திரிகை நிருபர்களுக்கு



மத்தியில் சிக்கிக் கொண்டிருந்த மித்ராராயை நோக்கிப் போனான்.

மித்ராராய் விவேக்கைப் பார்த்துவிட்டு முகத்தில் இருந்த கலக்கத்தை மறைத்துக் கொண்டு சின்னதாய் புன்னகைத்தார்.

''நான் அவரைப் பார்த்து பேசிட்டு வந்துடறேன் ஸார்...''

''பேப்பர்ல பார்த்துட்டு வர்றீங்களா?''

''பயங்கரமான ஷாக் ந்யூஸ் ஸார்.''

''இப்படி ஒரு ந்யூஸை ஸ்ப்ரெட் அவுட் பண்றதுல யார்க்கு என்ன சந்தோஷமோ...? எப்படியோ ஒருத்தர் சந்தோஷமா இருக்க இன்னிக்கு நான் காரணமாயிருக்கேன்.''

''ஸார்... இந்த விஷயத்தை நீங்க அலட்சியமா எடுத்துகிட்ட மாதிரி போலீஸ் பீப்பிளான நாங்க அலட்சியமா எடுத்துக்க முடியாது. இந்த விபரீத ஆசைக்குப் பின்னாடி யார் யார் இருக்காங்கங்கிறதைக் கண்டுபிடிச்சு அவங்களை வெளிச்சத்துக்கு கொண்டு வரணும் சார்.''

மித்ராராய் புன்னகைத்தார். ''விவேக்! நான் இராணுவ சர்வீஸில் இருந்தபோதும் சரி.... ஓய்வு பெற்ற பின்பும் சரி... நான் யார்க்கும் எதிரியாய் இருந்தது இல்லை. எவர் மனசையும் புண்படுத்தியதும் இல்லை. கூடிய வரைக்கும் நான் எல்லோர்க்குமே ஒரு நல்ல நண்பனாகத்தான் இருந்திருக்கிறேன்...''

''ஸார்... கவலையே படாதீங்க... இப்படி ஒரு அநாகரிக காரியத்தை பண்ணின ஆசாமி இந்த உலகத்தோட எந்த மூலையில் இருந்தாலும் சரி கண்டுபிடிக்க நானாயிற்று. நான் இப்போ கேட்கிற கேள்விகளுக்கு மட்டும் கொஞ்சம் யோசனை பண்ணி பதில் சொல்லுங்க ஸார்...''

''நான் ஒரு திறந்த கதவு மாதிரி - என்கிட்ட எந்த ரகசியமும் இல்லை... நீங்க என்ன கேள்வி கேட்டாலும் பதில் சொல்ல நான் தயாரா யிருக்கேன்...''

''யார்ன்னு தெரியலை ஸார்...! மரண அறிவிப்பு விளம்பரம் கொடுக்க வந்த நபரை எதிரில் உட்கார வெச்சுகிட்டே செய்தி உண்மை யான்னு கேட்டேன். உண்மைதான்னு சொன்னாங்க... பட் நேத்து ராத்திரி என்கிட்ட பேசினது பி.டி.ஐ. பீப்பிள் கிடையாது. யாரோ லைன் க்ராஸ் பண்ணி பி.டி.ஐ. பீப்பிள் மாதிரி பேசியிருக்காங்க என்கிற உண்மை கொஞ்ச நேரத்துக்கு முந்திதான் எனக்குத் தெரிஞ்சுது...''

விவேக் விஷ்ணுவிடம் திரும்பினான்.

''விஷ்ணு...! கார்ல நாம வரும்போது டெலிபோன்ல பி.ஏ.மாதிரி பேசினதுகூட யாரோ லைனை க்ராஸ் பண்ணிப் பேசினதுதான்...''

''எஸ் ஸார்... இப்படி ஒரு பொய்யான மரண அறிவிப்பு வெளியிடறதால யார்க்கு என்ன லாபம்ன்னு தெரியலை.''

போலீஸ் கமிஷனர் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு குரலைத் தாழ்த்தினார்.

''மிஸ்டர் விவேக்...! இதை யாரோ விளையாட்டுக்காகப் பண்ணின மாதிரி எனக்குத் தெரியலை. இந்த விபரீத விளம்பரத்துக்குப் பின்னாடி ஏதோ விஷயம் இருக்கு.''

''மித்ராராய் இது விஷயமா என்ன சொல்றார் ஸார்...?''

''அவர் ரொம்பவும் அப்செட்டான நிலைமை யில் இருக்கார். எந்தக் கேள்வியைக் கேட்டாலும் சரியான பதில் இல்லை. அவர் இந்த அதிர்ச்சி யிலிருந்து விடுபட இன்னும் சில மணி நேரமாவது பிடிக்கும்... பத்திரிகை நிருபர்கள்தான் அவரை விடாம துளைச்சு எடுத்துட்டிருக்காங்க...''

''நான் அவரைப் பார்த்து பேசிட்டு வந்துடறேன் ஸார்...''

''ப்ளீஸ்...'' போலீஸ் கமிஷனர் வேறு யாரையோ பார்த்துப் பேசக் கிளம்பிவிட, விவேக், விஷ்ணு பின்தொடர பத்திரிகை நிருபர்களுக்கு



www.cleanindians.com

மத்தியில் சிக்கிக் கொண்டிருந்த மித்ராராயை நோக்கிப் போனான்.

மித்ராராய் விவேக்கைப் பார்த்துவிட்டு முகத்தில் இருந்த கலக்கத்தை மறைத்துக் கொண்டு சின்னதாய் புன்னகைத்தார்.

''நான் அவரைப் பார்த்து பேசிட்டு வந்துடறேன் ஸார்...''

''பேப்பர்ல பார்த்துட்டு வர்றீங்களா?''

''பயங்கரமான ஷாக் ந்யூஸ் ஸார்.''

''இப்படி ஒரு ந்யூஸை ஸ்ப்ரெட் அவுட் பண்றதுல யார்க்கு என்ன சந்தோஷமோ...? எப்படியோ ஒருத்தர் சந்தோஷமா இருக்க இன்னிக்கு நான் காரணமாயிருக்கேன்.''

''ஸார்... இந்த விஷயத்தை நீங்க அலட்சியமா எடுத்துகிட்ட மாதிரி போலீஸ் பீப்பிளான நாங்க அலட்சியமா எடுத்துக்க முடியாது. இந்த விபரீத ஆசைக்குப் பின்னாடி யார் யார் இருக்காங்கங் கிறதைக் கண்டுபிடிச்சு அவங்களை வெளிச்சத்துக்கு கொண்டு வரணும் சார்.''

மித்ராராய் புன்னகைத்தார். ''விவேக்! நான் இராணுவ சர்வீஸில் இருந்தபோதும் சரி.... ஓய்வு பெற்ற பின்பும் சரி... நான் யார்க்கும் எதிரியாய் இருந்தது இல்லை. எவர் மனசையும் புண் படுத்தியதும் இல்லை. கூடிய வரைக்கும் நான் எல்லோர்க்குமே ஒரு நல்ல நண்பனாகத்தான் இருந்திருக்கிறேன்...''

''ஸார்... கவலையே படாதீங்க... இப்படி ஒரு அநாகரிக காரியத்தை பண்ணின ஆசாமி இந்த உலகத்தோட எந்த மூலையில் இருந்தாலும் சரி கண்டுபிடிக்க நானாயிற்று. நான் இப்போ கேட்கிற கேள்விகளுக்கு மட்டும் கொஞ்சம் யோசனை பண்ணி பதில் சொல்லுங்க ஸார்...''

''நான் ஒரு திறந்த கதவு மாதிரி - என்கிட்ட எந்த ரகசியமும் இல்லை... நீங்க என்ன கேள்வி கேட்டாலும் பதில் சொல்ல நான் தயாரா யிருக்கேன்...''

''உங்க அறைக்குப் போயிடலாமா ஸார்?''

''வாங்க...''

மித்ராராய் தன்னுடைய அறையை நோக்கி மெதுவாய் நடக்க ஆரம்பித்துவிட, விவேக்கும் விஷ்ணுவும் பின்தொடர்ந்தார்கள். மாடிப் படிகளில் ஏறி அறைக்குள் நுழைந்தார்கள்.

இருட்டான அந்த அறையை ட்யூப்லைட் வெளிச்சத்துக்கு உட்படுத்திவிட்டு சோபாக்களில் உட்கார்ந்தார்கள்.

விவேக் விஷயத்துக்கு வந்தான். ''ஸார்! எந்த ஒரு வி.ஐ.பி.க்குமே எதிரிகள் இல்லாமே இருக்க மாட்டாங்க.... நம்ம முகத்துக்கு நேரா நண்பர்களாக இருக்கிறவங்க முதுகுக்குப் பின்னாடி எதிரிகளாக இருப்பாங்க... நண்பர்கள் போர்வையில் எதிரிகள் இருந்தா கொஞ்சம் கண்டுபிடிக்கறது கஷ்டம். அதுக்கு தனி ஸ்கேன் பார்வை வேணும்...''

மித்ராராய் புன்னகைத்தார்.

''ஸாரி விவேக்...! எனக்கு அந்த ஸ்கேன் பார்வை கிடையாது. நான் எல்லோரையும் நம்புகிற ஜாதி.''

விஷ்ணு இப்போது குறுக்கிட்டுக் கேட்டான். ''ஸார்... சமீப காலத்துல உங்களுக்கு யார் கூடவாவது கருத்து வேறுபாடு ஏற்பட்டது உண்டா...?''

''இல்லை...''

''நீங்கள் பதவியில் இருந்த காலத்தில் மற்ற அதிகாரிகளோடு ஏதாவது மனஸ்தாபங்கள்?''

''கிடையவே கிடையாது...''

''சரி... உங்க ஃபேமிலியில் ஏதாவது பிரச்சினைகள்...?''

''எனக்கு ஃபேமிலியே கிடையாது. மனைவி எப்பவோ இறந்துட்டா. இருக்கிற ஒரே மகனும் இப்போ ஊட்டியில். இந்த வீட்டில் ஒரு வேலைக்காரன். ஒரு சமையல்காரி. என்னோட



www.cleanindians.com

அன்றாட வேலைகளை கவனிக்க ஒரு பர்சனல் செக்ரட்டரி. மார்னிங் வாக்கிங் போவதில் இருந்து ராத்திரி படுக்கைக்குப் போகும்வரை எல்லாமே திட்டமிடப்பட்ட பணிகள். நான் யார் வம்புக்கும் போனதில்லை.''

மித்ராராய் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அறைக்கதவு மெல்ல தட்டப்பட்டது.

''எஸ்...'' மித்ராராய் திரும்பிப் பார்த்து சொல்ல, பர்சனல் செக்ரட்டரி கஸ்தூரிரங்கன் கார்ட்லஸ் டெலிபோனோடு உள்ளே வந்தார்.

''என்ன கஸ்தூரி...?''

''ஸார்... உங்க மகன் ஊட்டியிலிருந்து பேசறார். ஹி ஈஸ் ஆன் த லைன்...''

மித்ராராய் ஆர்வமாய் கார்ட்லஸ் போனை வாங்கிக் காதுக்குப் பொருத்தினார்.

மகனின் பெயரைச் சொல்லி உரக்கக் குரல் கொடுத்தார்.

''ஹலோ யோகேஷ்...''

மறுமுனையில் ஒரு குரல் சிரித்தது.

''ஸாரி மாஜி ஏர்மார்ஷல்...! பேசறது உங்க மகன் கிடையாது. 'மகன்'னு சொன்னாத்தானே உங்க பர்சனல் செக்ரட்டரி போனை உங்ககிட்ட கொடுப்பார்.''

''சரி... யார் நீ...?''

''எமன். உங்களுக்காக ஸ்பெஷலா மலர்வளையம் கட்டிக் கொண்டிருக்கிற எமன்...! இன்னிக்கு பேப்பர்ல வந்திருக்கிற உங்க மரண விளம்பர அறிவிப்பு நாளைக்கு நிஜமாகப் போகிறது. வீணாக போலீஸ் ஆபீஸர்ஸ்கிட்ட கன்சல்ட் பண்ணி உங்க நேரத்தையும் போலீஸோட நேரத்தையும் வேஸ்ட் பண்ணிட்டு இருக்காதீங்க. நாளைக்கு சாயந்தரம் இராணுவ மரியாதையோடு உங்க உடல் ஐ.ஜி.ஆபீஸுக்குப் பின்பக்கம் இருக்கிற மயானத்தில் அடக்கமோ தகனமோ செய்யப்படும்...''

மித்ராராய் முகம் வெளிறி வியர்த்துக் கொண்டிருக்கும்போதே மறுமுனையில் ரிஸீவர் வைக்கப்பட்டது.

விவேக் கேட்டான்.

''போன்ல பேசினது யார் ஸார்...? ஏன் ஒரு மாதிரியாயிட்டீங்க...?''

மித்ராராய் விபரம் சொல்ல விவேக் தன் கண்களில் அதிர்ச்சியைக் காட்டி நிமிர்ந்தான்.

''ஸார்... உங்க எதிரிக்கு உங்க மேல் நிறைய கோபம் இருக்கப் போய்த்தான் பேப்பரில் மரண விளம்பரம் வந்திருக்கு. இப்போ மலர்வளைய போன்காலும் வந்திருக்கு. உங்க மேல ஒருத்தர்க்கு இவ்வளவு கோபம் இருக்கிற பட்சத்தில் அந்த நபர் யார்ங்கிற உண்மை உங்களுக்குக் கண்டிப்பா தெரிஞ்சிருக்கும். கொஞ்சம் சிரமம் எடுத்துகிட்டு யோசனை பண்ணிப் பாருங்க ஸார். ஆளை மடக்கிடலாம்...''

மித்ராராய் வியர்த்து வழியும் முகத்தை துடைக்கக் கூட தோன்றாமல் யோசிக்க ஆரம்பித்தார்.



## 3

இரவு மணி 11.35.

பல்லாவரத்தைத் தாண்டியிருந்த இராணுவ பேரக்ஸுக்குள் விவேக்கின் மாருதி 1000 விரைந்து கொண்டிருந்தது. பக்கத்தில் விஷ்ணு.

கார் நான்கைந்து இடங்களில் செக்யூரிடிகளால் மறிக்கப்பட்டு விவேக் அடையாள அட்டையைக் காட்டியதும் வழிகாட்டப்பட்டு பறந்தது.

ஐந்து நிமிஷப் பயணம்.



இராணுவ பேரக்ஸின் முக்கிய கேந்திரமான 'ஏவியேஷன் ஸ்பை விங்' கட்டிடம் லேசான மஞ்சள் வெளிச்சத்தோடு வந்தது. காக்கி பெயிண்ட் நிறத்தில் நான்கைந்து ஜீப்கள் தெரிய ரைஃபிள் ஏந்திய இரண்டு செக்யூரிடிகள் பூட்ஸ் சத்தங்களோடு ஓடி வந்தார்கள். கார்க்கு இரண்டு பக்கமும் வந்து குனிந்தார்கள்.

காரை விட்டு விவேக், விஷ்ணு கீழே இறங்கினார்கள்.

விவேக் ஆங்கிலத்தில் சொன்னான்.

''உளவுத்துறை தலைமை அதிகாரியைப் பார்க்க வருவதாக சொல்லியிருந்தோம்...''

''நீங்கள் மிஸ்டர் விவேக் அண்ட் மிஸ்டர் விஷ்ணு?''

''ஆமாம்...''

''வாருங்கள்... உங்களுக்காகத்தான் சீஃப் ஆபீஸர் ஆஃப் ஸ்பை விங் வீட்டுக்குக்கூட போகாமல் காத்துக் கொண்டு இருக்கிறார்... ப்ளீஸ் கம் திஸ் வே...''

லேசான வெளிச்சம் ஊடுருவியிருந்த இருட்டில் இருவரையும் கூட்டிக்கொண்டு போனார்கள்.

பாதுகாக்கப்பட்ட பகுதி அது. கண்ணாடிக் கதவுகள் அடைகாத்த அறைகளுக்குள் கம்ப்யூட்டர்களும், டெலி பிரிண்டர்களும் உயிரோடு இருந்தன. மானிட்டர்களில் ஏதேதோ செய்திகள் வரிவரியாய் ஓடிக் கொண்டிருக்க இரண்டு அதிகாரிகள் ஹெட்போன் தரித்த தலைகளோடு அறைக்குள் உலவியபடி தெரிந்தார்கள்.

ஒரு முழு நிமிஷ நடைக்குப் பின் 'ஸ்பை விங்' என்று என்க்ரேவ் செய்யப்பட்ட எழுத்துக்கள் சுவரில் அப்பியிருக்க கண்ணாடிக் கதவோடு அந்த அறை வந்தது.

உளவுத்துறையின் தலைமை அதிகாரி அதுல்வால்ச்சாந்த் தன் பெரிய தொப்பையைத்



www.cleanindians.com

தூக்கிக் கொண்டு அறை வாசலிலேயே காத்திருந்து உள்ளே கூட்டிப் போனார். எல்லோரும் இருக்கைகளில் சாய்ந்ததும் கேட்டார்.

''மிஸ்டர் விவேக்...! மித்ராராய் விவகாரத்தில் எங்கள் உளவுத்துறையின் உதவி எந்த விதத்தில் தேவைப்படுகிறது...?''

விவேக் பேச ஆரம்பித்தான். ''மிஸ்டர் அதுல்வால்ச்சாந்த்...! நம் நாட்டில் இப்போது வன்முறைகள் பெருகி வருவதற்குக் காரணம் அந்நிய நாட்டு சதிகள் என்பது பட்டவர்த்தனமான உண்மை. இந்தியாவில் உள்ள முக்கிய அரசியல் தலைவர்களை தீர்த்துக் கட்டுவதற்காக நூற்றுக்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் நாட்டின் முக்கிய நகரங்களில் ஊடுருவி இருப்பதாக அமெரிக்க உளவு நிறுவனம் சொல்லியுள்ளது. இது குறித்து நம் இந்திய உளவுத்துறை என்ன சொல்கிறது எனறு தெரிந்து கொள்ள விரும்பு கிறேன்.''

''அமெரிக்க உளவு நிறுவனம் சொல்லி யிருப்பது உண்மைதான்... மிஸ்டர் விவேக்.''

''அந்த தீவிரவாதிகள் ஹிட் லிஸ்ட் ஏதாவது கொடுத்துள்ளார்களா...?''

''ஆமாம்... அந்த ஹிட் லிஸ்ட்டில் மொத்தம் எழுபத்தெட்டுப் பேரை குறிப்பிட்டுள்ளார்கள். இந் 78 பேரில் அறுபத்தியாறு பேர் அரசியல் வாதிகள். தலைவர்கள், மீதி பனிரெண்டு பேரில் நான்கு பேர் ஆன்மிகவாதிகள். ஆறு பேர் தொழிலதிபர்கள். மீதி இரண்டு பேரை திரையுலகைச் சேர்ந்தவர்கள்.''

''அந்த ஹிட் லிஸ்ட்டில் சீஃப் ஏர் மார்ஷல் மித்ராராய் பெயர் இல்லையா...?''

''இல்லை...''

''அப்படியானால், மித்ராராயை கொலை செய்யப் போவதாக சொல்லியிருப்பது தீவிர வாதிகள் கிடையாது என்பதை நம்பிக் கொள்ளலாமா...?''



அதுல்வால்ச்சாந்த் தலையாட்டினார். ''எக்ஸ் சீஃப் மார்ஷல் மித்ராராய்க்கு விடப்பட்டுள்ள கொலை மிரட்டல் நிச்சயமாய் தீவிரவாதி களிடமிருந்து வந்திருக்க முடியாது. ஏனென்றால் தீவிரவாதிகள் இப்படி சாவகாசமாக விளையாடிக் கொண்டு இருக்க மாட்டார்கள். எதிர்பாராத ஒரு நேரத்தில் காரியத்தை முடித்துவிட்டு போய்க்கொண்டே இருப்பார்கள். மேலும்...''

அதுல் வால்ச்சாந்த் பேச்சை வெட்டியது டெலிபோனின் கத்தல். அவர் ''எக்ஸ்க்யூஸ்மீ'' சொல்லி ரிஸீவரை எடுத்து ''ஹலோ'' என்றார்.

''....''

''எஸ்... இது ஸ்பை விங்க்தான். நான் சீஃப் ஆபீஸர் அதுல் வால்ச்சாந்த்தான் பேசுகிறேன்.''

''.....''

''எஸ்... எஸ்... மிஸ்டர் விவேக்கும் மிஸ்டர் விஷ்ணுவும் இங்கேதான் இருக்கிறார்கள். எனக்கு முன்பு தான் உட்கார்ந்திருக்கிறார்கள்.''

''....''

''என்னது...?''

அதிர்ந்து போய் எழுந்தார் அதுல் வால்ச்சாந்த். அவர் கையில் இருந்த ரிஸீவர் ஒரு மெல்லிய நடுக்கத்துக்கு உட்பட்டது.

''எ...எ...எப்படி...?''

''....''

''மை குட்னஸ்'' கண்கள் அதிர்ச்சியில் உறைந்து போக ரிஸீவரை சரிவர வைக்கக்கூட தோன்றாமல் அப்படியே தளர்ந்து போய் உட்கார்ந்தார் அதுல் வால்ச்சாந்த்.

விவேக் அவர் தோளைப் பற்றி மெல்ல உசுப்பினான். ''ஸார்... போனில் ஏதாவது மோசமான செய்தியா...?''

''எ...எ...எஸ்...''

''என்ன...?''



www.chennaieanindians.com

"மித்ராராய் கொலை செய்யப்பட்டு விட்டார். சத்தம் இல்லாத டைனமைட் வெடித்து மித்ராராயும் செக்யூரிடி காப்ஸ் ஆறு பேரும் ஸ்தலத்திலேயே மரணம்...'

"சத்தம் இல்லாத டைனமைட்டா...?"

"டெலிபோனில் வந்த செய்தி அப்படித்தான் சொல்கிறது. சம்பவம் நடந்த இடத்துக்குப் போனால் தான் விபரம் என்ன என்பது நமக்குத் தெரியும்..."

விவேக், விஷ்ணு, அதுல் வால்ச்சாந்த் மூன்று பேரும் உடம்பில் தீப்பற்றிக் கொண்ட அவசரத்தோடும் பதட்டத்தோடும் எழுந்தார்கள்.



## 4

அந்த நள்ளிரவில் மித்ராராயின் பங்களா சின்னாபின்னமாக சிதறியிருக்க எரிந்து கொண்டிருந்த நெருப்பை தீயணைப்பு வண்டிகள் சூழ்ந்து நின்று நீரைப் பீய்ச்சி அணைத்துக் கொண்டிருந்தன.

போலீஸ் கமிஷனர் ஸ்தலத்தில் நின்று கட்டளைகளைப் பிறப்பித்தக் கொண்டிருக்க ஒரு போலீஸ் ட்ரூப் அந்த கட்டளைகளுக்கு அடிபணிந்து இயங்கியது.

காரை நிறுத்திவிட்டு விவேக், விஷ்ணு, அதுல்வால்ச்சாந்த் மூன்று பேரும் வேகவேகமாய் ஓடி வந்து போலீஸ் கமிஷனரைச் சூழ்ந்தார்கள்.

விவேக் பதட்டக் குரலில் கேட்டான்.

"ஸார்... இவ்வளவு செக்யூரிடி இருக்கும் போது எப்படி இந்த சம்பவம் நடந்தது...?"

"இட்ஸ் ஏ மிர்ராக்கிள் விவேக்...! நான் வீட்டுக்கு வெளியே ரோட்டில் நின்று கொண்டு மித்ராராயின் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பற்றி



பேசிக் கொண்டிருக்கும்போதே ஏதோ ஒரு சினிமாப்படக் காட்சியைப் பார்ப்பதுபோல் மித்ராராயின் பங்களா சத்தமில்லாமல் வெடித்துச் சிதறியது."

"நீங்கள் சொல்வது புரியவில்லை ஸார். சத்தம் இல்லாமல் வெடித்தது என்றால் எப்படி...?"

"விவேக்... நான் சொல்வதை உங்களால் மட்டும் அல்ல... யாராலேயும் நம்ப முடியாதுதான். பட் நடந்த சம்பவம் என் வாழ்நாளிலேயே பார்க்காத ஒன்று. இது ஒரு வெடிகுண்டு சம்பவம்தான். ஆனால் சைலன்ஸர் துப்பாக்கியில் தோட்டா வெடிக்கும்போது எப்படி சத்தம் வராதோ அதேபோல் மித்ராராயின் வீட்டுக்குள் வெடி குண்டு வெடித்தபோதும் சத்தம் கேட்கவில்லை. வீடு இடிந்து விழுகிற சத்தமும் கண்ணாடி ஜன்னல்கள் உடைகிற சத்தமும் மட்டுமே கேட்டது."

"ஸார்... நாம் தான் பாம் டிடெக்டரை வைத்து மித்ராராய் பங்களாவின் ஒவ்வொரு சதுர அடியையும் அலசி டைனமைட் இருக்கிறதா வென்று பார்த்தோமே...? அந்த சமயத்தில் டைனமைட் எதுவும் கிடைக்கவில்லையே."

"யூ ஆர் கரெக்ட் விவேக். பாம் ஸ்க்வாட் காலை பத்து மணியிலிருந்து சாயந்தரம் ஆறு மணி வரைக்கும் கிட்டத்தட்ட நான்கு தடவை பங்களாவையே தலைகீழாய் புரட்டி போட்டு சோதனை செய்து பார்த்தார்கள். பங்களாவில் வெடிகுண்டு இருப்பதற்கு சாத்தியமே கிடையாது என்று சொல்லி க்ளீயரன்ஸ் சர்டிபிகேட் கொடுத்தார்கள். ஆனால் இருபது நிமிஷத்துக்கு முன்னால் அதாவது சரியாய் பனிரெண்டு மணிக்கு ஒரு டைனமைட் பங்களா வுக்குள்ளிருந்து சத்தம் இல்லாமல் வெடித்து மித்ராராயையும் செக்யூரிடி பணியில் ஈடு பட்டிருந்த காப்ஸையும் பலி வாங்கிவிட்டது."

விவேக் கேட்டான்.

"மித்ராராயின் உடல் எங்கே...?"

''கம் வித் மீ...''

கமிஷனர் எரிந்து கொண்டிருந்த பங்களாவை சுற்றிக் கொண்டு பக்கவாட்டுப் பகுதிக்குப் போனார். போலீஸ் ஜீப் விளக்குகளின் உதவியால் அந்த நிலப்பகுதி வெளிச்சமாய் தெரிய கரிக்கட்டைகளாய் ஏழு பேரின் உடல்களும் கிடத்தப்பட்டு இருந்தன. இரண்டு உடல்களுக்கு கைகால்களே இல்லை. மூன்று பேர்களின் முகங்கள் பாதி பிய்த்தெடுக்கப்பட்டு ரத்தக் களறியாய் தெரிந்தன.

''ஹி ஈஸ் மித்ராராய்...'' கமிஷனர் சொல்லிக் கொண்டே ஒரு உடம்புக்கு முன்பாய் வந்து நின்றார்.

விவேக் பார்த்தான்.

அந்த முன்னாள் சீஃப் ஏர் மார்ஷல் உடம்பு பூராவும் சிதைந்து விழிகள் பிதுங்கி மகா கோரமாய் கிடந்தார்.

'காலையில் பார்த்த மித்ராராயா இவர்?'

விவேக் பார்க்கப் பிடிக்காமல் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

''ஸார்...! திஸ் ஈஸ் ஹாரிபிள்...''

''சர்ட்டன்லி...'' கமிஷனர் ஆமோதிப்பாய் தலையசைத்துக் கொண்டிருக்கும்போதே சைரன் சத்தத்தோட போலீஸ் பேட்ரோல் கார் ஒன்று தலையில் நீல நிற லாம்ப் சுழல வேகமாய் வந்து நின்றது. கமிஷனர் திரும்பிப் பார்த்துவிட்டு உடம்பில் பதட்டத்தைத் தடவிக் கொண்டார்.

''விவேக்! டி.ஜி.பி. வந்துவிட்டார். அந்த அசம்பாவிதம் நடந்ததில் ஹி ஈஸ் இன் அன் ஹேப்பி மூட். அவர் கேட்கப் போகும் கேள்விகளுக்கு பதில் சொல்லி அவரை நீங்கள்தான் கன்வின்ஸ் செய்ய வேண்டும்.''

கமிஷனர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே டி.ஜி.பி. காரை விட்டு இறங்கி வந்தார். முகத்தில் கோபமும் கவலையும் ஃபிப்டி ஃபிப்டி



பார்ட்னர்ஷிப் எடுத்துக் கொண்டு கலவையாய் தெரிந்தன.

விவேக் அவரை எதிர்கொண்டு சல்யூட் வைத்து தளர்ந்தான்.

''மிஸ்டர் விவேக்... மித்ராராய் விவகாரத்தில் நீங்கள் ஈடுபட்டிருந்துமா இப்படியொரு சம்பவம் நடக்க விட்டீர்கள்...?''

''ஸார்... இது எதிர்பாராத விதமாக நடந்த ஒன்று. போலீஸ் இயந்திரம் இன்வெஸ்டிகேட் செய்து கொண்டிருக்கும்போதே...'

''நோ மிஸ்டர் விவேக்... நடந்துள்ள இந்த சம்பவம் எதிர்பாராத விதமாக நடந்தது என்று நீங்கள் சொல்வதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. கொலையாளி நேற்றைக்கு இரவே பேப்பரில் மித்ராராயின் மரண விளம்பரத்தைக் கொடுத்து காலையில் நீங்கள் இருக்கும்போதே போன் பண்ணி மித்ராராய்க்கு மலர்வளையம் தயாராகிக் கொண்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறான். கொலையாளி சொல்லிச் சொல்லியே உங்களையெல்லாம் சாட்சிகளாக வைத்துக் கொண்டு மித்ராராயை தீர்த்துக் கட்டியிருக்கிறான். திட்டம் போட்டு நிதானமாக செய்துள்ள இந்தக் கொலையை எதிர்பாராத விதமாய் நடந்த ஒன்று என்று எப்படிச் சொல்கிறீர்கள்...?''

விவேக் ஒரு பெருமூச்சோடு டி.ஜி.பி.யை ஏறிட்டான்.

''ஸார்... உங்களோடு நான் ஆர்க்யூ செய்வதாக நீங்கள் நினைக்கக் கூடாது. பெரிய பதவிகளில் இருந்துவிட்டு ரிடையர்ட்டானவர்களுக்கு வரும் கொலை மிரட்டல்கள் இது வரைக்கும் வெற்றுவேட்டு மிரட்டல்களாகவே இருந்து வந்துள்ளன. மித்ராராய்க்கு வந்த மிரட்டல்களும் அந்த வகையாகத்தான் இருக்கும் என்று நினைத்துவிட்டோம். நாங்கள் அப்படி நினைத்தாலும் கூட மித்ராராய்க்கு வேண்டிய



www.cleanindians.com

பாதுகாப்பு ஏற்பாடுகளை சிறப்பாகவே செய்திருந்தோம். அதையும் மீறி...''

டி.ஜி.பி. கையமர்த்தினார். ''மிஸ்டர் விவேக்...! ஒரு விஷயத்தை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். கொலையுண்டவர் சாதாரண நபர் கிடையாது. இராணுவத்தில் உயர் பதவி வகித்தவர். அவர்க்கு ஒரு கொலை மிரட்டல் வருகிறது என்றால் அது சாதாரண விஷய மில்லை. இந்தக் கொலையை நடக்கவிட்டதின் மூலம் நம் போலீஸ் துறைக்கு நம் கையாலேயே ஒரு கறுப்பு பொட்டு வைத்துவிட்டோம்... இந்த விஷயம் டெல்லிக்கு போய் இராணுவ அமைச்சரிடமிருந்து ஃபேக்ஸ் மூலமாக ஒரு கண்டனக் கடிதமும் வந்துவிட்டது.''

விவேக் ஏதும் பேசாமல் முகம் இறுகி நின்றிருக்க, டி.ஜி.பி. பக்கத்தில் வந்து அவன் தோள் மேல் கை வைத்தார்.

''இட்ஸ் ஆல்ரைட்...! நடந்துவிட்ட ஒரு மோசமான சம்பவத்துக்காக நாம் ஒருவரை யொருவர் குற்றம் சாட்டிக் கொண்டிருப்பதில் பிரயோஜனம் இல்லை. கொலையாளி யார் என்பதை உடனடியாக கண்டுபிடித்து அவனை வெளிச்சம் போட்டு காட்டுவதுதான் இப்போது நமக்கு முன்பாக உள்ள ஒரு முக்கிய பணி. வெடித்தது சைலன்ஸர் டைனமைட் என்று கேள்விப்பட்டேன். உண்மையா...?''

கமிஷனர் குறுக்கிட்டு சொன்னார்.

''உண்மைதான் ஸார். குண்டுவெடிப்பு நிகழ்ந்தபோது நானே பார்த்தேன். சத்தம் இல்லாத பிரளயம் அது...''

''மித்ராராயின் பங்களாவை டிடெக்டர் வைத்து டைனமைட் இருக்கிறதா இல்லையா என்று சோதனை செய்த பாம் ஸ்க்வாட் சீஃப் யார்...?''

''மிஸ்டர் விநாயக்...''

''இப்போது ஸ்பாட்டில் இருக்கிறாரா...?''



''இருக்கிறார்.''

''ப்ளீஸ் கால் ஹிம்.''

கமிஷனர் ஒரு கான்ஸ்டபிளை அழைத்து விபரம் சொல்லியனுப்ப -

பாம் ஸ்க்வாட் சீஃப் விநாயக் வேகவேகமாய் வந்து டி.ஜி.பி.க்கு முன்பாய் ஒரு சல்யூட்டோடு நின்றார்.

''ஸார்...''

''மிஸ்டர் விநாயக்... இன்றைக்கு காலை யிலிருந்து மித்ராராயின் பங்களாவை டிடெக்டர் வைத்து எத்தனை தடவை சோதனை போட்டீர்கள்...?''

''நான்கு தடவை ஸார்.''

''டைனமைட் எதுவும் கிடைக்கவில்லை?''

''இல்லை ஸார்...''

''இப்போது வெடித்துள்ள டைனமைட் எந்த வகையானது என்பதை கண்டுபிடித்துவிட்டீர் களா?''

''கண்டுபிடித்துவிட்டோம் ஸார்.''

''அது எது மாதிரியான டைனமைட்?''

''மேட் இன் இட்டாலி. ப்ளாஸ்டிக் டைப் வெடிகுண்டு. இருபது கிலோ எடை கொண்டது.''

''இருபது கிலோ எடை கொண்ட ஒரு டைனமைட் மித்ராராயின் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததை உங்கள் பாம் ஸ்க்வாட் ஏன் கண்டுபிடிக்கவில்லை?''

விநாயக் எச்சில் விழுங்கினார்.

''அதுதான் ஸார் புரியவில்லை. பாம் ஸ்க்வாட் கண்களில் விளக்கெண்ணெயை ஊற்றிக் கொண்டு பார்க்காத குறையாக பங்களாவின் ஒவ்வொரு சதுர அடியையும் துருவி துருவி பார்த்துவிட்டார்கள். டிடெக்டர்க்கு எதுவும் கிடைக்கவில்லை.''



www.cleanindians.com

''சரி... கடைசியாக எத்தனை மணிக்கு மித்ராராயின் பங்களாவை சோதனை போட்டீர்கள்?''

''ராத்திரி பத்து மணிக்கு...''

''டைனமைட் வெடித்த நேரம் சரியாய் பனிரெண்டு மணி. ஸோ இடைப்பட்ட அந்த இரண்டு மணி நேரத்துக்குள்ளாகத்தான் டைனமைட் மித்ராராயின் பங்களாவுக்குள் போயிருக்க வேண்டும்.''

''அது சாத்தியமில்லை ஸார்.''

''எது...?''

''இருபது கிலோ எடையுள்ள ஒரு டைனமைட் போலீஸாரின் கட்டுக்காவலை மீறி மித்ராராயின் பங்களாவுக்குள் வர.''

''உள்ளே வராமல் எப்படி அந்த டைனமைட் வெடித்தது...?''

விவேக் இப்போது குறுக்கிட்டான். ''ஸார், மிஸ்டர் விநாயக் சொல்வது சரிதான். மித்ராராயின் உயிர்க்கு எந்த ஆபத்தும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக நாற்பதுக்கும் மேற்பட்ட செக்யூரிட்டி காப்ஸை பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தியிருந்தோம். இது த்ரிலேயர் ப்ரொடக்‌ஷன். முதல் லேயரில் பதினெட்டு பேர். அதாவது காம்பௌண்ட் கேட்டுக்குப் பக்கத்தில். இரண்டாவது லேயரில் பதினெட்டு பேர். இவர்கள் போர்டிகோவிலும் வரவேற்பறையிலும் பரவியிருந்தார்கள். மூன்றாவது லேயரில் ஆறு பேர். இவர்கள் மித்ராராயின் படுக்கையறைக்கு வெளியே காவலுக்கு இருந்தவர்கள். இந்த வெடி விபத்தில் மித்ராராயுடன் இறந்து போனது அந்த ஆறு பேர்கள்தான். உள்ளேயும் வெளியேயும் காவலுக்கு இத்தனை பேர் இருந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லோரையும் ஏமாற்றி விட்டு ஒருவர் இருபது கிலோ டைனமைட்டோடு எப்படி உள்ளே வந்திருக்க முடியும்...?''



டி.ஜி.பி.தோள்களைக் குலுக்கிக் கொண்டார். ''மிஸ்டர் விவேக்...! நீங்கள் சொன்ன காவல் கட்டமைப்பை பார்க்கும்போது ஒரு குண்டூசியைக் கூட யாரும் உள்ளே கொண்டு வர முடியாதுதான். ஆனாலும் இருபது கிலோ டைனமைட் பங்களாவுக்குள்ளே எல்லோருடைய கண்களிலும் மண்ணைத் தூவிவிட்டு உள்ளே வந்திருக்கிறது. அது வெடித்து மித்ராராயோடு சேர்த்து ஏழு பேரை பலி வாங்கியிருக்கிறது. பாம் ஸ்க்வாடை வைத்து சோதனை போட்டீர்கள், சரி. நாற்பதுக்கும் மேற்பட்ட போலீஸ் காப்ஸை வைத்து மித்ராராய்க்கு செக்யூரிடி கொடுத்தீர்கள் சரி. ஆனால் ரிசல்ட் என்ன...? எதிரியிடம் நாம் தோற்றுப் போய்விட்டோம்... இந்த தோல்வியின் கனம் நம்மைப் போட்டு அழுத்துவதற்குள் நாம் வெற்றி பெற்றாக வேண்டும். இந்த ஏழு பேரின் மரணங்களுக்கு காரணமான நபர் யாராக இருந்தாலும் சரி, அடுத்த இருபத்திநாலு மணி நேரத்துக்குள் பிடிபட்டாக வேண்டும்.''

டி.ஜி.பி. படபடவென்று பொரிந்துவிட்ட விவேக்கிடம் திரும்பினார்.

''மிஸ்டர் விவேக், இந்தக் கேஸை நீங்கள் எப்படி டீல் செய்யப் போகிறீர்கள்...? இதன் முடிவைக் கண்டுபிடிக்க ஆரம்ப நுனியை எங்கிருந்து தொடப் போகிறீர்கள்...?''

''ஸார்! டைனமைட் இந்த வீட்டுக்குள் எப்படி வந்தது என்று கண்டுபிடிப்பதுதான் என்னுடைய முதல் வேலை. எரிந்து சிதிலமாகிவிட்ட இந்த வீடுதான் எனக்கு ஆரம்ப நுனி.''

''விஷ் யூ ஆல் த பெஸ்ட். எனக்கு நாளை இரவுக்குள் ஒரு நல்ல பதிலைக் கொடுங்கள்.''

''எஸ் ஸார்...''

டி.ஜி.பி. இறந்த உடல்களைப் பார்த்துவிட்டு காரை நோக்கிப் போக, விவேக் பாம் ஸ்க்வாட் சீஃப் விநாயக்கை ஏறிட்டான்.

''விநாயக்...! இந்த பங்களாவில் டைனமைட் வைக்கப்பட்டிருந்தால் அது எந்த அறையில்

வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?''

''நிச்சயமாய் மித்ராராயின் படுக்கை யறையில்தான்...''

''எதை வைத்து அப்படி சொல்கிறீர்கள்?''

''மித்ராராயும் சரி, அவருடைய படுக்கை யறைக்கு வெளியே இருந்த ஆறு செக்யூரிடி காப்ஸும் சரி உடம்புகள் மிகவும் மோசமான நிலைமையில் சிதிலமாகி இறந்து போயிருக் கிறார்கள். டைனமைட் வேறு ஏதாவது ஒரு அறையில் வைக்கப்பட்டு அது வெடித்திருந்தால், ஒருவேளை அவர்கள் காயங்களோடு உயிர் பிழைத்து இருக்கலாம்...''

''வெடித்து சிதறிய டைனமைட் பாகங்களை சேகரித்துவிட்டீர்களா?''

''ஓரளவுக்குத்தான் சேகரிக்க முடிந்தது. வீட்டில் இடிபாடுகளை இன்னமும் அகற்றி பார்க்க வேண்டியிருக்கிறது. ஆனால் இந்த இரவு நேரத்தில் அது சாத்தியமில்லை. நாளைக்கு காலையில்தான் அந்தப் பணியை மேற்கொள்ள முடியும்.''

''நோ மிஸ்டர் விநாயக்...! வெடித்து சிதறிய டைனமைட் பகுதிகளை தேடி சேகரிக்கும் பணியை இன்றைக்கு இரவிலேயே சக்தி வாய்ந்த ஒளிவிளக்குகளின் உதவியால் செய்து முடிக்க வேண்டும். வெடித்த டைனமைட் பற்றிய முழு விபரங்கள் கிடைத்தால்தான் எதிரி யாராக இருக்கக்கூடும் என்பது அவுட்லைனாக தெரியும்...''

www.cleanindians.com

''யூ மே பி கரெக்ட் மிஸ்டர் விவேக். அதற்கான ஏற்பாடுகளை இப்போதே செய்துவிடுகிறேன்.''

விநாயக் சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டு வேகமாக நகர்ந்தார். அதுல் வால்ச்சாந்தும் அவருடன் கிளம்பிப் போய்விட, விஷ்ணு தன் நெற்றியைத் தேய்த்துக் கொண்டு விவேக்கை இறுக்கமான முகத்தோடு பார்த்தான்.



''ஸார்... எனக்கென்னமோ நம்பிக்கை இல்லை...''

''எதிலே...?''

''வெடிச்ச வெடிகுண்டு சிதறல்களை சேகரம் பண்ணி அது மூலமா கொலையாளியை கண்டுபிடிக்க முடியும்ன்னு நீங்க விநாயக்கிட்ட சொன்னதுல...''

''எனக்கும் அதுல நம்பிக்கை கிடையாது விஷ்ணு...'' - விவேக் குரலைத் தாழ்த்திக் கொண்டு தாழ்ந்த ஸ்தாயியில் சொல்ல விஷ்ணு திடுக்கிட்டான்.

''பின்னே எதுக்காக ஸார் அப்படி சொன்னீங்க?''

''விஷ்ணு! இந்த வீட்டோட இடிபாடுகளில் விநாயக்கோட 'பாம் ஸ்க்வாட்' வெடிகுண்டு சிதறல்களை தேடிகிட்டு இருக்கும்போதே நாம இந்த இடிபாடுகளில் வேற ஒண்ணை தேடப் போறோம்...''

''எதை ஸார்...?''

''வா... சொல்றேன்...''

விவேக் விஷ்ணுவை ஒதுக்குப்புறமாய் கூட்டிக்கொண்டு போய் மெதுவான குரலில் சொல்ல ஆரம்பிக்க -

விஷ்ணு வியப்பின் விளிம்புக்கு கொஞ்சம் கொஞ்சமாய் போய் பின் திகைத்த மாதிரி விவேக்கைப் பார்த்தான்.

''ஸார்... இது உண்மையா?''

''உண்மையா இல்லையான்னு அந்தப் பொருள்கள் நம்ம கைக்கு கிடைச்ச பின்னாடிதான் தெரியும். இப்போதைக்கு இந்த விஷயத்தை வெளியே மூச்சு காட்டக்கூடாது.''

விஷ்ணு இன்னமும் பிரமிப்பிலிருந்து விடுபடாமல் விவேக்கையே பார்த்தபடி தன்னிச்சையாய் தலையை ஆட்டினான்.



# 5

விடியற்காலை மூன்று மணி.

மித்ராராயின் இடிந்து கிடந்த பங்களாவைச் சுற்றிலும் நெருக்கமாய் ப்ளட் லைட்டுகள் பொருத்தப்பட்டு பட்டப்பகல் போல் காட்சி யளித்துக் கொண்டிருக்க -

பாம் ஸ்க்வாட் சீஃப் தலைமையில் இடிபாடுகளுக்கு இடையில் தேடுதல் வேட்டை நடந்து கொண்டிருந்தது.

விவேக்கும் விஷ்ணுவும் திசைக்கு ஒருவராய் பிரிந்து பார்வைகளை உன்னிப்பாய் போட்டபடி இடிபாடுகளுக்கு மத்தியில் தேட ஆரம்பித்தார்கள்.

நள்ளிரவு நேரம் கரைந்து காலம் மெல்ல மெல்ல விடியலை நோக்கிப் போயிற்று.

கிழக்கில் கதிரவனின் முதல் காரட் நிற கதிர் உற்பத்தியானபோது பாம் ஸ்க்வாட் சீஃப் விவேக்கை நோக்கி வந்தார்.

''மிஸ்டர் விவேக்...! கிட்டத்தட்ட மூன்று மணி நேரம் இந்த இடிபாடுகளுக்கு நடுவில் தேடியதில் மேலும் சில வெடிகுண்டு சிதறல்கள் கிடைத்துள்ளது. உங்கள் பார்வைக்கு ஏதாவது தட்டுப்பட்டதா?''

''இல்லை...''

''இந்த வெடிகுண்டு சிதறல்களை எடுத்துக் கொண்டு நான் கிளம்புகிறேன். காலை பத்து மணிக்கு ஃபாரன்ஸிக் அலுவலகத்தில் சந்திப்போம்...'' ஸ்க்வாட் சீஃப் சொல்ல விவேக் புன்னகைத்தான்.

''புதிய உண்மைகளோடு சந்திப்போம்...''

விவேக் அவரை கைகுலுக்கி அனுப்பிவிட்டு திரும்ப விஷ்ணு களைத்த முகமாய் எதிர்பட்டான்.



''ஸார்... பெண்டு கழண்டு போச்சு. நீங்க சொன்ன டைப்ல எந்த ஒரு பொருளும் கிடைக்கலை.''

''சரி... கவலையை விடு. உனக்கு கிடைச்சா என்ன... எனக்கு கிடைச்சா என்ன..?''

விஷ்ணு விழிகளை வியப்பில் விரித்தான்.

''ஸார்... உங்க கைக்கு அந்தப் பொருள்கள் கிடைச்சுதா...?''

''ம்...''

''எங்கே... நான் பார்க்கலாமா ஸார்...''

''வா... கார்க்கு போயிடுவோம்'' விவேக் தன் காரை நோக்கிப் போக விஷ்ணு பின் தொடர்ந்தான்.

மாருதி கார்க்குள் புகுந்தார்கள்.

''விஷ்ணு...''

''ஸார்...''

''இப்ப நமக்கு கிடைச்சிருக்கிற தடயம் மிக மிக முக்கியமான ஒண்ணு. இந்த தடயத்தை வெச்சுக்கிட்டுத்தான் நாம கொலையாளியை நோக்கி ஒவ்வொரு ஸ்டெப்பா எடுத்து வைக்கப் போறோம்...''

''ஸார்... இனிமே என்னால சஸ்பென்ஸை தாங்கிக்க முடியாது. அந்தப் பொருள் என்னான்னு காட்டிடுங்க. இல்லேன்னா என்னோட தலை நூறு சுக்கலா வெடிச்சுடும் போலிருக்கு...''

''அந்த பாவம் எனக்கு வேண்டாம்...'' விவேக் காரை மெதுவாய் நகர்த்திக் கொண்டே தன் பேண்ட் பாக்கெட்டில் பத்திரப்படுத்தி வைத்திருந்த கர்ச்சீப்பை எடுத்து நீட்டினான்.

''என்ன ஸார் கர்ச்சீப்பைத் தர்றீங்க?''

''நீ சரியான அவசரக் குடுக்கை. கர்ச்சீப்பை மெல்லப் பிரிச்சு இரண்டாவது மடிப்பில் என்ன இருக்குன்னு பாரு...''



www.cleanindians.com

விஷ்ணு ஆர்வம் தாங்காமல் பிரித்துப் பார்த்தான்.

கர்ச்சீப்பின் இரண்டாவது மடிப்பில் சின்னச் சின்ன கறுப்பு நிற உலோகத் துணுக்குகள் மினுமினுப்பாய் தெரிந்தன.

''ஸார்... இது...?''

''இதுதான் நான் சொன்ன ப்ளாக் அலுமினியம். இதுக்குப் பேரு டூராலுமினியம். இப்ப நான் சொன்னது சரியான தகவல் தானான்னு தெரிஞ்சுக்க எனக்குத் தெரிஞ்ச நண்பர் ஒருத்தர் மெட்டாலார்ஜிஸ்டா இருக்கார். அவரைப் பார்க்கத்தான் நாம போயிட்டிருக்கோம். அவர் இந்த உலோகத் துணுக்குகளை சோதனைக்கு உட்படுத்திப் பார்த்துட்டு ரிப்போர்ட் கொடுத்ததுமே நம்ம வேலையை மும்முரமா தொடங்கிடலாம்...''

''ஸார்...''

''ம்...''

''இந்த கேஸ்ல நிறைய இராணுவ விவகாரம் இருக்கும் போலிருக்கு. நாம கொஞ்சம் சாஃப்ட்டா மூவ் பண்றது பெட்டர். இல்லேன்னா ஏதாவது ஒரு பிரச்சினையில் போய் மாட்டிகிட்டா அதிலிருந்து விடுபட்டு வெளியே வர்றது பெரும்பாடாயிடும்.''

விவேக் காரின் வேகத்தை அதிகரித்துக் கொண்டே சொன்னான்.

''விஷ்ணு...! இது நமக்கு புது அனுபவம். இந்த கேஸை போலீஸ் லெவலில் ரகசியமாய் டீல் பண்ண இராணுவ அமைச்சகம் எனக்கு அனுமதி கொடுத்திருக்கு. நாம் இந்த கேஸில் மூவ் பண்ணுவது வெளியே யார்க்கும் தெரியக்கூடாது என்பது அமைச்சகத்தின் ரகசிய உத்தரவும்கூட.''

கார் வேகம் பிடித்து அந்த விடியற்காலை நேரத்து தெருக்களில் விரைந்து மத்திய அரசு க்வார்ட்டர்ஸ் காலனிக்குள் நுழைந்து ஒரு



www.chennaiindians.com

பங்களாவின் காம்பௌண்ட் கேட்டுக்கு முன்பாய் போய் நின்று ஹாரன் கொடுத்தது.

வாட்ச்மேன் ஓடிவந்து காம்பௌண்ட் கேட்டை இரண்டாக பிளந்துவிட விவேக் காரை உள்ளே போய் நிறுத்தினான்.

''ஸார்... இந்த மெட்டாலார்ஜிஸ்ட் பேர் என்ன?''

''ஜெயசிம்ஹா... இவர் இராணுவத்தில் மெட்டல் ப்ளெண்ட் செக்ஷனில் சீஃப் மெட்டாலார்ஜிஸ்டாக இருந்து ரிடையரானவர். இவர் கொடுத்த ஒரு சின்ன 'க்ளு'வின் காரணமாகத்தான் அந்த கறுப்பு டூராலுமினியம் உலோகத் துணுக்குகளை நம்மாலே தேடி கண்டுபிடிக்க முடிந்தது...''

விவேக் சொல்லிக் கொண்டிருக்கும்போதே உள்ளேயிருந்து மெட்டாலார்ஜிஸ்ட் ஜெயசிம்ஹா லுங்கியும் பனியனுமாய் வெளிப்பட்டார். அறபது வயதில் உயரமாய் திடகாத்ரமாய் தெரிந்தார். பின் வழுக்கை மண்டையில் பழைய பாசத்தோடு சில ரோமங்கள் ஒட்டிக் கொண்டு தெரிந்தன. கையை உயர்த்தி புன்னகைத்தார்.

''குட்மார்னிங் விவேக்.''

''குட்மார்னிங் ஸார்...''

''என்ன... ஸ்பாட்ல நான் சொன்ன மெட்டல் பார்ட்டிகல்ஸ் கிடைச்சுதா...?''

''கிடைச்சுது. பட்... நீங்க சொன்ன அந்த ப்ளாக் டூராலுமினியம்தானா அதுன்னு எனக்கு கன்ஃபர்மா தெரியலை... நீங்க டெஸ்ட் பண்ணிப் பார்த்தாதான் உண்மை தெரியும்.''

ஜெயசிம்ஹா விஷ்ணுவை ஒரு சந்தேகப் பார்வை பார்க்க விவேக் சொன்னான்.

''ஸார்... ஹி ஈஸ் விஷ்ணு. இந்தக் கேஸை டீல் பண்றதுல எனக்கு அஸிஸ்டண்ட். நீங்க சந்தேகப்பட வேண்டிய அவசியமே இல்லை.''

''நீங்க சர்டிபிகேட் கொடுத்தா சரிதான். வாங்க உள்ளே போவோம்...''

ஜெயசிம்ஹா உள்ளே போக -

இருவரும் தொடர்ந்தார்கள்.

வீடு அமைதியாய் இருந்தது.

விவேக் கேட்டான்.

''ஸார்... வீட்ல யாரும் இல்லை போலிருக்கே?''

''கல்கத்தாவிலே மருமகளுக்கு குழந்தை பிறந்திருக்கு. ஆண் குழந்தை. பேரனைப் பார்க்க என்னோட மனைவி புறப்பட்டு போயிட்டா. ஒரு வாரம் கழிச்சு நானும் புறப்பட்டு போயிடுவேன்.''

''வேலையாள் ஒருவன் எதிர்பட ''காப்பி போட்டு வை. போன் ஏதாவது வந்தா நான் வாக்கிங் போயிருக்கிறதாக சொல்லிடு... வாசல் கதவை தாழ்போட்டுடு'' சொல்லிவிட்டு மாடிப்படிகள் ஏறினார்.

S போட்டுக் கொண்ட மாடிப்படிகள் ஏறி வராந்தாவுக்கு வந்து -

வராந்தாவின் கோடியில் தெரிந்த 'லேப்' என்ற அறைக்குள் நுழைந்தார்கள்.

அறைக்குள் மண்டியிருந்த காற்றில் ரசாயன அமிலங்களின் வாசனை மூக்கை ஸ்பரிசித்து தொண்டைக்குள் எரிச்சலாய் இறங்கியது.

ஜெயசிம்ஹா கேட்டார்.

''விவேக்! அந்த ட்ராலுமினியம் ப்ளாக் மெட்டல் பார்ட்டிக்கல்ஸை எடுங்க. எதுக்கும் ஒரு தடவை டெஸ்ட் பண்ணிப் பார்த்துடலாம்...''

விவேக் மெட்டல் பார்ட்டிகல்ஸ் இருந்த தன் கர்ச்சீப்பை எடுத்து நீட்ட ஜெயசிம்ஹா வாங்கிக் கொண்டு இன்னொரு கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனார்.

விவேக்கும் விஷ்ணுவும் அறையில் போடப் பட்டிருந்த நாற்காலிகளில் சாய்ந்தார்கள்.



www.chennaiindians.com

ஒரு பத்து நிமிஷம் கரைந்து போயிருக்க ஜெயசிம்ஹா பதட்டத்தோடு உள்ளேயிருந்து வந்தார்.

''விவேக்... நான் கெஸ் பண்ணினது சரிதான். நேத்து ராத்திரி நான் உங்ககிட்ட சொன்ன மாதிரி ட்ராலுமினியம்ங்கிற கறுப்பு அலுமினயத்தால் உருவாக்கப்பட்ட மினி சைஸ் ஃபிளைட் ஒண்ணுதான் பறந்து வந்து ஏர்மார்ஷல் மித்ராராயின் வீட்டின் மேல் விழுந்திருக்க வேண்டும்.''

''ஸார்... நீங்க சொல்றது நம்ப முடியாத விஷயமாக இருக்கிறது.''

''எப்படி நம்ப முடியாத விஷயம்ன்னு சொல்றீங்க?''

''மினி சைஸ் ஃப்ளைட்ன்னு சொல்றீங்க. அதை எங்கிருந்து, யார் ஏவியிருப்பாங்க...? அது அப்படியே ஏவப்பட்டிருந்தாலும் மித்ராராயின் வீட்டுக்கு மேலே பறக்கும்போது சத்தம் கேட்டிருக்கணும். அப்படி எந்த சத்ததும் கேட்கலையே....''

ஜெயசிம்ஹா புன்னகைத்தார்.

''அது சைலன்ஸர் ஃப்ளைட். ஃப்ளைட்டின் மொத்த எடையே ஐம்பது கிலோதான். கறுப்பு அலுமினியத்தால் செய்யப்பட்ட அந்த ஃப்ளைட்டுக்குள்ளே முக்கால் பகுதியை அடைச்சிட்டிருக்கிறது டைனமைட் சங்கதிநான். இந்த விமானத்தில் வர்ற டைனமைட்டுக்குப் பேரே டம்ப் டைனமைட். அதாவது ஊமை வெடிகுண்டு.''

''ஸார்... நீங்க சொல்ற விஷயமெல்லாம் ஆச்சர்யமானதாகவே இருக்கு... சைலன்ஸர் ஃப்ளைட். அதக்குள்ளே ஊமை வெடிகுண்டு. நீங்க கதை சொல்லிட்டிருக்கீங்களா இல்ல உண்மையைச் சொல்லிட்டிருக்கீங்களான்னு எனக்கு சந்தேகமாயிருக்கு...''

ஜெயசிம்ஹா புன்னகைத்தார்.

''விவேக்...! ஆச்சர்யங்கள் இதோடு நின்னுடலை. அந்த ஐம்பது கிலோ வெயிட் உள்ள மினி சைஸ் கறுப்பு அலுமினிய விமானம் நூறு கிலோ மீட்டர் தூரம் வரை பத்தாயிரம் அடி உயரத்தில் சத்தம் இல்லாமே பறந்து குறிப்பிட்ட இலக்கைத் தொட்டதுமே வெடிகுண்டா மாறி உயரம் கொஞ்சம் கொஞ்சமா இழந்து அந்த இலக்கு மேலே விழும். கறுப்பு அலுமினியத்தால் வடிவமைக்கப்பட்ட விமானம்ங்கிறதுனால அது இருட்டுல பறந்து வரும்போது தெரியாது. ராடாரோட பார்வைக்கும் அந்த மினி ஃப்ளைட் கிடைக்காது. ஃப்ளைட் வெடிகுண்டா மாறி குறிப்பிட்ட இலக்கு மேலே விழுந்ததும் சத்தமில்லாமே ஒரு பிரளயத்தை உண்டாக்கி விட்டு ஃப்ளைட் முழுவதுமா உருகி எரிஞ்சுடும். வெடிச்ச இடத்துல ஃப்ளைட்டோட எந்த பாகமும் கிடைக்காது. ஒரு ஸ்க்ரூவைக் கூட உங்களால கண்டுபிடிக்க முடியாது. பட் உருகின கறுப்பு அலுமினியம் சில சமயங்களில் சிதறி துளித் துளியாய் உறைந்து போகவும் வாய்ப்பு இருக்கு... அதான் மித்ராராய் வெடி விஷயத்தில் கொல்லப் பட்டதுமே உங்களை ரகசியமா டெலிபோன்ல காண்டாக்ட் பண்ணி மித்ராராய் மினி ஃப்ளைட் டம்ப் டைனமைட்டால் கொல்லப்பட்டிருக்கலாம். இடிபாடுகளுக்கு இடையே உறைந்து போன கறுப்பு அலுமினிய சிதறல்கள் இருக்கான்னு பார்க்கச் சொன்னேன். நீங்களும் நான் சொன்னதை அலட்சியப்படுத்தாமே அந்த இடிபாடுகளுக்கு இடையில் எப்படியோ தேடி எடுத்து கொண்டாந்துட்டீங்க. யூ ஹேவ் டன் ஏ வெரி குட் ஜாப் மிஸ்டர் விவேக்...''

விவேக் குறுக்கிட்டான்.

''ஸார்...! டைம்லி நீங்க எனக்குக் கொடுத்த தகவல்தான் பெரிய உதவியா இருந்தது. இதை கண்டுபிடிச்சது பெரிய விஷயமில்லை. சைலன்ஸர் மினி ஃப்ளைட், ஊமை டைனமைட் பற்றி நீங்க சொன்னதெல்லாம் நான் இதுவரைக்கும் கேள்விப்படாதவை. இவ்வளவு



விஷயங்களை தெரிஞ்சு வெச்சிருக்கிற உங்களுக்கு அந்த மினி ஃப்ளைட்டை யார் ஏவி மித்ராராயை கொலை செஞ்சிருப்பாங்கன்னும் தெரிஞ்சிருக்கலாமே...?''

ஜெயசிம்ஹா உதட்டைப் பிதுக்கினார்.

''ஸாரி மிஸ்டர் விவேக்! நீங்க சொன்ன அந்த இடத்துலதான் எனக்கு பெயில் மார்க். அந்த மினி ஃப்ளைட்டோட முழு ஜாதகமும் எனக்குத் தெரியும். ஆனா அதுக்கு சூத்ரதாரி யார்ன்னு தெரியாது. நான் இராணுவத்தில் மெட்ட லார்ஜிஸ்டா ஒர்க் பண்ணிட்டிருந்தபோது ஏதேச்சையா என் கைக்கு ஒரு ரகசியப் ஃபைல் கிடைக்கப் போக அதை முழு மூச்சில் படிச்சு பார்த்தபோது மினி ஃப்ளைட் பத்தின விவரம் கிடைச்சது.''

''ஸார்.... நீங்க சொல்றதைப் பார்த்தா நம்ம இராணுவத்தில் இந்த மாதிரி மினி ஃப்ளைட்டு களை உபயோகப்படுத்தறாங்கன்னு தெரியுது.''

''நோ... சர்ட்டன்லி நாட்...! நம் நாட்டு இராணுவத்தில் அது மாதிரியான மினி ஃப்ளைட்டுகளை உபயோகப்படுத்தவே யில்லை. இதை உறுதியா என்னால சொல்ல முடியும்.''

''ஸார்... உங்களுக்கு அந்த இரகசிய பைல் எப்படி கிடைச்சதுன்னு நாங்க தெரிஞ்சுக்க லாமா...?''

ஜெயசிம்ஹா புன்னகைத்தார்.

''மிஸ்டர் விவேக்! இராணுவத்தில் என்னோட வேலையே இராணுவ தளவாடங்கள் செய்ய உபயோகப்படுத்துகிற உலோகக் கலவையை சோதனை செஞ்சு பார்க்கிறதுதான். பீரங்கி வண்டிகளையும், விமானங்களையும் எந்த மாதிரியான உலோகக் கலவையைக் கொண்டு உருவாக்கணும்ன்னு நான்தான் ரிப்போர்ட் கொடுப்பேன். இது மாதிரியான உலோகக் கலவைகளை பரிசோதிக்கிறதுக்கு முந்தி

இராணுவத் தளவாடங்கள் சம்பந்தப்பட்ட ஃபைல்ஸ் என்னோட கைக்கு வரும். சில சமங்கள்ல ஒரே நேரத்துல ஏழெட்டு ஃபைல்ஸ் வர்றதும் உண்டு. அப்படி ஒரு தடவை நிறைய ஃபைலைஸ் வந்தபோது 'ஹைலி கான்ஃபி டென்ஷியல்'ன்னு லேபிள் ஒட்டப்பட்ட ரெட் டேப் ஃபைல் ஒண்ணு அதுல இருந்தது. அந்த ஃபைல் எங்க மெட்டாலர்ஜி டிபார்ட் மெண்ட்டுக்கு சம்பந்தப்படாத ஒண்ணு. ஒரு ஆர்வம் காரணமா அதைப் படிச்சுப் பார்த்தேன். அது ஒரு மினி சைலன்ஸர் ஃப்ளைட்டுகளை தயாரிப்பதற்கான ப்ராஜெக்ட். ஊமை வெடி குண்டுகளைப் பத்தியும் அதுல சொல்லி யிருந்தாங்க. எதிரிகளோட இராணுவ பாசறை களை சத்தம் இல்லாமே அழிச்சுட்டு வர இந்திய இராணுவத்துக்கு கிடைச்ச வரப்பிரசாதம்ன்னு ப்ராஜெக்ட் தயாரிச்ச விஞ்ஞானி சொல்லி யிருந்தாலும் ஃபைலோட கடைசி பக்கத்துல சீஃப் ஏர் மார்ஷல் மித்ராராய் ஒரு குறிப்பை எழுதி கையெழுத்தைப் போட்டிருந்தார்.''

''என்ன குறிப்பு அது...?''

''இந்த மினி சைலன்ஸர் ஃப்ளைட் ப்ளஸ் ஊமை வெடிகுண்டு ப்ராஜெக்ட்டில் சொல்லப் பட்டிருக்கிற விஷயங்கள் படிப்பீதற்கு மட்டுமே சாத்தியமான ஒன்று. இதை நடைமுறைக்குக் கொண்டு வர நிறைய சிக்கல்கள் உள்ளன. இந்த ப்ராஜெக்ட்டை நிறைவேற்ற கோடிக்கணக்கில் பணம் தேவைப்படும் என்பது இதில் உள்ள பெரிய சிக்கல். எனவே இந்த ப்ராஜெக்ட் நிராகரிக்கப்படுகிறது. இதுதான் அந்தக் குறிப்பு.''

விவேக் தீவிர சிந்தனையோடு தலையாட்டி னான். ''ஸார்... நீங்க சொல்ற விஷயங்களை வெச்சு பார்க்கும்போது ஒரு விஷயம் க்ரிஸ்டல் க்ளீயரா புரியுது. மித்ராராய் இராணுவ சர்வீஸில் ஏர்மார்ஷலா இருந்தபோது யாரோ ஒரு விஞ்ஞானி இந்த மினி சைலன்ஸர் ஃப்ளைட்டு களையும் ஊமை வெடிகுண்டுகளையும்



தயாரிப்பதற்கான ப்ராஜெக்ட் ஒண்ணை மித்ராராய்கிட்ட சப்மிட் பண்ணியிருக்கார். அதை மித்ராராய் ரிஜக்ட் பண்ணினதால அந்த விஞ்ஞானிக்கு கோபம் ஏற்பட்டு இப்படி பழி தீர்த்திருக்கலாம். எந்த மினி சைலன்ஸர் ஃப்ளைட்டையும் ஊமை வெடிகுண்டையும் வேண்டாம்ன்னு சொன்னீங்களோ அதாலேயே உங்களை தீர்த்துக்கட்டிட்டேன்னு சொல்ற மாதிரி இருக்கு இன்னிக்கு நடந்த சம்பவம்...''

''யூ மே பி கரெக்ட் மிஸ்டர் விவேக். அந்தப் ப்ராஜெக்ட்டை தயார் பண்ணின விஞ்ஞானி யார்ன்னு கண்டுபிடிக்க முடிஞ்சா இந்தக் கேஸை ஒரு முடிவுக்கு கொண்டு வந்துடலாம்...''

''அதை எப்படி கண்டுபிடிக்கிறது ஸார்? நீங்க அந்த ரகசிய ஃபைலை படிச்ச விஷயத்தை இப்போதைக்கு வெளியே சொன்னா அது பெரிய பிரச்சினையாயிடும்.''

''அந்த விஞ்ஞானி யார்ங்கிறதை கண்டுபிடிக்க ஒரே ஒரு வழிதான் இருக்கு மிஸ்டர் விவேக்.''

''சொல்லுங்க ஸார்... அந்த வழியில போய்ப் பார்த்துடுவோம்...''

''ஏரோநாட்டிக் டிஃபென்ஸ் கவுன்ஸலில் மிஸ்டர் ராமமூர்த்தின்னு ஒரு தமிழ்நாட்டுக்காரர் இருக்கிறார். அவர்க்கு இந்த ப்ராஜெக்ட்டைப் பத்தி நிச்சயமா தெரிஞ்சிருக்கும். நீங்க நேரா போய்ப் பார்த்து அப்ரோச் பண்ணினா அந்த விஞ்ஞானி யார்ங்கிற தகவலை அவர் சொல்லக் கூடும். பட் என்னோட பெயரையோ நான் சொன்னதாகவோ எந்த ஒரு விஷயத்தையும் சொல்லக் கூடாது.''

விவேக் புன்னகைத்தான்.

''டோண்ட் வொர்ரி ஸார். மிஸ்டர் ராமமூர்த்திகிட்ட நாங்க எப்படி பேசணுமோ அப்படி பேசி அந்த விஞ்ஞானி பெயரை வெளியே கொண்டு வர்றோம்...''



www.tamilanindians.com

''விஷ் யூ ஆல் த பெஸ்ட். பட் ஒரே ஒரு விஷயம். இந்த விசாரணை ரகசியமான முறையில் நடக்க வேண்டியது ரொம்ப ரொம்ப முக்கியம். மித்ராராய் கொல்லப்பட்டதுக்குக் காரணம் மினி சைலன்ஸர் ஃப்ளைட்டும் ஊமை வெடி குண்டும்தான்னு வெளியே தெரியவே கூடாது. தெரியாத மாதிரி பாவ்லா காட்டிகிட்டே விசாரணையை ஃபுல் ஸ்விங்க்ல கொண்டு போகணும். ராமமூர்த்தியோட விஸிட்டிங் கார்டு இது. ஹேவ் இட்.''

''தேங்க்யூ வெரிமச் ஸார்...''

விவேக்கும் விஷ்ணுவும் ஜெயசிம்ஹாவிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்தார்கள்.

காரில் கிளம்பிப் போகும்போது விஷ்ணு கேட்டான்.

''ஸார்... இந்த மினி ஃப்ளைட் பிரச்சினையை நாம நேரிடையா இராணுவ பாதுகாப்பு கவுன்ஸிலுக்கு கொண்டு போயிட்டா என்ன...?''

''விஷ்ணு...! இந்த விவகாரத்துல நீ ஒரு விஷயத்தைப் புரிஞ்சுக்கணும். மித்ராராயோட மரணம் மட்டுமல்ல இதுல பிரச்சினை...''

''பின்னே...?''

www.cleanindians.com

''எந்த மினி சைலன்ஸர் ஃப்ளைட்டு களையும் ஊமை டைனமைட்டுகளையும் தயாரிக்க சாத்தியம் இல்லைன்னு சொல்லி மித்ராராய் ரிஜெக்ட் பண்ணினாரோ அந்த மினி ஃப்ளைட்டுகளையும் ஊமை டைனமைட்டு களையும் இதே சென்னைல யாரோ தயார் பண்ணியிருக்காங்க. அதை ரகசியமா ஏவியும் இருக்காங்க. இதை யாரும் கண்டுபிடிக்க முடியாதுன்னு எதிரி நினைச்சிருக்கலாம். எதிரி அப்படி நினைச்சிட்டிருக்கும்போதே நாம அவனுக்குத் தெரியாமே நெருங்கணும். இந்த விவகாரத்தை இப்போ நாம நேரிடையா இராணுவ பாதுகாப்பு கவுன்ஸிலுக்கு கொண்டு போயிட்டா விஷயம் எதிரிக்கு போயிடும். மெட்டாலார்ஜிஸ்ட்



ஜெயசிம்ஹா சொன்னது மாதிரி நாம இப்போ பார்க்க வேண்டிய நபர் ஏரோநாட்டிக் பாதுகாப்பு கவுன்ஸிலில் இருக்கிற ராமமூர்த்தியைத்தான்...! அந்த விசிட்டிங் கார்டை எடுத்த அட்ரஸை ஒரு தடவை பலமாய் படி...''

விஷ்ணு எடுத்து படித்தான்.

''ராமமூர்த்தி, நெம்பர் தர்ட்டி ட்டூ, க்ரஸண்ட் ஸ்ட்ரீட், ஆழ்வார்பேட்டை...''

''வுடு... ஜூட்...''

விவேக் ஆக்ஸிலேட்டரின் மேல் காலை வைத்து அழுத்த மாருதி ஆழ்வார்பேட்டையை நோக்கி இறக்கைகளைக் கட்டிக் கொண்டது.



## 6

ஏரோநாட்டிக் பாதுகாப்பு கவுன்ஸிலில் உறுப்பினராக இருக்கும் ஐம்பத்தொன்பது வயது இராமமூர்த்தி பனியன் வேஷ்டியோடு ரோஜாத் தொட்டிகளுக்கு நடுவில் நின்று பூச்சி மருந்தை ஸ்பிரேயர் மூலம் பீய்ச்சிக் கொண்டிருந்தார்.

மாருதி கார் தன் வீட்டு காம்பௌண்ட் கேட்டுக்குள் நுழைவதைப் பார்த்ததும் ஸ்பிரேயரை ஒரு ஓரமாய் வைத்துவிட்டு போர்டிகோவை நோக்கி வந்தார்.

விவேக் காரினின்றும் இறங்கி கும்பிட்டான்.

''வணக்கம் ஸார்...''

ராமமூர்த்தி தன் இடதுகை விரல்களால் தன் வழுக்கைத் தலையை தடவியபடி சந்தேகத் தொனியில் கேட்டார்.

''நீங்க... மிஸ்டர் விவேக்...?''

''யூ ஆர் கரெக்ட் ஸார்... ஹி ஈஸ் விஷ்ணு. மை அஸிஸ்டண்ட்.''

''வாங்க...''

உள்ளே கூட்டிப் போனார். சமையலறையில் அந்த வீட்டைச் சேர்ந்த பெண்கள் மும்முரமாய் இருப்பது அடித்த சாம்பார் ரச வாசனைகளில் தெரிந்தது.

''உட்கார்ங்க...'' ராமமூர்த்தி சோபாவைக் காட்டிவிட்டு உட்கார்ந்தார்.

''சொல்லுங்க... என்ன விஷயம்?''

விவேக் மெல்லிய குரலில் ஆரம்பித்தான். ''ஸார்...! எக்ஸ் சீஃப் ஏர்மார்ஷல் மித்ராராயின் மர்டர் சம்பந்தமா நாங்கதான் புலன் விசாரணை நடத்திகிட்டு வர்றோம். ஏரோநாட்டிக் பாதுகாப்பு கவுன்ஸிலில் ஒரு உறுப்பினராய் இருக்கிற உங்ககிட்ட ஒரு சின்ன என் கொய்ரி...''

''ப்ளீஸ்...''

''ஸார்... மித்ராராயோட மரணத்தைப் பத்தி நீங்க என்ன நினைக்கறீங்க...?''

''ஹைலி அன்பார்ச்சுனேட் ஒன். அவருடைய மரணம் மிக மிக துரதிர்ஷ்டவசமானது...''

''இந்த மரணத்துக்கு பின்னணியில் என்ன காரணம் அல்லது யார் காரணமாயிருப்பாங்கன்னு நினைக்கறீங்க ஸார்...?''

www.clearnindians.com

''எப்படி சொல்ல முடியும்...? மித்ராராய் சர்வீஸ்ல இருந்தபோதே ரொம்பவும் ஸ்ட்ரெயிட் ஃபார்வேர்ட். ட்யூட்டி கான்ஷியஸ் அதிகம். இராணுவ சட்டங்களை மதிக்காமே எந்த அதிகாரி நடந்தாலும் நடவடிக்கை எடுக்காமே இருக்க மாட்டார். எனக்கு தெரிஞ்சவரை ரெண்டு பேரை இராணுவ கோர்ட்டுக்கு கொண்டு போய் நிறுத்தி பனிஷ்மெண்ட் வாங்கிக் கொடுத்திருக்கார். ஸோ, ஒருத்தர் நேர்மையா நடந்தாலே இந்த இந்தியாவில் எதிரிகள் உருவாயிடுவாங்க... யாரோ பழைய பகையை மனசுக்குள்ளே வெச்சிருந்து இப்போ சமயம் பார்த்து பழி தீர்த்துக்கிட்டாங்க...''



''ஸார்... மித்ராராய் மர்டர் சம்பந்தமா எங்களுக்கு ஒரு க்ளூ கிடைச்சிருக்கு...''

''என்ன...?''

''ஒரு சின்ன மினி ஃப்ளைட் சைலன்ஸர் டைனமைட்டோடு வந்து மித்ராராய் பங்களா மேல் வந்து விழுந்திருக்கு.''

ராமமூர்த்தி லேசாய் முகம் மாறி விவேக்கை ஏறிட்டார்.

''மினி ஃப்ளைட்டா?''

''எஸ்... ஸார்...''

''வந்தது மினி ஃப்ளைட்தான்னு எப்படி சொல்றீங்க...?''

''டைனமைட் ப்ளாஸ்ட்டான இடத்துல இந்த கறுப்பு அலுமினிய டூராலுமினியம் உலோக பீஸஸ் கிடைச்சுது ஸார். இதை ஒரு மெட்டாலார்ஜிஸ்ட்கிட்ட கொடுத்து என்னான்னு கேட்டோம். அதுக்கு அவர் இது விமானம் தயாரிக்க உபயோகப்படும் கறுப்பு அலுமினியமான டூராலுமினியம்ன்னு சொன்னார். நானும் விஷ்ணுவும் யோசனை பண்ணிப் பார்த்தோம். மித்ராராய் வீட்டு மேலே பெரிய விமானம் வந்து விழுந்திருந்தா அது பட்டவர்த்தனமா எல்லோர்க்கும் தெரிஞ்சிருக்கும். ஸோ விழுந்தது மினி ஃப்ளைட்டாக இருந்திருக்கலாம். வெடிச்ச டைனமைட்டும் சைலன்ஸராக இருந்திருக்கலாம். நாங்க இப்படி யோசனை பண்ணினது கற்பனை யாக இருக்க வாய்ப்பில்லை. ஏன்னா இந்த விஞ்ஞான யுகத்துல எதுவும் நடக்கலாம். நீங்க பாதுகாப்பு கவுன்ஸிலில் இருக்கீங்க. இந்த மாதிரியான மினி ஃப்ளைட்டுக்களைப் பத்தி உங்களுக்கு ஏதாவது தெரிஞ்சிருக்கலாமேங்கிற எண்ணத்துலதான் இங்கே வந்தோம்.

ராமமூர்த்தியின் முகம் இப்போது வெகுவாய் மாறியிருக்க அவர் தலை மெல்ல ஆடியது.

''தெரியும்... நீங்க கெஸ் பண்ணினது ரொம்பவும் சரி மிஸ்டர் விவேக்... ரெண்டு

வருஷங்களுக்கு முந்தி எங்க பாதுகாப்பு கவுன்ஸிலுக்கு மினி ஃப்ளைட் வித் சைலண்ட் பாம் ப்ராஜெக்ட் ஒண்ணு வந்தது. அதை நாங்க கன்ஸிடர் பண்ணிப் பார்த்துட்டு அப்போ சர்வீஸில் இருந்த மித்ராராய்க்கு அனுப்பி வெச்சோம். அவர் அந்த ப்ராஜெக்ட்டை ரிஜக்ட் பண்ணிட்டார்.''

விவேக் கேட்டான்.

''ஸார்... அந்த ப்ராஜெக்ட்டை உங்க பாதுகாப்பு கவுன்ஸிலுக்கு சப்மிட் பண்ணின சயின்டிஸ்ட் யார்ன்னு சொல்ல முடியுமா?''

''தாராளமா சொல்லலாம்... அவர் பேர் புஷ்பநாத். இதே சென்னையைச் சேர்ந்தவர்தான். விமானப் படைக்காக நிறைய தளவாடங்களை டிசைன் பண்ணிக் கொடுத்திருக்கார். அந்த மினி ஃப்ளைட் வித் சைலண்ட் பாம் ப்ராஜெக்ட் மித்ராராய் ரிஜெக்ட் பண்ணினதுமே புஷ்பநாத் தன்னோட பதவியை ராஜினாமா பண்ணிட்டு டெல்லியிலிருந்து சென்னை திரும்பிட்டார். அதுக்கப்புறம் நான் அவரை பார்க்கவேயில்லை. அவர் இப்போ சென்னையிலதான் இருக்காரா... இல்லை வேற ஏதாவது ஸ்டேட்டுக்குப் போய் செட்டிலாயிட்டாரான்னு தெரியலை...''

''ஸார்... புஷ்பநாத்தோட சென்னை வீட்டு அட்ரஸ் என்ன...?''

''எனக்கு தெரியலை...! வேணும்ன்னா எக்ஸ் சர்வீஸ்மென் அஸ்ஸோசியேஷனுக்குப் போன் பண்ணி கேட்டுப் பார்த்தா ஒருவேளை அட்ரஸ் கிடைக்கலாம்... வெயிட் ஏ மினிட், நானே பண்ணிப் பார்த்துடறேன்...'' சொன்ன ராமமூர்த்தி பக்கத்தில் இருந்த டெலிபோனைத் தொட்டு ரிஸீவரை எடுத்துக் கொண்டு டயலில் எண்களைத் தட்டினார். மறுமுனையில் ரிங் போய் ரிஸீவர் எடுக்கப்பட்டதும் கேட்டார்.

''எக்ஸ் சர்வீஸ்மென் அஸ்ஸோசியேஷன்?''

''...''



''நான் ஆர்மி செக்யூரிடி கவுன்சில் ராமமூர்த்தி பேசறேன். ஏரோநாட்டிக் சயின்டிஸ்ட் புஷ்பநாத்தோட சென்னை அட்ரஸ் வேணும்...''

''....''

''எஸ்...எஸ்... அவர் இப்போ சர்வீஸில் இல்லை. ரெண்டு வருஷத்துக்கு முன்னாடியே வேலையை ரிசைன் பண்ணிட்டார்.''

''....''

''டேக் யுவர் ஒன் டைம். நான் லைன்ல வெயிட் பண்றேன்...''

ராமமூர்த்தி ஒரு நிமிஷ நேரம் லைனில் காத்திருக்க, மறுமுனை உயிர் பெற்றது.

''....''

''ம்... சொல்லுங்க... என்ன அட்ரஸ்...? புஷ்பநாத் நெம்பர் எய்ட்டி சிக்ஸ், சிம்பொனி அவென்யூ, மடிப்பாக்கம். போன் நெம்பர் எதுவும் இல்லையா... நோ ப்ராப்ளம்.''

ராமமூர்த்தி பேசிவிட்டு ரிஸீவரை வைத்துக் கொண்டிருக்கும்போதே விவேக் அந்த அட்ரஸை ஒரு பேப்பரில் குறித்து வைத்துக் கொண்டான்.

''என்ன விவேக், அட்ரஸை நோட் பண்ணிட்டீங்களா...?''

''ம்... உங்க உதவிக்கு ரொம்பவும் நன்றி ஸார்.''

''நன்றி இருக்கட்டும். மேற்கொண்டு உங்க நடவடிக்கை என்ன?''

''ஸார்... உடனடியா நாங்க இந்த அட்ரஸுக்கு போய் சயின்டிஸ்ட் புஷ்பநாத்தை மீட் பண்ணப் போறதில்லை. அப்படி மீட் பண்ணிப் பேசனி ஆள் ஒரு வேளை உஷாராகிவிடலாம்...''

''பின்னே என்ன செய்யப் போறீங்க...?''

''மொதல்ல அந்த ஏரியா போஸ்ட்மேனைப் பிடிக்கறோம்...''



www.clearindians.com

''பிடிச்சு...?''

''புஷ்பநாத்தைப் பத்தி நல்லா விசாரிச்சுட்டு அந்த வீட்ல யார் யார் இருக்காங்கன்னு க்ளீயரா தெரிஞ்சுகிட்டு மூவ் பண்ணினாத்தான் ரிசல்ட் கிடைக்கும்.''

''டு இட் கோ்ஃபுலி...''



# 7

மடிப்பாக்கம் சிம்பொனி அவென்யூ பீட் போஸ்ட்மேனைக் கண்டுபிடிப்பத்தில் இரண்டு மணி நேரம் கரைந்து போயிற்று.

தலையில் கணிசமான வழுக்கையை வாங்கியிருந்த அந்த ஐம்பது வயது போஸ்ட்மேன், விவேக்கும் விஷ்ணுவும் போலீஸ் டிபார்ட்மெண்ட் என்று தெரிந்ததும் கண்களில் பயம் காட்டி வியர்த்து வழிந்தார்.

விவேக் அவர் தோளில் கை வைத்தான்.

''பயப்படாதீங்க... இது ஒரு விசாரணைதான். கேட்கிற கேள்விகளுக்கு மட்டும் உண்மையான பதிலைச் சொன்னா போதும்.''

www.cleanindians.com

''கே...கேளுங்க ஸார்...''

''உங்க பேர் என்ன...?''

''சௌரிமுத்து ஸார்.''

''போஸ்ட்மேனா எத்தனை வருஷ சர்வீஸ்...?''

''இருபத்தஞ்சு வருஷம் ஸார்...''

''சிம்பொனி அவென்யூ பீட்ல இருக்கிற எல்லா வீட்டு அட்ரஸும் உங்களுக்கு மனப்பாடம்தானே?''

சௌரிமுத்து 'ஆமாம்' என்கிற மாதிரி தலையாட்டினார்.



விவேக் கேட்டான்.

''நெம்பர் எய்ட்டி சிக்ஸில் யார் இருக்காங்க?''

போஸ்ட்மேன் சில விநாடிகள் யோசித்து விட்டு மெல்லிய குரலில் சொன்னார்.

''ஸ்வர்ணமாலான்னு ஒரு பொண்ணு.''

விவேக்கும் விஷ்ணுவும் ஒருத்தரை யொருத்தர் பார்த்துக் கொண்டார்கள். விவேக் திரும்பவும் போஸ்ட்மேனை ஏறிட்டான்.

''பேர் என்ன சொன்னீங்க...?''

''ஸ்வர்ணமாலா.''

''நல்லா யோசனை பண்ணுங்க. நெம்பர் எய்ட்டி சிக்ஸில் ஸ்வர்ணமாலான்னு யாரும் இருக்க மாட்டாங்க. அந்த வீட்ல புஷ்பநாத்னு ஒரு சயின்டிஸ்ட் இருப்பார்...''

''முன்னே இருந்தார் ஸார். இப்ப இல்ல. வீட்டை வெகேட் பண்ணிட்டுப் போயிட்டார்...''

''என்னது... வீட்டை வெகேட் பண்ணிட்டுப் போயிட்டாரா?''

''ஆமா ஸார்...''

''எப்போ...?''

''அது ஒரு ஆறு மாசம் இருக்கும் ஸார்.''

''வீட்டை காலி பண்ணிட்டு எங்கே போயிருக்கார்...?''

''அது எனக்குத் தெரியாது ஸார். பொதுவா வீட்டை காலி பண்ணிட்டு போறவங்க அந்த ஏரியா போஸ்ட்மேன்கிட்ட புது அட்ரஸைக் கொடுத்துட்டு போவாங்க... இவர் கொடுத்துட்டு போகலை.''

''சரி... அவர் காலி பண்ணிட்டுப் போன இந்த ஆறு மாசத்துக்குள்ளே அவரோட பேர்க்கு லெட்டர்ஸ் ஏதாவது வந்ததா...?''

''எதுவும் வரலை ஸார்...''

''புஷ்பநாத் இந்த அட்ரஸில் குடியிருந்த போது அந்த வீட்ல அவரைத் தவிர வேற யார் யாரெல்லாம் இருந்தாங்க...''

''அவர்க்கு ஃபேமிலி எதுவும் கிடையாது ஸார். ஒய்ஃப் என்னிக்கோ செத்து போய்ட்டதா சொன்னாங்க. நான் அவர்க்கு வர்ற லெட்டர்ஸை கொடுக்கப் போகும்போது ஒண்டியா உட்கார்ந்து புஸ்தகம் படிச்சிட்டிருப்பார்...''

''உங்ககிட்ட ஏதாவது பேசுவாரா?''

''ஒரு தேங்க்ஸ் சொல்லி லெட்டர்ஸை வாங்கிக்குவார் அவ்வளவுதான்...''

''புஷ்பநாத்துக்கு எது மாதிரியான லெட்டர்ஸ் வரும்...?''

''நீங்க கேட்ட கேள்வி புரியலை ஸார்.''

''அவர்க்கு வெளிநாட்டு லெட்டர்ஸ் அதிகம் வருமா இல்லை இன்லேண்ட் நிறைய வருமா?''

''ரெண்டும் கலந்து வரும் ஸார். முக்கியமா அவர்க்கு சயின்ஸ் சம்பந்தப்பட்ட ஃபாரின் புக்ஸ் நிறைய வரும்...''

''ஃபாரின்னா... எந்த கண்ட்ரி...?''

''அதெல்லாம் நான் கவனிக்கலை ஸார்.''

''சரி... இப்ப அந்த வீட்ல குடியிருக்கிற ஸ்வர்ணமாலாங்கிற பொண்ணுக்கு ஒருவேளை புஷ்பநாத்தின் புது அட்ரஸ் தெரிஞ்சிருக்கலாம் இல்லையா?''

''அந்தப் பொண்ணுகிட்டே நீங்களே கேட்டுப் பாருங்க ஸார்...''

விவேக்கும் விஷ்ணுவும் போஸ்ட்மேன் சௌரிமுத்துவுக்கு ஒரு நன்றியைச் சொல்லி விட்டு கார்க்கு வந்தார்கள்.

ஏழு நிமிஷப் பயணம்.

சிம்பொனி அவென்யூ வந்தது. அவென்யூ வின் ஆரம்பத்திலேயே பாதாள சாக்கடை வேலைகளுக்காக பி.டபிள்யூ டிபார்ட்மெண்ட்



ஒரு பெரிய பள்ளத்தைத் தோண்டி அதற்குள் ராட்சஸக் குழாய்களைப் போட்டுவிட்டு போயிருக்க, காரை ஒரு ஓரமாய் நிறுத்திவிட்டு விவேக்கும் விஷ்ணுவும் இறங்கி நடந்தார்கள்.

ரோட்டின் இரண்டு பக்கமும் சின்னதும் பெரியதுமான பங்களாக்கள் நாய் குரைப்புச் சத்தங்களோடு வந்தன.

''விஷ்ணு...''

''ஸார்...''

''போஸ்ட்மேன் கிட்ட பேசினதில் ஒரு உருப்படியான தகவல் கிடைச்சிருக்கு...''

''அவர்க்கு வந்த வெளிநாட்டு கடிதங்கள், புஸ்தகங்களைப் பத்திதானே ஸார் சொல்றீங்க...''

''ஆமா... எனக்கு இப்ப இருக்கிற சந்தேகம் என்ன தெரியுமா?''

''சொல்லுங்க ஸார்...''

''புஷ்பநாத் இப்போ இந்தியாவிலேயே இல்லைங்கிறதுதான். ஏதாவது ஒரு ஃபாரின் கண்ட்ரிக்கு அவர் பறந்து போயிருக்கலாம்...''

''ஸ்வர்ணமாலாகிட்டயிருந்து புஷ்பநாத்தைப் பத்தி ஏதாவது தகவல் கிடைக்குதான்னு பார்க்கலாம் ஸார்.''

ஒரு பத்து நிமிஷ நடையில் 86 என்று காம்பௌண்ட் சுவரில் எண்ணிட்ட பங்களாவுக்கு முன்பாய் வந்து நின்றார்கள்.

போர்டிகோவில் கட்டிப்போட்ட பசுமாடு மாதிரி ஒரு மாருதி 'ஜென்' வெள்ளை வெளேரென்று தெரிந்தது.

இருவரும் உள்ளே நுழைந்து வாசற்படியேறி காலிங்பெல்லுக்கு வேலை கொடுக்க, ஒரு இளம் பெண் வந்து கதவைத் திறந்தாள்.

இருபத்தைந்து வயது இருக்கலாம். ஒரு குடும்பப் பெண்ணுக்குரிய தோற்றம். நெற்றி வகிட்டில் குங்குமம்.

விவேக் கேட்டான்.

''ஸ்வர்ணமாலா...?''

''எஸ்... மைசெல்ஃப்...''

''உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்.''

''நீங்க...?''

''போலீஸ் க்ரைம் ப்ராஞ்ச்...''

''என்ன விஷயமா...?''

''இப்படி வாசல்ல நின்ன பேசக்கூடிய விஷயம் இல்லை. உள்ளே போய் பேசலாமா...?''

''வாங்க...''

உள்ளே போனாள்.

விவேக்கும் விஷ்ணுவும் பின்தொடர்ந்தார்கள். கொஞ்சம் பெரிய பங்களாதான். இன்டோர் டெக்கரேஷனுக்காக நிறையவே செலவு செய்திருந்தார்கள். ஜன்னல்களில் பால்யூர்தீன் திரைச்சீலைகள் அசைந்தன.

மூன்று பேரும் ஹால் மையத்தில் இருந்த சோபாவில் உட்கார்ந்தார்கள். ஸ்வர்ணமாலா குழப்ப முகத்தோடு கேட்டாள்.

''என்ன விஷயம்?''

''இந்த வீடு வாடகை வீடுதானே?''

''ஆமா...''

''நீங்க இங்கே குடிவந்து எத்தனை நாளாச்சு?''

''ஆறு மாசம்...''

''அதுக்கு முன்னாடி இந்த வீட்ல யார் குடியிருந்தாங்கன்னு சொல்ல முடியுமா...?''

''புஷ்பநாத்ன்னு ஒருத்தர்...''

''அவரை நீங்க பார்த்திருக்கீங்களா?''

''இல்லை... இந்த வீட்டோட ஹவுஸ் ஓனர் சொல்லித்தான் தெரியும்...''



''ஹவுஸ் ஓனர் யாரு...?''

''அவர் பேர் உன்னிகிருஷ்ணன். துபாயில இருக்கார். வாடகை பணத்தை ஒவ்வொரு மாசமும் டிராப்ட் எடுத்து அனுப்பிடுவோம்...''

''இந்த வீட்ல உங்களைத் தவிர வேற யார் யாரெல்லாம் இருக்காங்க...''

''நானும் என்னோட கணவர் மட்டும்தான்.''

''அவர் எங்கே...?''

''பிசினஸ் விஷயமா வெளியூர் போயிருக்கார்.''

''என்ன பிசினஸ்...?''

''ஸின்தடிக் யார்ன்...''

''மிஸஸ் ஸ்வர்ணமாலா... இப்போ புஷ்பநாத் எங்கே குடி போயிருக்கார்ன்னு தெரியுமா?''

''தெரியாது...''

''உங்க கணவர்க்கு...?''

''அவர்க்கும் தெரியாது...''

''துபாயில் இருக்கிற உங்க ஹவுஸ் ஓனர்க்கு?''

''நீங்க அவர்கிட்டதான் கேட்கணும்.''

''காண்டாக்ட் பண்ண போன் நெம்பர் இருக்கா?''

''இருக்கு...''

''நெம்பரை கொஞ்சம் நோட் பண்ணிக் கொடுங்க.''

''வெயிட் ஏ மினிட்... போன் நெம்பர் டயரியில்தான் இருக்கும்...'' சொன்னவள் சுவர் அலமாரிக்கப் போய் ஒரு டயரியை எடுத்து வந்தாள்.

விவேக் தன் சர்ட் பாக்கெட்டைத் தொட்டு சின்ன டயரியை எடுக்க முயன்றவன் லேசாய் முகம் மாறினான்.



www.cleanindians.com

''விஷ்ணு...''

''ஸார்...''

''கார் சாவியை கார்லயே விட்டுட்டேன் போலிருக்கு.''

''நான் போய் எடுத்துட்டு வரட்டுமா ஸார்...?''

''நீ இருந்து ஹவுஸ்ஓனர் துபாய் அட்ரஸையும் டெலிபோன் நெம்பரையும் நோட் பண்ணிட்டு வா. நான் கார்ல உனக்காக வெயிட் பண்றேன்.''

''சரி... ஸார்...''

''தேங்க்யூ மிஸஸ் ஸ்வர்ணமாலா. ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ்...'' விவேக் விடைபெற்றுக் கொண்டு அவசர அவசரமாய் வெளியேற, விஷ்ணு தன் பாக்கெட் நோட்டை பிரித்து வைத்துக் கொண்டு ஸ்வர்ணமாலாவை ஏறிட்டான்.

''சொல்லுங்க... ஹவுஸ் ஓனரோட துபாய் அட்ரஸ் என்ன?''

அவள் தன் டயரியைப் பிரித்து வைத்துக் கொண்டு அட்ரஸையும் டெலிபோன் நெம்பரையும் நிதானமான குரலில் சொல்ல, விஷ்ணு அவைகளை சிரத்தையாய் குறித்துக் கொண்ட பின் கேட்டான்.

''நீங்க இந்த வீட்டுக்கு குடிவந்த இந்த ஆறு மாசத்துக்குள்ளே புஷ்பநாத்தை தேடிகிட்டு இங்கே யாராவது வந்திருக்காங்களா...?''

''ஆரம்ப நாட்கள்ல ரெண்டொருத்தர் வந்திருக்காங்க.''

''யார் அவங்க...?''

''தெரியலை... புஷ்பநாத்தை பார்க்க வந்தோம்ன்னு சொன்னாங்க. அவர் இப்போ இங்கே இல்லைன்னு சொன்னதும் போய்ட்டாங்க...''

''அதுக்கப்புறம் வேறு யாரும் வரலை...?''

''இல்லை...''



www.chennaiindians.com

''உங்க தகவல்களுக்கு ரொம்பவும் நன்றி. புஷ்பநாத்தைப் பற்றி உங்களுக்கு தகவல் கிடைச்சாலோ அவரைத் தேடிகிட்டு இங்கே யாராவது வந்தாலோ உடனடியா போலீஸுக்குத் தகவல் கொடுங்க...''

ஸ்வர்ணமாலா கொஞ்சம் பயத்தோடு கேட்டாள்.

''எதுக்காக அவரைப் பத்தி இவ்வளவு என்கொய்ரி?''

''இது ஒரு இராணுவ விவகாரம். அதைப்பத்தி வெளியே சொல்வதற்கு இல்லை...''

விஷ்ணு ஒரு புன்னகையோடு சொல்லி விட்டு வீட்டை விட்டு வெளியேறி அவென்யூ வின் தெருமுனையில் தெரிந்த காரை நோக்கிப் போனான்.



## 8

**வி**ஷ்ணு வீட்டை விட்டு வெளியேறியதும், ஸ்வர்ணமாலா உடம்பு பூராவும் பரவிக் கொண்ட பதட்டத்தோடு வாசல் கதவை அடைத்து தாழிட்டு விட்டு - மாடிப்படிகளில் தடதடவென்று ஏறி மாடி வராந்தாவில் ஓடி வராந்தாவின் கோடியில் இருந்த பூஜையறைக்குள் நுழைந்தாள்.

சுவரோடு சுவராய் பதிக்கப்பட்டிருந்த அந்த பெரிய சைஸ் வெங்கடாசலபதி படத்தை இரண்டு கைகளாலும் பற்றிக் கொண்டு மெதுவாய் இழுக்க - படம் ஒரு கதவு மாதிரி நெகிழ்ந்து மெல்ல பின்னோக்கிப் போயிற்று.

சுவர்க்குள்ளே ஒரு சதுரம் உற்பத்தியாகி சில எலக்ட்ரானிக் சங்கதிகளோடு அதி நவீன இண்டர்காண்டினெண்டல் வயர்லஸ் செட் ஒன்று சிவப்பு விளக்கை சிமிட்டியபடி உட்கார்ந் திருந்தது.

அதன் ஹெட்போனை எடுத்து தலையில் கவிழ்த்துக் கொண்ட ஸ்வர்ணமாலா படபடப்பு தணியாத குரலில் பேச ஆரம்பித்தாள்.

''நான்தான்...''

''ஸ்வர்ணா...'' ஒரு ஆண் குரல் வயர் லஸ்ஸில் கரகரப்பாய் கேட்டது.

''என்ன விஷயம்? நிலைமை அங்க எப்படியிருக்கு...?''

''நாம நினைச்ச மாதிரியில்லை...''

''நீ என்ன சொல்றே...?''

''போலீஸ் புஷ்பநாத்தை தேடிகிட்டு இங்கே வந்துட்டாங்க.''

''எ...எப்படி...எப்படி...?''

''அதுதான் எனக்கும் புரியலை. புஷ்ப நாத்தோட சைலன்ஸர் மினி ஃப்ளைட் ஊமை வெடிகுண்டு ப்ராஜெக்ட்தான் மித்ராராயோட கொலைக்குக் காரணம்ன்னு போலீஸ் ஸ்மெல் பண்ணியிருந்தாத்தானே புஷ்பநாத் மேல சந்தேகம் வந்திருக்கும்?''

''ஆமா... போலீஸ் அந்த ப்ராஜெக்ட் பத்தி ஏதாவது சொன்னாங்களா...?''

''இல்லை...''

''உன்கிட்ட வேற என்னதான் கேட்டாங்க?''

''இதுக்கு முன்னாடி இங்கே குடியிருந்த புஷ்பநாத்தை உனக்கு தெரியுமான்னு கேட்டாங்க... எனக்கு தெரியாதுன்னு சொன்னேன். துபாயில இருக்கிற ஹவுஸ் ஓனரை காண்டாக்ட் பண்ணி கேட்டுப்பாருங்கன்னு சொல்லி அட்ரஸும் போன் நெம்பரும் கொடுத்திருக் கேன்.''

''வேற என்ன கேட்டாங்க...?''

''இந்த வீட்ல நீ மட்டும்தான் இருக்கியான்னு கேட்டாங்க. ஹஸ்பெண்ட் இருக்கார்ன்னு



சொன்னேன். ஸிந்தடிக் யார்ன் பிசினஸ் விஷயமா வெளியூர் போயிருக்கார்ன்னு சொன்னேன். நம்பிட்டாங்க...''

''ஸ்வர்ணா... நீ கொஞ்சம் எச்சரிக்கையா இருக்க வேண்டிய நேரம் இது. மித்ராராயை கொலை செய்ய மினி ஃப்ளைட்டையும் சைலன்ஸர் டைனமைட்டையும் நாம உபயோகப் படுத்தினது யார்க்குமே தெரியாதுன்னு நினைச்சோம். ஆனா அந்த நினைப்புல இப்போ மண். போலீஸ் இனி சும்மா இருக்கமாட்டாங்க. புஷ்பநாத்தை தேடிக் கண்டுபிடிக்கத் தேவை யான எல்லா முயற்சிகளையும் எடுத்துக்குவாங்க.''

ஸ்வர்ணமாலா சிரித்தாள்.

''புஷ்பநாத் உயிரோடு இருந்தாத்தானே அவர் போலீஸ் கைக்கு கிடைப்பார். அவரைத் தான் அஸ்தியாக்கி ஓடற ஆத்துத் தண்ணியில கரைச்சுட்டாங்களே.''

''சரி... அங்கே நடக்கிற நிலவரங்களை உன்னிப்பா வாட்ச் பண்ணு. எல்லாப் பேப்பரையும் வாங்கிபடி. டி.வி.நியூஸ் கேளு. மறுபடியும் ராத்திரிக்குப் பேசறேன். மறுபடியும் போலீஸ் உன்கிட்ட வந்தா பயத்தைக் காட்டிக்காமே தைரியமாப் பேசு...''

''ம்...''

''வேற ஏதாவது செய்தி உண்டா...?''

''இன்னிக்கு அவ்வளவுதான்... ராத்திரி பேசுவோம்...''

ஸ்வர்ணமாலா பேசி முடித்துவிட்டு தலையிலிருந்து ஹெட்போனைக் கழற்றி சுவர் சதுரத்துக்குள் வைத்து வெங்கடாசலபதியின் படத்தை எடுத்து அந்த சதுரத்துக்கு பொருத்த முயன்ற விநாடி -

''நான் வேணும்ன்னா உதவிக்கு வரட்டுமா?''

அறைக் கதவருகே குரல் கேட்டு சகலமும் தூக்கிவாரிப் போட்டு திரும்பினாள் ஸ்வர்ணமாலா.



www.cleanindians.com

விவேக் கதவு நிலைப்படிக்கு சாய்ந்து தன் இரு கைகளையும் மார்புக்குக் குறுக்காகக் கட்டியபடி நின்றிருந்தான்.



## 9

ஸ்வர்ணமாலாவின் உடம்பு தன்னிச்சையாய் உதறிக் கொண்டிருக்க விவேக் நின்ற இடத்திலிருந்து கொஞ்சமும் அசையாமல் கேட்டான்.

''இந்த பூஜை ரூமைக் கட்டியதே இது மாதிரியான காரியத்துக்குத்தானா...?''

பயம் உறைந்துபோன விழிகள் விவேக்கையே பார்த்துக் கொண்டிருக்க, விவேக் புன்னகையோடு தொடர்ந்தான்.

''கதவு பூட்டியிருக்கும்போது நான் எப்படி உள்ளே வந்தேன்னு நீ யோசிக்கலாம். உனக்கு விஷயம் தெரியுமா...? நான் இன்னும் வீட்டை விட்டு வெளியே போகவேயில்லை. கொஞ்ச நேரத்துக்கு முந்தி கார்ச் சாவியைக் கார்லயே விட்டுட்டதா சொல்லி நான் வெளியே கிளம்பினேன். ஆனா நான் வெளியே போகலை. காரணம் கார்ச் சாவி என்கிட்டயேத்தான் இருந்தது. சரி நான் ஏன் அந்தப் பொய்யைச் சொன்னேன் தெரியுமா...?''

ஸ்வர்ணமாலாவின் விழிகள் இன்னமும் அதிகப்படியான திகைப்புக்குப் போயிற்று.

விவேக் புன்னகையோடு தொடர்ந்தான்.

''நாங்க உன் வீட்டுக்குள்ள வந்து சோபாவில் உட்கார்ந்து எதேச்சையா பேசிட்டிருக்கும்போது உன்னோட பார்வைக் கோணம் திடீர்னு ஒரு மாறுதலுக்கு உட்பட்டது. அதைத் தொடர்ந்து உன்கிட்ட லேசா ஒரு பதட்டம். அந்தப் பதட்டத்துக்கு என்ன காரணம்ன்னு கண்டுபிடிக்க



நான் என்னோட பார்வையை உனக்குப் பின்னாடி இருக்கிற சுவர் நிலைக் கண்ணாடிக்குக் கொண்டு போனேன். ஹால் மூலையில் இருக்கிற ஒரு ஜீரோ வாட்ஸ் பல்பு எரிஞ்சு எரிஞ்சு அணைஞ்சுட்டிருந்தது. நாலைஞ்சு தடவை அப்படி எரிஞ்சு அணைஞ்சதும் அதுக்கப்புறம் ஆஃப் ஆயிடுச்சு. அது உனக்கு வந்த ஒரு சிக்னல்ங்கிறதை நான் புரிஞ்சுகிட்டேன். ஆனா அது எதுக்கான சிக்னல்ன்னு தெரியலை. அதைக் கண்டுபிடிக்கத்தான் கார்ல சாவியை விட்டுட்ட மாதிரி நடிச்சு வெளியே போற மாதிரி பாவ்லா பண்ணி இருட்டான மாடிப்படிகளுக்குக் கீழே போய் ஒண்டிக்கிட்டேன். என்னோட அஸிஸ்டெண்ட் விஷ்ணு உன்கிட்ட பேசிட்டு வெளியே போனதும் நீ புயல் வேகத்துல கதவைச் சாத்தி தாழ்ப்பாள் போட்டுட்டு மாடிப்படி ஏறி இந்தப் பூஜை ரூமுக்கு வந்தே. நானும் பூனை நடை போட்டு உன் பின்னாடியே வந்தேன். நீ தலைக்கு ஹைட்போனை மாட்டிகிட்டு பேசினதையும் அதுக்கு எதிர்முனையிலிருந்து வந்த பதிலையும் நான் ஒரு அட்சரம் விடாமே கேட்டுட்டேன்.''

விவேக் நீளமாய் பேசி முடித்துவிட்டு இரண்டடி முன்னால் போய் ஸ்வர்ணமாலாவுக்கு முன்பாய் வந்து நின்றான்.

''இனி நீ தப்பிக்க முடியாது. உண்மை பேசித்தான் ஆகணும்.''

அவள் தலைகுனிந்தாள்.

''சொல்லு... வயர்லஸ்ல உன்கிட்ட பேசினது யாரு?''

அவள் நிமிர்ந்தாள்.

கண்களில் இப்போது நீர் கனத்து பளபளத்தது.

''ம்... சொல்லு... பேசினது யாரு?''

''தெ... தெரியாது.''

விவேக் புன்னகைத்தான்.

ஸ்வர்ணமாலா சமையலறை மேடைக்குக் கீழே குனிந்து அந்த மண்ணெண்ணை டின்னை வெளியே இழுத்துக் கொண்டிருந்தாள்.

விவேக் கத்தினான்.

''ஏய்... வேண்டாம்...''

விவேக்கின் கத்தலை அவள் பொருட்படுத்தாமல் மண்ணெண்ணை டின்னை வெளியே எடுத்து அதன் மூடியை நிதானமாய் கழற்றிவிட்டு விவேக்கைப் பார்த்தாள். புன்னகைத்தாள்.

''நான் உயிரோடு இருந்தாத்தானே என்கிட்டயிருந்து உங்களால உண்மைகளை வாங்க முடியும்...?''

டின்னை தலைக்கு மேல் உயர்த்தி கவிழ்க்க மண்ணெண்ணை காற்றில் நாறிக் கொண்டு ஸ்வர்ணமாலாவை தெப்பல் தெப்பலாய் நனைத்தது.

விவேக் செய்வது அறியாமல் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அவள் தீக்குச்சியைக் கிழ்த்தாள்.

'சர்ர்ரக்...'

விவேக்கை புன்னகையோடு பார்த்துக் கொண்டே தன் தலையின் மேல் போட்டுக் கொள்ள அந்த சிறிய சுவாலை அடுத்த விநாடியே ஒரு பெரிய தீப்பிழம்பாய் உருவெடுத்து ஸ்வர்ணமாலாவை சுவைக்க ஆரம்பித்தது.

ஒரு சின்ன அலறல் இல்லை. ஒரு அசைவு இல்லை. நின்ற இடத்திலேயே ஒரு விறகுக் கட்டை மாதிரி ஐந்து நிமிட நேரம் எரிந்துவிட்டு ஒரு கரிக்கட்டையைப் போல் சரிந்தாள் ஸ்வர்ணமாலா.

விவேக் உறைந்துபோன பார்வையோடு நின்றான். ஸ்வர்ணமாலாவின் தீய்ந்துபோன உடலில் இப்போது புகை மட்டும் பொசுங்கிய நாற்றத்தோடு வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.





# 10

இராணுவத்தின் ஏரோநாடிக் கவுன்ஸில் அந்த நள்ளிரவு நேரத்தில் அவசரமாய் கூடியிருந்தது.

கவுன்ஸிலில் மொத்தம் ஏழு பேர். பிரதானமாய் ராமமூர்த்தி உட்கார்ந்திருக்க -

பக்கத்திலேயே விவேக் நெற்றியில் பாண்டேஜ் தெரிய காயம்பட்ட இடம் பஞ்சையும் பாண்டேஜ் துணியையும் ஊடுருவி ரத்தத் தீற்றலாய் தான் இருக்கும் இடத்தைக் காட்டியது.

விவேக் சொல்லிக் கொண்டிருந்தான்.

''டியர் ஸார்ஸ்! இராணுவ சம்பந்தப்பட்ட இந்த முக்கியமான கவுன்ஸில் கூட்டத்தைக் கூட்ட காரணமாக இருந்த திரு.ராமமூர்த்தி அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது ஒரு முக்கியமான கூட்டம். இன்னும் சில மணி நேரத்திற்குள் நாம் கலந்து பேசி ஒரு முக்கியமான முடிவை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். மித்ராராய் மர்டர் சம்பந்தமாய் கைக்குக் கிடைத்த ஸ்வர்ணமாலா இப்போது கரிக் கட்டையாய் மார்ச்சுவரியில் கிடக்கிறாள். கண்ணிமைக்கும் நேரத்தில் அவள் என்னைத் தாக்கிவிட்டு சமையலறைக்குள் ஓடிப்போய் ஒரு தீக்குளியலை மேற்கொள்வாள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அவள் உயிரோடு கைக்குக் கிடைத்து இருந்தால் நிறைய உண்மைகள் வெளியே வந்திருக்கும்...''

கவுன்ஸிலில் இருந்த அதிகாரிகளில் ஒருவர் கேட்டார்.

''மிஸ்டர் விவேக்! ஸ்வர்ணமாலாவின் ஹவுஸ் ஓனர் துபாயில் இருப்பதாகச் சொல்லி அவர் போன் நெம்பர் கொடுத்ததாகச் சொன்

னீர்கள். அந்த போன் நெம்பர்க்கு காண்டாக்ட் செய்து பார்த்தீர்களா...?''

''பார்த்தேன் ஸார்... ஹவுஸ் ஓனர் உன்னிகிருஷ்ணன் பேசினார். வீட்டை முன்பு சயண்டிஸ்ட் புஷ்பநாத்துக்கும் அவர் காலி செய்துவிட்டு போன பிறகு ஸ்வர்ணமாலா என்கிற பெண்ணுக்கும் கொடுத்ததாய் சொன்னார். ஸ்வர்ணமாலா ஒரு தீவிரவாதக் கும்பலைச் சேர்ந்த பெண் என்று தெரிந்ததும் அவர் பலமான அதிர்ச்சிக்கு உள்ளாகியிருக்கிறார். நாளைக்குக் காலையில் சென்னை புறப்பட்டு வரப் போவதாகவும் சொல்லியிருக்கிறார்.''

இன்னொரு அதிகாரி கேட்டார்.

''ஸ்வர்ணமாலா வீட்டை சோதனை செய்து பார்த்ததில் சில முக்கியமான தடயங்கள் கிடைத்ததாக சொன்னீர்கள். அந்த தடயங்கள் என்ன என்பதை சொல்ல முடியுமா?''

விவேக் தான் கையோடு கொண்டு போயிருந்த ஒரு ப்ரீப்கேஸை எடுத்து மேஜையின் மேல் வைத்து திறந்தான். உள்ளேயிருந்து ஒவ்வொன்றாய் எடுத்து வைத்தான்.

ஒரு போலாரைஸ்ட் காமிரா, ஒரு ஃபைன் வ்யூ பைனாகுலர், இரண்டு ரிவால்வர்கள், ஒரு சதுர அடி பரப்புள்ள தோலில் வரையப்பட்ட இந்தியா - சீனா எல்லைகளைக் காட்டும் ஒரு வரைபடம். சின்னதாய் ஒரு டேப் ரிக்கார்டர்.

அதிகாரி கேட்டார்.

''இதில் ஏதாவது நமக்கு உபயோகமாக உள்ளதா?''

விவேக் சொன்னான். ''ஸார்... காமிரா, பைனாகுலர், ரிவால்வர்கள் எல்லாமே சீனாவில் தயாரிக்கப்பட்டவை. தோலில் வரையப் பட்டுள்ள வரைபடம் இந்தியா - சீனாவின் எல்லைப் பகுதிகளைக் குறிக்கிறது.''

ராமமூர்த்தி குறுக்கிட்டு சொன்னார். ''கிடைத்திருக்கிற இந்த தடயங்களை வைத்துப்



பார்க்கும்போது அண்டை நாடான சீனா நம் இராணுவ விவகாரங்களில் மூக்கை நுழைத்து ஏதோ சில்மிஷம் செய்து கொண்டிருக்கிறது என்று நினைக்கிறேன்.''

''யூ...மே...பி...கரெக்ட் ஸார். எனக்கும் அதே சந்தேகம்தான். மினி ஃப்ளைட் ப்ராஜக்ட்டை வடிவமைத்த சயண்டிஸ்ட் புஷ்பநாத்தை சீனா பயன்படுத்திக் கொண்டிருக்கலாம். இந்த டேப் ரிக்கார்டரில் இருந்த ஒரு கேசட்டில் சீன பாஷையில் சொல்லப்பட்ட சில சங்கேத வார்த்தைகள் பதிவு செய்யப்பட்டு உள்ளன. அந்த வார்த்தைகளை மொழி பெயர்த்துச் சொல்வதற்காக ட்ரான்ஸ்லேட்டர் ஒருவரை அனுப்பும்படி ரகசிய விஜிலன்ஸ் பிரிவுக்கு தகவல் கொடுத்து இருக்கிறேன். அது தவிர இந்த தோல் வரைபடத்தில் குறிப்பிட்ட காட்டுப் பகுதிகளுக்கு சிவப்பு மையால் புள்ளிகள் வைத்து ஒவ்வொரு புள்ளிக்கு பக்கத்திலேயே ஒரு ஆங்கில எழுத்தை எழுதியிருக்கிறார்கள். உதாரணத்துக்கு இந்த இடத்தைப் பாருங்கள். இது இந்தியா - சீனா எல்லையின் ஆரம்பத்தில் உள்ள காட்டுப் பகுதி. இந்த காட்டுப் பகுதிக்குப் பெயர் காஜுரா. இந்த காஜுரா உள்ள பகுதிக்கு 'N' என்ற ஆங்கில எழுத்தை குறித்துள்ளார்க்ள. அதேபோல் காஜுராவிலிருந்து 175 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள 'துங்கா நங்கல்' என்கிற காட்டுப் பகுதிக்கு 'J' என்ற ஆங்கில எழுத்தை எழுதி பக்கத்திலேயே ஒரு பச்சைப் புள்ளியையும் வைத்துள்ளார்கள். இன்னொரு காட்டுப் பகுதியான 'டோராகாவ்' என்கிற இடத்துக்கும் 'J' என்ற எழுத்தை எழுதி இரண்டு பச்சைப் புள்ளிகளும் வைத்துள்ளார்கள். இப்படி ஒவ்வொரு இடத்துக்கும் ஒரு ஆங்கில எழுத்து குறியீடாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கும் என்ன பொருள் என்று தெரியவில்லை.''

விவேக் சொல்லிக் கொண்டிருக்கும்போதே முன் மேஜையில் இருந்த இண்டர்காம் மெலிதாக கனைத்துக் கூப்பிட்டது.

ராமமூர்த்தி ரிஸீவரை எடுத்து ''எஸ்'' என்றார். மறுமுனையில் வாட்ச் அண்ட் வார்ட் செக்யூரிடி ஆபீஸர் குரல் கொடுத்தார்.

''ஸார்... ரகசிய விஜிலன்ஸ் பிரிவிலிருந்து ட்ரான்ஸ்லேட்டர் அருண்பிரசாத் வந்து இருக்கிறார். உள்ளே அனுமதிக்கலாமா...?''

''அனுமதியுங்கள்...''

அருண்பிரசாத் வருவதற்காக எல்லோரும் காத்திருந்தார்கள்.

அருண்பிரசாத் வந்தார். நாற்பது வயது. இரவு நேரத் தூக்கத்தை தியாகம் செய்ததில் கண்கள் லேசாய் சிவப்பு வாங்கியிருந்தது. பரஸ்பர அறிமுகம் முடிந்ததும் விவேக் ஸ்வர்ணமாலாவின் வீட்டில் கைப்பற்றப்பட்ட டேப் ரிக்கார்டரை பற்றி சொல்லிவிட்டு அதை ஆன் செய்தான்.

கேசட் ஓடியது.

மூச்சு அடைத்துக் கொண்ட தொனியில் சில சீன வார்த்தைகள். நிறத்தி நிறுத்தி வெளிப்பட, அவைகளை அருண்பிரசாத் கவனமாக காகிதத்தில் குறித்துக் கொண்டார். கேசட் சுழல்வது நின்றதும் அந்த வார்த்தைகளைப் படிக்க ஆரம்பித்தார்.

திரும்பத் திரும்ப நான்கைந்து முறைகள் படித்த பின் அவர் முகம் ஒரு சின்ன கல்வரத்துக்கு உட்பட்டது. நிமிர்ந்தார். கவுன்சிலில் இருந்த எல்லா அதிகாரிகளையும் பொதுவாய் பார்த்துக் கொண்டு சொன்னார்.

''ஸார்... இது ஒரு ஹிட் லிஸ்ட்...''

''ஹிட் லிஸ்ட்...?''

''எஸ்... இந்தியாவில் உள்ள சில முக்கிய இராணுவ அதிகாரிகளையும் அரசியல் தலைவர் களையும் மினி ஃப்ளைட்களை உபயோகப் படுத்தி தீர்த்துக் கட்ட போடப்பட்டுள்ள திட்டம். ஹிட் லிஸ்டில் இருந்த நபர் எக்ஸ் சீஃப் ஏர்மார்ஷன் மித்ராராய்...''



ராமமூர்த்தி பதட்டக் குரலில் கேட்டார். ''லிஸ்ட்டில் இருக்கும் மற்ற அதிகாரிகள் தலைவர்கள் யார் யார்...?''

''லிஸ்ட்டில் உள்ள இரண்டாவது நபர் மேஜர் ஜெனரல். மூன்றாவது நபர் சீஃப் அட்மிரல்... நான்காவது நபர் முன்னாள் இராணுவ மந்திரி ரிகேஷ் குப்தா... ஐந்தாவது நபர் மகக்ள் சக்தி கட்சித் தலைவர் குஷன்லால்....''

அருண்பிரசாத் பெயர்களை படித்துக் கொண்டே போக கவுன்ஸிலில் இருந்த அதிகாரி கள் எல்லோருமே பரஸ்பரம் ஒருத்தரையொருத்தர் யப் பார்வை பார்த்துக் கொண்டார்கள்.

அருண்பிரசாத் தொடர்ந்தார், ''இந்த ஹிட் லிஸ்ட்டில் கண்டுள்ள நபர்கள் மினி ஃப்ளைட் வித் சைலன்ஸர் டைனமைட்டுகளில் சாகடிக்கப் பட வேண்டும் என்பது மேலிடக் கட்டளை.''

''வேறு ஏதாவது செய்தி உண்டா...?''

''இந்த கேசட்டில் சங்கேத வார்த்தைகள் இவ்வளவுதான்...''

விவேக் தோலில் வரையப்பட்டிருந்த அந்த இந்தியா - சீனா எல்லை வரைபடத்தைக் காட்டினான்.

''இந்த வரைபடத்தில் உள்ள சிவப்புப் புள்ளிகள் காட்டுப் பகுதிகளின் பெயர்களைக் குறிக்கின்றன. இந்த பச்சைப் புள்ளிகளுக்கும் அதற்கு பக்கத்தில் குறிக்கப்பட்டுள்ள ஆங்கில எழுத்துக்களுக்கும் என்ன அர்த்தம்...?''

அருண்பிரசாத் வாங்கிப் பார்த்தார். சில நிமிஷங்கள் வரை அந்த வரைபடத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு பொட்டைப் பிதுக்கி தோள்களைக் குலுக்கினார்.

''ஒன்றும் பிடிபடவில்லை. இந்த வரைபட சங்கேதக் குறிகளை ஸ்பை விங்க ஸ்கேன் கம்ப்யூட்டர்க்கு கொடுத்துப் பார்த்தால் விபரங்கள் கிடைக்கலாம்...''



www.cleanindians.com

"உடனடியாக முயற்சி செய்து விபரங்கள் கிடைக்க ஏற்பாடு செய்யுங்கள் மிஸ்டர் அருண்பிரசாத். ஏனென்றால் இந்த மேப்பை வைத்துக் கொண்டுதான் எதிரிகள் எங்கிருந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்கிற விவரத்தை தெரிந்து கொள்ள நம்மால் முடியும்..."

அருண்பிரசாத் எழுந்தார். "மிஸ்டர் விவேக்! நீங்கள் மட்டும் இப்போது புறப்பட்டு வாருங்கள். 'ஸ்பை விங்கி'ற்கு சென்று சங்கேதக் குறிகளை ஸ்கேன் செய்து விபரங்களைக் கொடுக்கும் கம்ப்யூட்டர்க்கு இந்த மேப்பின் குறிப்புகளை ஃபீட் செய்து பார்க்கலாம்.."

கவுன்ஸில் மெம்பர்கள் தலையசைக்க இருவரும் புறப்பட்டார்கள். புறப்படும்போது விவேக் ராமமூர்த்தியிடம் சொன்னான்.

"ஸார்... ஹிட் லிஸ்ட்டில் இடம் பெற்றுள்ள எல்லா அதிகாரிகளுக்கும், அரசியல் தலைவர்களுக்கும் அண்டர் க்ரௌண்ட் செல்லர் ப்ரொடக்ஷன் தரப்பட வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை செக்யூரிடி கவுன்ஸில் இந்த நிமிஷத்தில் இருந்தே செய்தால்தான் அவர்களைக் காப்பாற்ற முடியும்..."

"அதைத்தான் இப்போது செய்யப் போகிறோம். நீங்கள் அருண்பிரசாத்தோடு சென்று மேப்பில் இருக்கும் சங்கேதக் குறிகளை கம்ப்யூட்டர்க்கு கொடுத்து தெளிவுபடுத்திக் கொண்டு வாருங்கள்... இந்த இரவு விடிவதற்குள் நாம் எதிரிகளை யார் என்று அடையாளம் தெரிந்து கொண்டாக வேண்டும்..."

விவேக்கும் அருண்பிரசாத்தும் புறப்பட்டார்கள்.



## 11

நள்ளிரவு இரண்டு மணி.



ஐ.எஸ்.டபிள்யூ என்று அழைக்கப்படும் இன்டென்ஸிவ் ஸ்பை விங் கட்டிடம்.

கட்டிடத்துக்கு உள்ளே இருந்த கம்ப்யூட்டர் அறைக்குள் இருந்தார்கள் விவேக்கும், அருண்பிரசாத்தும்.

பல்வேறு சைஸ்களில் கம்ப்யூட்டர்கள் வெவ்வேறு திசைகளைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்க, எல்லாவற்றுக்கும் எம்.டி.யைப் போல் இருந்த அந்த பெரிய டூப்பர் ப்ளஸ் சூப்பர் கம்ப்யூட்டர்க்கு முன்பாய் உட்கார்ந்த அருண்பிரசாத் கம்ப்யூட்டரை உயிர்க்கு கொண்டு வந்து, கோட் வேர்ட்ஸ் டிடெக்டரையும் மேப்பின் சங்கேதச் குறிகளையும் கம்ப்யூட்டர்க்கு புகட்டினார்.

கம்ப்யூட்டர் அவைகளைச் சாப்பிட்டுவிட்டு ஜீரணிக்க ஆரம்பித்தது.

மானிட்டரில் 'சர்ச்சிங்' என்ற ஒரு வார்த்தைகளை சிவப்பு நிறத்தில் ஒட்ட வைத்துவிட்டு மேப்பில் இருந்த சங்கேதக் குறிகளுக்கு விடை தெரிந்து கொள்ள ப்ரயத்தனம் செய்ய ஆரம்பித்தது.

நிமிஷங்கள் கரைந்தன.

இரண்டு மணி இரண்டரையாயிற்று. மூன்றாயிற்று... நான்காயிற்று.

கம்ப்யூட்டர் மேப்பில் உள்ள சங்கேத வார்த்தைகளுக்கு அர்த்தம் கண்டுபிடிக்க முடியாமல் திணறி கம்ப்யூட்டர் 'Not Found' என்ற வார்த்தையை தன் மானிட்டர் திரைக்கு கொடுத்துவிட்டு இயக்கங்களை நிறுத்திக் கொண்டு மௌனம் சாதித்தது.

அருண்பிரசாத் விவேக்கை சோர்வான கண்களோடு ஏறிட்டார்.

"ஸாரி மிஸ்டர் விவேக்! இந்த மேப்பின் சங்கேத வார்த்தைகள் கம்ப்யூட்டர்க்கு பிடிபடவில்லை. இனி நாம்தான் பல வழிகளில் யோசித்துப் பார்க்க வேண்டும். ஒரு இரண்டு

மணி நேரமாவது ஓய்வு எடுத்துக் கொண்டு பின்பு யோசிக்க ஆரம்பித்தால் நம் மூளைக்கு ஏதாவது ஸ்பார்க் ஆகலாம். இந்த மேப்பின் பிரதி ஒன்றை என்னிடம் கொடுத்துவிடுங்கள். நீங்கள் ஒன்றை கொண்டு போங்கள். இரண்டு பேருமே யோசிப்போம். மறுபடியும் காலை ஏழு மணிக்கு சந்திப்போம். உங்கள் மனதுக்கு தோன்றியதை என்னிடம் சொல்லுங்கள். எனக்கு தோன்றியதை உங்களிடம் சொல்கிறேன். இப்படி நம் எண்ணங்களை பரஸ்பரம் பரிமாறிக் கொண்டால் அந்த சங்கேத வார்த்தைகள் நமக்கு பிடிபடலாம்.''

விவேக் தளர்வாய் தலையசைத்துவிட்டு மேப்பின் பிரதியொன்றை கையில் எடுத்துக் கொண்டு வீடு திரும்பியபோது விடியற்காலை ஐந்தரை மணி.

வைகறையின் வெளிச்சம் மரங்களின் உச்சியில் ஒட்டியிருக்க, ரூபலா தண்ணீர் தெளிக்கப்பட்ட ஈர வாசலில் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள்.

விவேக் காரை விட்டு இறங்க, கேட்டாள்.

''என்ன ராத்திரி பூராவும் வைகுண்ட ஏகாதசியை கொண்டாடிட்டு வர்றீங்க போலிருக்கு.''

''இன்னும் ரெண்டு நாளைக்கு இப்படித்தான் ரூபி...! நான் ரெண்டு மணி நேரமாவது தூங்கணும். எழுப்பி டிஸ்டர்ப் பண்ணாதே. போன் கால் ஏதாவது வந்தா விஷயம் என்னான்னு ஒரு பேப்பர்ல நோட் பண்ணி வெச்சுடு.''

''ஏழு மணிக்கு எழுப்பினா போதுமா?''

''போதும்.''

விவேக் உள்ளே போய் தன் படுக்கை யறைக்குள் நுழைந்து கட்டிலில் சாய்ந்து தலைமாட்டில் இருந்த ஃபேன் ஸ்விட்ச்சைத் தட்டிவிட்டு கண்களை மூடினான். தூக்கம் கெட்டதில் மிளகாய் பழமாய் கண்கள் எரிந்தன.

விவேக் தூங்க முயன்றான்.



முடியவில்லை.

ஹிட் லிஸ்ட்டும் மேப்பின் சங்கேதக் குறிகளும் மாறி மாறி மூளையை உறுத்தியது.

'மினி ஃப்ளைட்களும் சைலன்ஸர் டைனமைட்களும் உற்பத்தியாகிற மூல ஸ்தானம் எது என்று கண்டுபிடித்தேயாக வேண்டும். இல்லாவிட்டால் மித்ராராய் பலியானது போல் ஹிட்லிஸ்ட்டில் இருக்கிற மற்றவர்களும் பலியாக வேண்டியதுதான்.''

விவேக் தூக்க கலக்கமாய் யோசனையில் அமிழ்ந்து கொண்டிருக்கும்போதே அந்த சத்தம் கேட்டது.

''கர்ர்ரக்.... கர்ர்ரக்...''

'அது என்ன சத்தம்...?'

விவேக் கண்களைத் திறந்து பார்க்க சுவரில் ஃபேன் காற்றுக்கு அந்த மாதக் காலண்டர் லேசாய் ஆடிக் கொண்டிருந்தது. பனிரெண்டு மாதங் களும் ஒரு பெரிய தாளில் அச்சிடப்பட்ட அந்த காலண்டரின் கீழ்ப்பகுதியில் வெள்ளையாய் விடப்பட்டிருந்த 'என்கேஜ்மெண்ட்ஸ்' பகுதியில் ரூபலா பால்பாய்ண்ட் பேனாவால் சில முக்கிய நிகழ்ச்சிகளைக் குறித்து வைத்திருந்தாள்.

ரூபலா வந்தாள்.

''என்ன காலண்டரையே பார்த்துட்டிருக் கீங்க... தூக்கம் வரலையா...?''

''அந்த காலண்டர் பாடற தாலாட்டை கொஞ்சம் நிறுத்து ரூபி.''

ரூபலா காலண்டரை நோக்கிப் போய் அதன் ஆட்டத்தை நிறுத்துவதற்காக செல்லோ டேப்பை எடுத்து கொஞ்சம் போல் வெட்டி காலண்டரின் இரண்டு முனைகளிலும் ஒட்டினாள்.

அவள் அதை ஒட்டிக் கொண்டிருக்கும் போதே விவேக்கின் மூளைப் பிரதேசத்தில் ஒரு மின்னல் வெட்ட ஒரு நேர்க்கோடு மாதிரி எழுந்து உட்கார்ந்தான்.



www.cleanindians.com

காலண்டரிலிருந்து திரும்பிய ரூபலா ஆச்சரியப்பட்டாள்.

''என்னங்க... எந்திரிச்சுட்டீங்க...?''

''ரூபி... என்னோட ப்ரீப்கேஸை எடு...''

ரூபலா எடுத்துக் கொடுத்தாள். விவேக் அதன் லாக்கர்களை விடுவித்து உள்ளே இருந்த மேப்பை எடுத்து ப்ரீப்கேஸ் மேல் பரப்பி வைத்துக் கொண்டு அதில் இருந்த சங்கேதக் குறிகளை ஒரு புதுப் பார்வையோடு பார்க்க ஆரம்பித்தான்.

ஏதோ புரிகிற மாதிரி இருந்தது.



## 12

அதே நாள். காலை ஏழு மணி.

ஏரோநாட்டிக் செக்யூரிடி கவுன்ஸில் மறுபடியும் கூடியிருக்க ராமமூர்த்தி உள்பட அங்கிருந்த ஏழு பேரும் விவேக் முகத்தையே ஆர்வமாய் பார்த்தபடி உட்கார்ந்திருந்தார்கள்.

ராமமூர்த்தி கேட்டார். ''மிஸ்டர் விவேக்! மேப்பில் இருந்த அந்த சங்கேத வார்த்தைகளுக்கு அர்த்தம் கண்டுபிடித்துவிட்டதாக டெலிபோனில் சொன்னீர்கள். அதைப் பற்றி தெரிந்து கொள்ள இங்கேயிருக்கிற அனைவருமே ஆவலாய் காத்துக் கொண்டு இருக்கிறோம். உங்கள் விளக்கத்தை நீங்கள் சொல்லலாம்...''

விவேக் அந்த மேப்பை மேஜையின் மேல் பிரித்து வைத்துக் கொண்டான்.

''ஸார்... இந்த மேப்பில் குறிப்பிட்டுள்ள ஆங்கில எழுத்துக்களைப் பாருங்கள். ஆங்கிலத்தில் உள்ள மொத்தம் 26 எழுத்துக்களில் மொத்தம் எட்டு எழுத்துக்களையே உபயோகித்து உள்ளார்கள். அதிலும் அந்த எட்டு எழுத்துக்களை பனிரெண்டு இடங்கில் உபயோகித்து



இருக்கிறார்கள். இந்த எட்டு எழுத்துக்கள் எது எது என்று லிஸ்ட் செய்து பார்த்தால் A, F, M, J, S, O, N, D என்று வருகிறது. இதில் சில எழுத்துக்களுக்கு மட்டும் பச்சை நிறத்தில் புள்ளிகள் வைக்கப்பட்டுள்ளன. அந்தக் குறிப்பிட்ட மூன்று எழுத்துக்கள் எது என்று பார்த்தால் J, M, A. இந்த எழுத்துக்களில் 'J' மூன்று பச்சைப் புள்ளிகளும் 'M' க்கு இரண்டு பச்சைப் புள்ளிகளும் 'A' இரண்டு பச்சைப் புள்ளிகளும் கொடுக்கப்பட்டிருக்கிறது.''

விவேக் என்ன சொல்ல வருகிறான் என்பதை எல்லோரும் ஆர்வமாய் கவனித்துக் கொண்டிருக்க விவேக் தொடர்ந்தான்.

''ஸார்...! இந்த மேப்பில் குறிக்கப்பட்டிருக்கும் எட்டு ஆங்கில எழுத்துக்களும் பனிரெண்டு மாதங்களின் பெயர்களில் உள்ள முதல் எழுத்தைக் குறிக்கிறது. 'F' பிப்ரவரி, 'S' செப்டம்பர், 'O' அக்டோபர், 'N' நவம்பர், 'D' டிசம்பர். 'J'க்கு பக்கத்துல ஒரு பச்சை நிற புள்ளி இருந்தா ஜனவரி, இரண்டு பச்சைப் புள்ளிகள் இருந்தால் ஜூன். மூன்று பச்சைப் புள்ளிகள் இருந்தால் ஜூலை. 'J' வரிசையில் ஜனவரி முதலில் வருவதால் அதற்கு ஒரு பச்சைப் புள்ளி ஜூன் இரண்டாவதாக வருவதால் இரண்டு பச்சைப் புள்ளிகள். ஜூலை மூன்றாவதாக வருவதால் மூன்று பச்சைப் புள்ளிகள். இதே மாதிரியான 'M' என்கிற ஆங்கில எழுத்தும் ஒரு பச்சைப் புள்ளியும் இருந்தால் அது மார்ச், மார்ச்சுக்கு பின் மே வருவதால் அதற்கு இரண்டு பச்சைப்புள்ளி. இங்கே 'A'யும் ஒரு பச்சைப் புள்ளியும் இருக்கிறது. இது ஏப்ரல், ஏப்ரலுக்குப் பிறகு ஆகஸ்ட் வருவதால் அதற்கு இரண்டு பச்சைப்புள்ளி.''

ராமமூர்த்தி குறுக்கிட்டார்.

''இட்ஸ்... ஓ....கே... நீங்கள் சொல்வது போல் இந்த மேப்பில் இருக்கும் ஆங்கில எழுத்துக்கள் மாதங்களின் பெயர்களைக் குறிப்பதாகவே இருக்கட்டும். இந்த சங்கேதக் குறிப்புகளிலிருந்து

நமக்கு கிடைத்த உபயோகமான தகவல் என்ன...?''

''அதையும் 'கெஸ்' செய்துவிட்டேன் ஸார்.''

''என்ன... சொல்லுங்கள்...?''

''நமக்கு இந்த மேப் கிடைத்தது ஸ்வர்ணமாலா வீட்டில். அவள் அவளுடைய தீவிரவாதக் கும்பலை சுலபமாய் தொடர்பு கொள்வதற்க எந்த எந்த மாதம் எந்த எந்த காட்டுப் பகுதியில் இருப்போம் என்பதை தெரிவிப்பதற்காக, அந்த காட்டுப்பகுதியின் பெயர்க்குப் பக்கத்தில் மாதத்தின் முதல் எழுத்தைப் போட்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு இந்த மேப்பில் உள்ள காஜூரா காட்டுப்பகுதிக்குப் பக்கத்தில் 'N' என்ற எழுத்தை போட்டிருக்கிறார்கள். 'N' என்றால் நவம்பர் மாதம். ஸோ வருஷத்தில் ஒவ்வொரு நவம்பர் மாதமும் தீவிரவாதிகள் இந்த காஜூரா காட்டுப் பகுதியில்தான் இருப்பார்கள். அதேபோல் துங்காநங்கல் என்கிற காட்டுப் பகுதிக்கு 'J' ஆங்கில எழுத்தை எழுதி பக்கத்திலேயே ஒரு பச்சைப் புள்ளியையும் வைத்துள்ளார்கள். ஸோ ஜனவரி மாதங்களில் தீவிரவாதிகளின் இருப்பிடம் துங்காநங்கல் காட்டுப்பகுதி. அதன்படி பார்த்தால் இப்போது மே மாதம். மே மாதத்துக்கு குறியீடு 'M' என்கிற எழுத்து இரண்டு பச்சைப் புள்ளிகளும். அது குறிக்கிற இடம் 'மன்ஷேர்' பாரஸ்ட் ஏரியா.''

கவுன்சிலில் உட்கார்ந்திருந்த ஏழு பேர்களும் ராமமூர்த்தி உள்பட எழுந்து நின்று மெலிதாய் கைகைளத் தட்டினார்கள்.

''ஃபெண்டாஸ்டிக் மிஸ்டர் விவேக். இதை எப்படி கண்டுபிடித்தீர்கள்...? கோட்வேர்ட் சம்பந்தப்பட்ட புத்தகத்தில் படித்து தெரிந்து கொண்டீர்களா...?''

''இல்லை ஸார்... இந்த மேப்பில் இருக்கும் இவ்வளவு பெரிய ரகசியத்தைப் புரிந்து கொள்ள காரணமாக இருந்தது என்னுடைய அறையில்



மாட்டியிருந்த ஒரு காலண்டரும் அந்த மாத காலண்டரின் என்கேஜ்மெண்ட் பகுதியில் என் மனைவி ரூபலா எழுதி வைத்திருந்த சில குறிப்புகளும்தான்.''

''உங்கள் மனைவி அப்படி என்ன எழுதி வைத்து இருந்தார்கள்...?''

''ஸார்... பனிரெண்டு மாதங்களும் அச்சிட்ட காலண்டர் அது. என்கேஜ்மெண்ட் காத்தில் என் மனைவி அட்டெண்ட் செய்யப்போகும் திருமணங்களையும் உறவினர் வீட்டு விசேஷங்களையும் ஷார்ட் பார்மில் எழுதி வைத்து இருந்தாள். உதாரணத்திற்கு JY 20 சசிரேகா கல்யாணம். JE - 14 கிளப் மீட்டிங், AL - 5 மதுரை ஃபங்க்ஷன், AT - 17 எல்.ஐ.ஸி.ப்ரிமீயம். நான் விபரம் கேட்டதற்கு ஜனவரிக்கு JY ஜூன் மாதத்துக்கு JE என்றும் AL க்கு ஏப்ரல் என்றும் சொல்ல, அந்த காலண்டரை பார்த்துக் கொண்டிருக்கும்போதே எனக்குள் ஏதோ புரிகிற மாதிரி இருந்தது. மேப்பை எடுத்து வைத்துக் கொண்டு சில நிமிஷங்கள் மூளையை கசக்கிச் கொண்டு யோசித்துப் பார்த்ததில் இந்த சூட்சுமம் பிடிபட்டது.''

ராமமூர்த்தி விவேக்கின் கைகளைப் பற்றிக் கொண்டு குலுக்கினார்.

''மிஸ்டர் விவேக்! எந்த ஒரு சிக்கலான விஷயமும் உங்களால் சீக்கிரமே ஒரு முடிவுக்கு வரும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதை இப்போது இங்கே கண்கூடாகவே பார்த்துக் கொண்டிருக்கிறேன். இது இராணுவ சம்பந்தப்பட்ட விஷயம் என்றாலும் நாங்கள் கூட நினைத்துப் பார்க்க முடியாத கோணத்தில் நீங்கள் நினைத்துப் பார்த்து மேப்பின் சங்கேத வார்த்தைகளுக்கு விடை கண்டுபிடித்துவிட்டீர்கள்...''

''ஸார்... என்னைப் பாராட்டிக் கொண்டிருப்பதற்கு இது நேரமில்லை. மினி ஃப்ளைட்களையும், சைலன்ஸர் டைனமைட்களையும் தயாரித்து நாசவேலையில் ஈடுபட்டுக்

கொண்டிருக்கும் அந்த பயங்கர தீவிரவாதிகள் இப்போது இந்திய சீன எல்லையில் உள்ள மன்ஷோர் ஃபாரஸ்டிக் ஒரு இராணுவ முகாம் போல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஹிட்லிஸ்ட்டில் தீர்மானம் செய்து வைத்துள்ள இராணுவ அதிகாரிகள் கொல்லப்படுவதற்கு முன்பு நாம் அவர்களை ஒன்று உயிரோடு பிடிக்க வேண்டும். இல்லையென்றல் அழிக்க வேண்டும்.''

''மிஸ்டர் விவேக்...! நீங்கள் சொல்வது சரிதான்...! அந்த தீவிரவாதிகளை வேட்டையாடி பிடிக்க இந்த நிமிடத்திலிருந்தே ஒரு திட்டத்தை தயாரிக்க ஆரம்பித்துவிட்டோம்...''

விவேக் நிமிர்ந்தான். ''என்ன திட்டம் ஸார்...?''

''மிஸ்டர் விவேக்! மன்ஷோர் காட்டுப் பகுதியில் நம் தேசத்திற்கு எதிரான தீவிரவாதிகள் இருப்பதை ட்ரேஸ் செய்துவிட்டோம். ஆனால் உடனடியாக அந்தக் காட்டுப் பகுதிக்கு நாம் இராணுவத்தை அனுப்ப முடியாது. இராணுவத்தை அனுப்புவதற்கு முன்னால் பைலட் ஸ்க்வாட் ஒன்றை அனுப்பி வேவு பார்க்க வேண்டும்.''

''பைலட் ஸ்க்வாடா...?''

''எஸ்... இந்த ஸ்க்வாடில் ஐந்து பேர் இருப்பார்கள். விமானப்படை சர்வீஸில் வீரமும் விவேகமும் வாய்க்கப் பெற்றவர்களை வரிசைப் படுத்தி லிஸ்ட் வைத்து இருக்கிறோம். அதிலிருந்து ஒரு ஐந்து பேரைத் தேர்ந்து எடுத்து அனுப்புவோம்.''

சொன்ன ராமமூர்த்தி பக்கத்தில் இருந்த இண்டர்காமில் தொடர்பு கொண்டார்.

''பைலட் ஸ்க்வாட் சீஃப்பா?''

''எஸ்... ஸார்...''

''ஸ்பை விங்க்'கில் தேர்ச்சி பெற்றவர்கள் மொத்தம் எத்தனை பேர் லிஸ்டில் இருக்கிறார்கள்...?''



''எழுபத்தியேழு பேர் ஸார்...''

''அந்த லிஸ்ட்டை எடுத்துக் கொண்டு உடனே புறப்பட்டு கவுன்ஸிலுக்கு வாருங்கள். இதுபற்றிய விஷயம் வெளியே யார்க்கும் தெரியக் கூடாது.''

''எஸ்... ஸார்...''

ராமமூர்த்தி ரிஸீவரை வைத்த பத்தாவது நிமிடம் பைலட் ஸ்க்வாட் ஷ்யாம் தேவ் கையில் ஒரு ஃபைலோடு வேகவேகமாய் வந்துசேர்ந்தார்.

ராமமூர்த்தி ஃபைலை வாங்கி புரட்டிக் கொண்டே கேட்டார்.

''மிஸ்டர் ஷ்யாம்தேவ்! இந்தியா - சீனா எல்லையில் இருக்கும் மன்ஷோர் ஃபாரஸ்ட்டில் நம் பாரத தேசத்துக்கு எதிரான எதிர் நாட்டு தீவிரவாதிகள் இராணுவ பாசறைகளை அமைத்துக் கொண்டு பதுங்கியிருக்கிறார்கள். இது நமக்கு இப்போது கிடைத்துள்ள செய்தி. இந்த செய்தி உண்மையா 'பொய்யா என்று தெரிந்து கொள்ள 'மன்ஷோர்' ஃபாரஸ்ட்டுக்கு ஸ்பை லிங்க்'லிருந்து ஒரு ஐந்து பேரை தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டும். யார் யாரை அனுப்பலாம்? உங்களுக்கென்று ஏதாவது தனிப்பட்ட யோசனை உள்ளதா?''

ஷ்யாம்தேவ் சொன்னார். ''லிஸ்ட்டில் உள்ள ஏழுபத்தியேழு பேருமே எஃபிசியன்ஸி டெஸ்ட்டில் டாப் ரேங்கில் இருப்பவர்கள். இதில் நீங்கள் எந்த ஐந்து பேரை தேர்ந்து எடுத்தாலும் அவர்கள் 'மன்ஷோர்' பாரஸ்ட்டுக்கு சென்று நாம் கொடுக்கும் வேலையை மிகவும் திறம்பட செய்துவிட்டு வருவார்கள்.''

ராமமூர்த்தி அந்த லிஸ்ட்டைப் படித்துப் பார்த்து மற்ற கவுன்ஸில் அதிகாரிகளையும் கலந்து பேசிய பின் ஐந்து பேர்களை தேர்வு செய்து பெயர்களைப் படித்தார்.

''கதிர், சைலேஷ்பாபு, மோகன் பிரசாத், விக்டர், விமல்.''

விவேக் கேட்டான்.

''இவர்கள் என்றைக்கு மன்ஷேர் ஃபாரஸ்ட்டுக்கு புறப்படப் போகிறார்கள்...?''

''இன்று இரவு பத்து மணிக்கு மேல் பதினோரு மணிக்குள் அவர்கள் ஐந்து பேரும் இந்திய - சீன எல்லையில் உள்ள மன்ஷேர் ஃபாரஸ்ட்டுக்குள் ஊடுருவிவிடுவார்கள். அவர்கள் வேவு பார்த்து தீவிரவாதிகள் எந்த இடத்தில் இருக்கிறார்கள் என்பதை தெரியப்படுத்தியதும் நாம் இராணுவ நடவடிக்கையைத் தொடங்கிவிடலாம். முதலில் இந்த தேர்ந்து எடுக்கப்பட்ட ஐந்து பேர்க்கும் தகவல் கொடுத்து இங்கே வரச் சொல்லுவோம்...'' சொன்ன ராமமூர்த்தி ஷ்யாம்தேவைப் பார்க்க அவர் தன்னிடமிருந்த மினி வயர்லஸ் டெலிபோனை உயிர்ப்பித்துக் கொண்டு ஸ்பை லிங்குக்குத் தகவல் கொடுக்க, அடுத்த பதினைந்தாவது நிமிடம் அந்த துடிப்பான இளைஞர்கள் ஐந்து பேரும் கவுன்ஸிலுக்கு முன்பாய் விறைப்பாய் நின்றிருந்தார்கள். ஐந்து பேருமே 25 வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள். கண்களில் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற ஒரு ஒளிக்கீற்று தெரிந்தது.

அவர்களிடம் ராமமூர்த்தி மன்ஷேர் ஃபாரஸ்ட்டுக்கு போக வேண்டியது பற்றி சொன்னதும் அந்த ஐந்து பேரும் தங்களுடைய முஷ்டிகளை உயர்த்தி நெஞ்சுப் பகுதியில் வைத்துக் கொண்டு ஒருமித்தக் குரலில் உணர்ச்சி பூர்வமாய் சொன்னார்கள்.

''வீ வில் டூ இட் ஸார்...''



## 13

ரூபலா ஒரு நிம்மதி பெருமூச்சு விட்டாள்.

''அப்பாடி...! எப்படியோ அந்த மித்ராராய் மர்டர் கேஸ் உங்க கையை விட்டு



இராணுவத்துக்கு போயாச்சு. இனிமே நீங்க நிம்மதியா உங்க டிபார்ட்மெண்ட் வேலை மட்டும் பார்க்கலாம்... ராத்திரியில நிம்மதியா ஒரு நாலு மணி நேரமாவது தூங்கலாம்...''

நேரம் இரவு பதினோரு மணி. விவேக் மேஜை விளக்கைப் பொருத்திக் கொண்டு ஏதோ புத்தகம் ஒன்றை படித்தக் கொண்டிருந்தான். ரூபலா பேசிய பேச்சில் கலைந்தவன் பார்வையை தற்காலிகமாய் புத்தகத்திலிருந்து பெயர்த்து ரூபலாவை ஏறிட்டான்.

''ரூபி...! நீ தூக்கத்தைப் பற்றி கவலைப் படறியே... எல்லைப் பகுதியில் நம்ம நாட்டைக் காப்பாத்தறதுக்காக ஒரு நிமிஷம் கூட கண்ணை மூடாமே தோள்ல துப்பாக்கியை சுமந்துகிட்டு காவல் காக்கிற இராணுவ வீரர்களைப் பற்றி நீ என்னிக்காவது கவலைப்பட்டிருக்கியா...?''

''அது... அவங்க ட்யூட்டி.''

''ட்யூட்டியாகவே இருந்தாலும் அதுல எவ்வளவு பெரிய தியாகம் ஒளிஞ்சிட்டிருக்கு தெரியுமா...? நாம நிம்மதியா சாப்பிட்டு... நிம்மதியா தூங்கறதுக்குக் காரணம் அந்த இராணுவ வீரர்கள்தான். நாம அந்த ஆண்டவனுக்கு நன்றி சொல்ல மறந்தாலும் பரவாயில்லை. எல்லையில் இருக்கிற வீரர்களுக்கு நன்றி சொல்ல மறக்கவே கூடாது.''

ரூபலா தன் இடுப்பில் இரண்டு கைகளையும் வைத்துக் கொண்டு தலையைச் சாய்த்து விவேக்கையே பார்த்தாள்.

விவேக் கேட்டான்.

''ரூபி! என்ன அப்படி பார்க்கிறே...!''

''இந்த தேசத்து மேல உங்களுக்கு இருக்கிற அக்கறையிலும் பக்தியிலும் ஒரு பர்சண்ட் ஒரே ஒரு பர்சண்ட் இந்த நாட்டு அரசியல் தலைவர்களுக்கு இருந்தா போதும், இந்தியா எப்பவோ முன்னேறிய நாடுகள் வரிசையில் முதலாவதா வந்து மூக்கை நீட்டியிருக்கும்...''

ரூபலா சொல்லிக் கொண்டிருக்கும்போதே டெலிபோன் எலக்ட்ரானிக் கனைப்பு கத்தியது.

விவேக் ரிஸீவரை எடுத்தான்.

''எஸ்...''

மறுமுனையில் ஒலித்த குரலைக் கேட்டதும் லேசாய் முகம் மாறி பதட்டமானான்.

''சொல்லுங்கள் ஸார்...''

''...''

''இப்பொழுதே வர வேண்டும்...?''

''...''

''இதோ...! புறப்பட்டு விட்டேன்'' விவேக் ரிஸீவரை வைத்துவிட்டு எழுந்தான்.

''ரூபி...''

''என்னங்க... போன்ல யார்ங்க...?''

''இராணுவ அமைச்சரோ சீனியர் செக்ரட்ரி மெட்ராஸ் வந்து ஹோட்டல் ஸீ லார்டில் தங்கியிருக்கார். என்னை உடனே புறப்பட்டு வரச் சொல்றார்...''

''எதுக்கு... அதுவும் இந்த நேரத்துல...?'

''தெரியலை... பட் சரியான காரணம் இல்லாமே டெல்லியிலிருந்து வந்திருக்க மாட்டார்...''

ரூபலா தன் தலையில் கை வைத்துக் கொண்டு சொன்னாள், ''இன்னிக்கும் உங்களுக்கு வைகுண்ட ஏகாதசிதான்...''

விவேக் உடை மாற்றிக் கொண்டு கிளம்பினான். அரைமணி நேர கார் பயணத்தில் பெசண்ட் நகர் பீச்சுக்குப் பக்கத்தில் புதிதாய் கட்டப்பட்டிருந்த அந்த ஸீ லார்ட் ஹோட்டலுக்கு வந்து சேர்ந்தான்.

இராணுவ அமைச்சரின் சீஃப் செக்ரட்ரி தான் தங்கியிருந்த சூட் என்னும் அந்த பெரிய அறைக்குள் பதட்டமாய் நடை போட்டுக் கொண்டிருந்தார்.





## 14

சீஃப் செக்ரட்டரிக்கு முன்பாய் உட்கார்ந்த விவேக் மிக மெல்லிய குரலில் கேட்டான்.

''சார்...! என்னை அழைத்ததுக்குரிய காரணத்தை நான் தெரிந்து கொள்ளலாமா...?''

சீஃப் செக்ரட்டரி தன் சதைப் பிடிப்பான உருண்டை முகத்தை இரண்டு கைகளாலும் வழித்துக் கொண்டு பின் நிதானமான குரலில் பேச ஆரம்பித்தார்.

''மிஸ்ர் விவேக்! மித்ராராய் மர்டர் விஷயத்தில் நீங்கள் ஆர்வம் எடுத்துக் கொண்டு கேஸை துப்புத் துலக்கி மினி ஃப்ளைட் சம்பந்தப் பட்ட விவகாரத்தை வெளியே கொண்டு வந்து, புரியாத புதிராக இருந்த மேப்பின் சங்கேத வார்த்தைகளுக்க அர்த்தம் கண்டுபிடித்து, தீவிரவாதிகள் தற்சமயம் மன்ஷேர் ஃபாரஸ்ட்டில் இருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளீர்கள். அவர்களை வேவு பார்க்க ஐந்து பேர் கொண்ட பைலட் ஸ்க்வாட் ஒன்றையும் இரண்டு மணி நேரத்துக்கு முன்பாய் 'மன்ஷேர்' ஃபாரஸ்ட் ஏரியாவுக்கு அனுப்பி வைத்துவிட்டோம். அந்த பைலட் ஸ்க்வாடும் இப்போது மன்ஷேர் ஃபாரஸ்ட்டுக்குள் ஊடுருவி விட்டது. இந்த சூழ்நிலையில்தான் இராணுவ பாதுகாப்புத் துறைக்கு இண்டர்நேஷனல் ஸ்பை ஏஜென்ஸி யிருந்து ஒரு தகவல் கிடைத்துள்ளது.''

''என்ன தகவல் ஸார்...?''

''மிஸ்டர் விவேக்...! ஐந்து பேர் அடங்கிய பைலட் ஸ்க்வாடை மன்ஷேர்க்கு நாம் ரகசியமாக அனுப்பி வைத்த விஷயம் இண்டர்நேஷனல் ஸ்பை ஏஜென்ஸிக்கு எப்படியோ தெரிந்து விட்டது. நமது நடவடிக்கையை ஆதரிக்கிற

அவர்கள் நமக்கு ஒரு எச்சரிக்கையும் கொடுத்துள்ளார்கள்.''

விவேக் குழப்பமாய் பார்க்க, சீஃப் செக்ரட்ரி வியர்த்த முகத்தோடு தொடர்ந்தார்.

''நாம் இப்போது அனுப்பி வைத்துள்ள பைலட் ஸ்க்வாடில் உள்ள ஐந்து பேரில் ஒருவன் மன்ஷோர் ஃபாரஸ்ட்டில் இருக்கும் தீவிரவாத கும்பலுக்கு ஆதரவாக இருப்பவனாம். 'கட்டுச் சோற்றுக்குள் எலியைக் கட்டி வைத்து அனுப்பி யிருக்கிறீர்களே'' என்று இண்டர்நேஷனல் ஸ்பை ஏஜென்ஸி கிண்டல் செய்துள்ளது.''

விவேக் திடுக்கிட்டான்.

''இண்டர்நேஷனல் ஸ்பை ஏஜென்ஸி சொன்னால் அது ஹண்ட்ரண்ட் பர்ஸண்ட் சரியாக இருக்கும் ஸார். நாம் அனுப்பிய ஐந்து பேர்கள் கதிர், சைலேஷ் பாபு, மோகன்பிரசாத், விக்டர், விமல், இவர்களில் யார் அந்த ப்ளாக் லெக்? ஐ.எஸ்.ஏ. அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையா?''

''இல்லை... ஐந்து பேரில் யாரோ ஒருவர் என்பதை மட்டும் தீர்மானமாக சொல்லி யிருக்கிறது.''

விவேக் மோவாயை கவலையாய் தாங்கிக் கொண்டான். ''ஸாரி... ஐ.எஸ்.ஏ. சொன்னது உண்மையாக இருக்கும் பட்சத்தில் நாம் அந்த ஐந்து பேரை எதற்காக அனுப்பினோமோ அந்த காரியம் நடக்காதே... உடன் சென்ற மற்ற நான்கு பேர்களும் நிச்சயமாக அந்த 'மன்ஷோர் ஃபாரஸ்ட்டில் கொல்லப்பட்டு விடுவார்கள்...''

''அதில் சந்தேகமேயில்லை...''

''அப்படியானால் ராணுவத்தின் மூலம் அவர்களைக் காப்பாற்ற உங்கள் நடவடிக்கை என்ன?''

''ராணுவத்தின் மூலமாக நடவடிக்கை எடுப்பதாக இருந்தால் இந்நேரம் ராணுவ



அமைச்சர் யார்க்கும் தெரியாமல் அந்தக் காரியத்தைச் செய்து முடித்திருப்பார்.''

''பின்னே வேற என்ன நடவடிக்கை சார்...?''

சீஃப் செக்ரட்ரி குரலைத் தாழ்த்திக் கொண்டார். ''மிஸ்டர் விவேக்... நம் ராணுவத்தின் எல்லா மட்டங்களிலும் இப்போது ப்ளாக் லெக்ஸ் ஊடுருவியிருக்கிறார்கள். சாதாரண சோல்ஜரில் இருந்து மூத்த ராணுவ அதிகாரிகள் வரை இந்த ப்ளாக் லெக்ஸ் உண்டு. நம் நாட்டுக்கு யார் விசுவாசமாக இருக்கிறார்கள்... யார் பாதகமாக இருக்கிறார்கள் என்பதில் பெரியதொரு குழப்பம். எனவே ராணுவத்தில் இருக்கிற எந்த ஒரு நபரையும் மன்ஷோர் ஃபாரஸ்ட்டுக்கு அனுப்ப முடியாது. விசுவாசமான ஒரு ராணுவ அதிகாரியை அனுப்பி வைத்தால்கூட விஷயம் எப்படியோ பரவி தீவிரவாதிகளுக்குப் போய்ச் சேர்ந்துவிடும். அதனால்...?''

''அதனால்...?''

''ராணுவம் சம்பந்தப்படாத இரு நபர்களை 'மன்ஷோர் ஃபாரஸ்டுக்கு அனுப்பி பைலட் ஸ்க்வாடில் சென்றவர்களைக் காப்பாற்றவும், தீவிரவாதிகள் மறைந்துள்ள இடங்களைப் பற்றிய உண்மையான தகவல்களைச் சேகரிக்கவும் நம் ராணுவ அமைச்சகம் முயற்சி எடுத்துள்ளது.''

''நல்ல யோசனை...''

''இந்த யோசனையைச் செயல்படுத்தப் போவது நீங்களும் உங்கள் க்ரைம் ப்ராஞ்ச்சைச் சேர்ந்த மிஸ்டர் விஷ்ணுவும்தான்...''

விவேக் திகைப்பாய் நிமிர்ந்தான்.

''ஸார்...''

''மிஸ்டர் விவேக்...! உங்கள் துணிச்சலும் ண்டலிஜென்ஸியும் இந்திய போலீஸ் க்கார்டுகளில் ரொம்பவும் பிரசித்தம். மன்ஷோர் பாரஸ்ட் சரியாக இந்திய - சீன எல்லையில் ள்ளது. தீவிரவாதிகளைத் தேட ஒரு ராணுவ

பட்டாலியனை அனுப்பி வைத்தால் அதை சீனா அவர்கள் நாட்டின் மீது நடத்தும் ஆக்ரமிப்பாக நினைத்து பதிலடி கொடுக்க ஆரம்பித்துவிட்டால் நிலைமை தர்ம சங்கடமாகிவிடும். அதனால்தான் மன்ஷோர் ஃபாரஸ்ட்டுக்கு உங்களையும் விஷ்ணுவையும் அனுப்ப நம் ராணுவ அமைச்சர் முடிவு செய்துள்ளார்.''

விவேக் சில விநாடிகள் மௌனித்துவிட்டு சீஃப் செக்ரட்ரியை ஏறிட்டான்.

''ஸாரி ஸார்...''

அவர் முகம் மாறினார்.

''எதுக்காக இந்த ஸாரி...?''

''ஸார்... நானும் விஷ்ணுவும் க்ரைம் ப்ராஞ்ச் பீப்பிள்ஸ். மித்ராராய் என் அன்புக்குரியவர் என்கிற ஒரே ஒரு காரணத்துக்காகத்தான் இந்த மர்டர் கேஸில் ஆர்வம் காட்டினேன். என்னால் முடிந்த அளவுக்கு கேஸை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தேன். இந்தக் கேஸில் கிடைக்கப்போகும் உண்மைகளை வைத்துக்கொண்டு அதற்கு ஏற்ற மாதிரியான ராணுவ நடவடிக்கைகளை நீங்கள் தான் எடுக்க வேண்டும். வேறு ஒரு நாட்டின் எல்லைக்குள் புகுந்து எனக்கும் விஷ்ணுவுக்கும் சம்பந்தம் இல்லாத வேலையை பார்க்க முடியாது. மன்னியுங்கள்...''

சீஃப் செக்ரட்ரி வியப்பாய்ப் பார்த்தார்.

''மிஸ்டர் விவேக்...''

''சொல்லுங்கள்...''

''பேசிக் கொண்டிருப்பது நீங்கள்தானா?''

''நானேதான்...''

''எல்லை தாண்டிப் போய் அந்த தீவிரவாதிகளை வேவு பார்க்கும் பணியைச் செய்ய உங்களுக்குள் என்ன தயக்கம்...?''

''தயக்கம் இல்லை...''

''பின்னே பயமா...?''



விவேக் புன்னகைத்தான். ''நான் இது வரைக்கும் யார்க்கும் எதற்கும் பயப்பட்டதே கிடையாது.''

''வேறு என்னதான் காரணம்...?''

''ராணுவம் வேறு; போலீஸ் வேறு.''

''இருந்தாலும் பணி ஒன்றுதானே...?''

''வெரி வெரி ஸாரி ஸார். மன்ஷோர் ஃபாரஸ்ட்டுக்கு போக உங்கள் ராணுவ ஆட்களை உபயோகப்படுத்திக் கொள்வதுதான் முறை.''

சீஃப் செக்ரட்ரி வெகுண்டார்.

''நீங்கள் ஒரு பொறுப்புள்ள, எல்லா விபரமும் தெரிந்த அதிகாரி. இந்த நாட்டு ராணுவ அமைச்சரின் கட்டளையோடு உங்களைப் பார்க்க வந்திருக்கிறேன். அவருடைய கட்டளைக்கு நீங்கள் கொடுக்கும் மரியாதை இதுதானா...?''

விவேக், அவர் கோபத்தைப் பொருட்படுத்தாமல் புன்னகைத்தான்.

''ஸார்...! அவரோட அமைச்சர் பதவிக்கு நான் மரியாதை தர்றேன். பட் அவரோட கட்டளையை நான் ஏத்துக்க முடியாது.''

''நீங்கள் சொன்னதை எழுத்துபூர்வமாக எழுதித்தர முடியுமா...?''

''தாராளமாய்...! ஒரு பேப்பரும் பேனாவும் கொடுங்கள். இந்த நிமிஷமே எழுதித் தர்றேன்'' - அலட்சியமாய் சொல்லிவிட்டு பேப்பர் பேனாவுக்காக கை நீட்டும் விவேக்கை முகம் சிவக்க கோபமாய்ப் பார்த்தார் சீஃப் செக்ரட்ரி.



## 15

மறுநாள் மாலை ஆறு மணி.

க்ரைம் ப்ராஞ்ச் ஸ்பெஷல் விங் ஐ.ஜி. மோத் தன்னுடைய அறையில் கோபமாய்

நடைபொட்டுக் கொண்டிருக்க, கதவு மெலிதாய் தட்டப்பட்டது.

''டொக்... டொக்...''

''ப்ளீஸ் கம்மின்...''

விவேக் உள்ளே நுழைந்தான்.

''குட் ஈவினிங் ஸார்...''

''ஸே பேட் ஈவினிங் மிஸ்டர் விவேக்...''

''ஸார்...''

''பாதுகாப்புத்துறை அமைச்சகத்தில் இருந்து உங்களுக்கு சிவியரா ஒரு மெமோ வந்திருக்கு.''

''நான் எதிர்பார்த்ததுதான் ஸார்...''

''மிஸ்டர் விவேக்...! வாட் ஈஸ் ராங்க் வித் யூ. டிஃபன்ஸ் மினிஸ்டரோட சீஃப் செக்ரட்ரிகிட்ட ஏன் அப்படி ஒரு பதிலைச் சொன்னீங்க? அவர்கிட்ட அப்படி பேசறதுக்கு முன்னாடி என்னை கன்சல்ட் பண்ணிட்டு சொல்றதா சொல்லியிருக்கலாமே... இப்பப் பார்த்தீங்களா... பிரச்சினை எவ்வளவு சீரியஸாயிடுச்சுன்னு...''

''ஸார்... என்னோட மனசுக்குநியாயமாப்பட்ட பதிலைச் சொன்னதுல என்ன தப்பு...?''

www.chennaiindians.com

''விவேக்...! ராணுவத் தரப்புல சொல்லப் படுகிற பதிலைக் கொஞ்சம் நினைச்சுப் பாருங்க. மன்ஷேர் காட்டுப் பகுதியில் உள்ள தீவிரவாதி களை வேவு பார்க்க அனுப்பப்பட்ட பைலட் ஸ்க்வாட் ஐந்து பேரில் ஒருவன் அந்தத் தீவிரவாதிகளுக்கு ஆதரவானவன். இந்த நிலைமையில் அந்த ஸ்க்வாடில் உள்ள மத்த நாலு பேரோட கதி என்னாகும்? அவர்களைக் காப்பாற்றவாவது நாம் முயற்சி எடுக்க வேண்டுமா... வேண்டாமா?''

''அதை ராணுவம் எடுக்கட்டுமே...?''

''ராணுவத்தில் இப்போ நிறைய ப்ளாக் லெக்ஸ் இருக்காங்களே... யாரை நம்பி அங்கே அனுப்புவாங்க...? ராணுவம் ரிஸ்க் எடுக்க



பிரியப்படாத காரணத்தாலதான் உங்களையும் விஷ்ணுவையும் எல்லைப்பகுதிக்கு அனுப்ப முடிவு பண்ணியிருக்காங்க. இதுல என்ன தப்பு இருக்கு...? ஒரு ஊர்ல கலவரம் ஏற்பட்டா ராணுவமும் போலீஸும் கை கோர்த்துட்டு பாதுகாப்புப் பணியில் ஈடுபடறது இல்லையா என்ன...?''

ஐ.ஜி. சொல்லிக் கொண்டிருக்கும்போதே

விவேக்கின் பாக்கெட்டில் இருந்த செல்போன் மெலிதாய் குரைத்தது.

''எஸ்...''

''.............''

''சரி... ஸ்டேட்மெண்ட் க்ளீயரா வாங்கிட்டியா...?''

''...........''

''சரி... ஒரு மணி நேரத்துக்குள்ளே நான் ஸ்பாட்டுக்கு வந்துடறேன்...''

பேசி செல்போனை அணைத்து பாக்கெட்டுக்குள் சொருகிக்கொண்டே விவேக் ஐ.ஜி.யை ஏறிட்டு ஒரு சின்னப் புன்னகையோடு கேட்டான்.

''ஸார்... இப்ப நீங்க ஃப்ரியா இருந்தா என்கூட ஒரு மணி நேரம் ஸ்பெண்ட் பண்ண முடியுமா?''

ஐ.ஜி. வியப்பில் புருவங்களை உயர்த்தினார்.

''நாம இப்போ எங்கே போறோம்...?''

''உண்மைகளை வாங்கிட்டு வர்றதுக்காக ஸார்...''

''உண்மைகளை வாங்கிட்டு வர்றதுக்கா...? நீங்க என்ன சொல்றீங்க விவேக்...?''

''ப்ளீஸ்... என்கூட வாங்க ஸார்...''

ஐ.ஜி. திகைத்த முகத்தோடு விவேக்கைப் பின் தொடர்ந்தான்.



# 16

விவேக்கின் கார் ஒரு மணி நேரம் பயணம் செய்து சென்னை நகரின் எல்லையைக் கடந்து ஒதுக்குப்புறமாய் நிறைய மரங்களுக்கு மத்தியில் ஒரு பங்களாவுக்கு முன்பாய் நின்றது.

ஐ.ஜி. கேட்டார்.

''விவேக்... ! இது யாருடைய பங்களா...?''

''ஏரோ நாட்டின் பாதுகாப்புக் கவுன்ஸிலில் ஒரு மெம்பராக இருக்கிற ராமமூர்த்தியின் கெஸ்ட் ஹவுஸ் ஸார் இது...'' விவேக் சொல்லிக்கொண்டே காரிலிருந்து இறங்கி நடக்க, ஐ.ஜி. பின் தொடர்ந்தார்.

''ராமமூர்த்தியைப் பார்க்கவா வந்திருக்கோம்?''

''இல்ல... ஸார்...''

''பின்னே...?''

விவேக் அவர்க்கு பதில் சொல்லாமல் பங்களா படியேறி அழைப்பு மணி பொத்தானில் கட்டை விரலை வைத்தான்.

பங்களாவுக்குள் ஒரு ஜலதரங்க இசை எழுப்பியது. பத்து விநாடிகளுக்குப்பிறகு கதவு திறக்கப்பட - விஷ்ணு தெரிந்தான்.

விவேக்கையும் ஐ.ஜி.யையும் ஒருசேர பார்வையில் வாங்கியதும் விஷ்ணு அட்டென்ஷனுக்கு போய் சல்யூட் வைத்துத் தளர்ந்தான்.

''ப்ளீஸ் கம்மின் ஸார்...'' விவேக் ஐ.ஜி.யை உள்ளே கூட்டிக்கொண்டு போக, அவர் வியப்புகளை முகம் முழுவதும் ஒட்ட வைத்துக் கொண்டு தோள்களைக் குலுக்கினார்.



''விவேக்...! இங்கே என்ன நடக்குது...? எனக்கு ஒண்ணும் புரியலை...''

விவேக் புன்னகைத்தான். ''இனிமே புரியும் ஸார்...'' சொன்னவன் தொடர்ந்தான்.

''ஸார்...! நானும் ராணுவ மந்திரியோட கட்டளையை ஏத்துக்கிட்டு மன்ஷோர் ஃபாரஸ்டுக்குப் போய் பைலட் ஸ்க்வாடில் உள்ள நாலு பேரைக் காப்பாற்றவும் தீவிரவாதிகளை வேவு பார்க்கவும் மறுத்துட்டதற்காக ராணுவத்திலும் டிபார்ட்மெண்டிலும் இருக்கிற எல்லா அதிகாரிகளுக்கும் என் மேலே கோபம் இருக்கலாம். நீங்களும் மத்த அதிகாரிகளும் நினைச்சுட்டிருக்கிற மாதிரி பைலட் ஸ்க்வாடில் போன அந்த நாலு பேரோட உயிருக்கு எந்தவிதமான ஆபத்தும் இல்லை. அவங்க பத்திரமா இருக்காங்க. தே ஆர் இன் ஸேஃப்...''

ஐ.ஜி.யின் புருவங்கள் உயர்ந்தது.

''விவேக்...! நீங்க என்ன சொல்றீங்க...? மன்ஷேர் ஃபாரஸ்ட்டிலிருந்து அந்த நாலு பேரும் பத்திரமா திரும்பி வந்துட்டாங்களா...?''

''அவங்க மன்ஷேர் ஃபாரஸ்டுக்கே போகலை ஸார்... அந்த ஸ்க்வாட் புறப்பட்டுப் போறதுக்கு முந்தியே ஸ்க்வாடில் இருந்த ப்ளாக் லெக் யார்ங்கிறதை கண்டுபிடிச்சுட்டேன். அந்த ப்ளாக் லெக் இப்போ இதே பங்களாவில் என்னோட கஸ்டடியிலேதான் இருக்கான்.''

ஐ.ஜி. வியப்பின் உச்சிக்குப் போனார். பதட்ட குரலில் கேட்டார்.

''ஸ்க்வாடில் இருந்த ஐந்து பேரில் யார் அந்த ப்ளாக் லெக்...?''

''சைலேஷ் பாபு...''

''அவன்தான் 'ப்ளாக் லெக்'ன்னு எப்படி கண்டுபிடிச்சீங்க...?''

''ஏரோநோட்டிக் பாதுகாப்புக் கவுன்சிலில் இருந்த எல்லா அதிகாரிகளோட ஒருமித்த



www.oceanindians.com

கருத்துப்படி பைலட் ஸ்க்வாடுக்காக கதிர், சைலேஷ்பாபு, மோகன், பிரசாத், விக்டர், விமல் இவங்க தேர்ந்து எடுக்கப்பட்டு தகவல் கொடுத்து வரவழைக்கப்பட்டாங்க. இந்த அஞ்சு பேரையும் கவுன்ஸிலுக்கு முன்னாடி நிறுத்தி மன்ஷேர் ஃபாரஸ்ட்டில் அவங்க எது மாதிரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளணும்னு சொல்லிட்டிருந்தேன். நான் பேசிட்டிருக்கும் போதே அஞ்சு பேரில் சைலேஷ்பாபு மட்டும் தனது வலது கையில் கட்டியிருந்த ரிஸ்ட் வாட்சை நாலைஞ்சு தடவை இடது கை கட்டை விரலாலே தடவி தடவி விட்டான். மத்த நாலு பேர்க்கும் இல்லாத வியர்வை கோட்டிங் அந்த சைலேஷ் பாபுவுக்கு மட்டும் நெற்றியில் தெரிந்தது. நான் அதை கவனிக்காத மாதிரி எல்லா விஷயங்களைச் சொல்லி முடிச்சு நாளைக்கு ராத்திரிக்குப் பயணத்துக்குத் தயாராகும்படி இன்ஸ்ட்ரக்ஷன் குடுத்துட்டு, அதுக்கப்புறம் நான் ராம மூர்த்தியைத் தனியா சந்திச்சு பேசி என்னோட சந்தேகத்தைச் சொன்னேன். என்ன செய்யலாம்னு கேட்டார். விஷ்ணுவை விட்டு சைலேஷ்பாபுவைக் கண்காணிக்கலாம்னு நான் சொன்னதுக்கு அவர் ஒத்துக்கிட்டார். விஷ்ணு நேத்து பூராவும் சைலேஷ்பாபுவை லேசர் பார்வையோடு 'அப்சர்வ்' செய்ய, சைலேஷ்பாபு டென்ஷனா இருந்தது தெரிய வந்தது. அதுவுமில்லாமே வீட்ல டெலிபோன் இருக்கும் போதே வெளியே இருக்கிற பப்ளிப் பூத்துக்குப் போய் யார்க்கோ போன் பண்ணியிருக்கான். இந்த விபரங்கள் எல்லாம் விஷ்ணு மூலமா எங்களுக்குக் கிடைச்சதும் நானும் ராமமூர்த்தியும் உஷாரா யிட்டோம். விஷயம் வெளியே யார்க்கும் தெரியாதபடி நேத்து ராத்திரி பத்து மணி சுமார்க்கு கதிர், சைலேஷ்பாபு, மோகன் பிரசாத், விக்டர், விமல் இந்த ஐந்து பேரும் மன்ஷேர் ஃபாரஸ்ட்டுக்குப் புறப்பட்டுப் போக ராணுவ விமான நிலையத்துக்கு வந்தாங்க. அது ஒரு ரகசிய பயணம். ஸோ அதிகாரிகள் யாரும் வழியனுப்ப வரலை. பைலட் மட்டும்



காத்திருந்தார். விமானம் சரியாய் பத்தரை மணிக்குப் புறப்பட்டது. அப்படி புறப்பட்ட விமானம் இந்திய - சீனா எல்லையில் இருக்கும் மன்ஷேர் ஃபாரஸ்ட்டை நோக்கிப் பறக்கலை. அதுக்கு மாறாக நான் விமான பைலட்டுக்கு கொடுத்த இன்ஸ்ட்ரக்ஷன்படி வானத்தில் இரண்டு மணி நேரம் பறந்துவிட்டு, அதற்குப் பிறகு அரக்கோணத்துக்குப் பக்கத்தில் உள்ள பயிற்சி விமான நிலையத்தில் தரை இறக்கப் பட்டது. ராமமூர்த்தி அங்கே காத்திருந்து அவர்களை ரிஸீவ் செய்து வேறு காரணம் சொல்லி இந்த பங்களாவுக்கு கூட்டி வந்தார். சைலேஷ்பாபுவை தனிமைப்படுத்தி ஒரு அறையில் அடைத்துவிட்டு எனக்கு தகவல் கொடுக்க, விஷ்ணுவும் நானும் புறப்பட்டுப் போனோம். அதற்கு நடுவில் நாங்கள் ஏற்கனவே தீர்மானித்தபடி போலீஸ் கமாண்டோ பிரிவில் உள்ள ஐந்து அதிரடிப்படை வீரர்களை வேறு ஒரு விமானத்தில் பைலட் ஸ்க்வாடாக இந்திய - சீன எல்லையில் உள்ள மன்ஷேர் ஃபாரஸ்ட்டுக்கு அனுப்பி வைத்துவிட்டோம். மன்ஷேர் ஃபாரஸ்ட்டுக்குப் போயிருப்பவர்கள் கதிர், சைலேஷ்பாபு, மோகன் பிரசாத், விக்டர், விமல் ஆகிய பைலட் ஸ்க்வாட்தான் என்பதை ராணுவ கவுன்சிஸலில் உள்ள அதிகாரிகள் நம்ப வேண்டும் என்பதற்காக இண்டர்நேஷனல் ஸ்பை ஏஜென்ஸி பெயரை உபயோகப்படுத்தி ராணுவ அமைச்சகத்துக்கு மன்ஷேர் ஃபாரஸ்ட்டுக்குப் போயிருக்கிற பைலட் ஸ்க்வாடில் ஒரு ப்ளாக் லெக் இருப்பதாக ப்ராக்ஸி தகவல் கொடுத்தேன். ராணுவ மந்திரி இதில் அலர்ட்டாகி சீஃப் செக்ரட்டரியை உடனடியாக அனுப்பி வைத்து பைலட் ஸ்க்வாட்டில் இருப்பவர்களைக் காப்பாற்ற என்னையும் விஷ்ணுவையும் மன்ஷேர் ஃபாரஸ்ட்டுக்குப் போகும்படி சொன்னார். இந்த விஷயத்தில் உடனடியாக எந்த உண்மையையும் சொல்ல முடியாத நிலை எனக்கு. சைலேஷ்பாபு தன் கையில் கட்டியிருந்த ரிஸ்ட் வாட்ச்சில் மிக மிக மிக மிகச் சின்ன சைஸ் டேப் ரிக்கார்டர் ஒன்றை



www.cleanindians.com

பொருத்தியிருந்ததைக் கண்டுபிடிக்க முழுசாய் பத்து மணி நேரம் பிடித்தது. அந்த டேப் ரிக்கார்டரில் பதிவாகியிருந்த விஷயங்களை யெல்லாம் கிரகித்து பார்த்தபோது நம் ராணுவத்தில் தீவிரவாதிகளோடு தொடர்பு வைத்திருக்கிற எத்தனை ப்ளாக் லெக்குகள் இருக்கிறார்கள் என்பது புரிந்தது. எல்லோரையும் ஒரே நேரத்தில் கைது செய்வதற்காக ராமமூர்த்தி இப்போதுதான் நடவடிக்கைகளை எடுக்க ஆரம்பித்துள்ளார்.''

ஐ.ஜி. பிரமிப்பு விலகாமல் விவேக்கைப் பார்த்தார்.

''விவேக்... நீங்கள் சொல்லுகிற ஒவ்வொரு விஷயமும் ஆச்சரியத்துக்கு மேல ஆச்சர்ய மாயிருக்கு.''

''எல்லாவற்றுக்கும் மேலாக இன்னொரு ஆச்சர்யமும் இருக்கு ஸார்...''

''என்ன...?''

''மினி ஃப்ளைட்டுகளையும் சைலன்ஸர் டைனமைட்களையும் கண்டுபிடித்த சயன்டிஸ்ட் புஷ்பநாத்தைக் கொலை செய்துவிட்டு அந்த ப்ராஜெக்ட்டை வேறு யாரோ உபயோகப்படுத்தி மினி ஃப்ளைட் சைலன்ஸர் டைனமைட்கள் தயார் செய்து இந்த நாச வேலையில் ஈடுபட்டுள்ளார்கள் என்று நாம் நினைத்துக் கொண்டிருப்பது உலக மகா தப்பு ஸார்...''

''பின்னே...?''

''சயன்டிஸ்ட் புஷ்பநாத் கொலை செய்யப்படவே இல்லை. அப்படியொரு புரளியை அவரே கிளப்பிவிட்டு, திரை மறைவில் காரியங்களை நடத்தியிருக்கார். அதுவும் இதே சென்னையில் இருந்துகொண்டு. சைலேஷ் பாபுவைப் பத்து மணி நேரம் உதைத்து வதைத்ததில் அவன் சொன்ன உருப்படியான உண்மைகளில் இதுவும் ஒன்று. 'செங்குன்றம் பகுதியில் ஒரு மலைக்குப் பின்புறம் கல் க்வாரி ஒன்றை உருவாக்கி, அந்த தொழிலின்



www.cleanindians.com

பின்னணியில் பூமிக்குக் கீழே செல்லர் என்கிற அண்டர்க்ரௌண்ட் அமைத்து அங்கே வைத்து மினி ஃப்ளைட்டுகளையும், சைலன்சர் டைனமைட்டுகளையும் தயாரித்து, அரசியல் தலைவர்களையும் ராணுவ அதிகாரிகளையும் ஹிட் லிஸ்ட் முறையில் தீர்த்துக்கட்ட வெளி நாட்டு தீவிரவாத சக்திகளோடு கூட்டு சேர்ந்து ஒரு ரத்தக் காட்டேரியாகவே மாறியிருக்கிறார் நம் சயன்டிஸ்ட் புஷ்பநாத். இதில் பழைய பகையை மனதில் வைத்துக்கொண்டு முதல் முதலாய் எக்ஸ் சீஃப் மார்ஷல் மித்ராராயை தன் மினி ஃப்ளைட் கம் சைலன்ஸர் டைன மைட்டுக்குப் பலி கொடுத்து இருக்கிறார்...''

ஐ.ஜி. குழப்பம் விலகாமல் கேட்டார்.

''எல்லாம் சரி... மிஸ்டர் விவேக்... பட் மித்ராராயின் அந்த மரண அறிவிப்பு பத்திரிகை விளம்பரம் எதற்காக...?''

''மித்ராராய் கொலை சம்பந்தமாய் போலீஸார் புலன் விசாரணை செய்யும்போது அதில் நிறைய சிக்கல்கள் இருக்க வேண்டும் என்பதற்காகவும், யாரும் தப்பித் தவறிகூட சயன்டிஸ்ட் புஷ்பநாத் மேல் சந்தேகப்பட்டுவிடக்கூடாது என்பதற் காகவும் க்ரியேட் செய்யப்பட்ட ஒரு சீன்தான். மெட்டாலார்ஜிஸ்ட் ஜெயசிம்ஹா மட்டும் எனக்கு போன் செய்து, 'இந்த கொலை விவகாரத்தில் ஒரு மினி ஃப்ளைட் உபயோகப்படுத்தப்பட்டு இருக்கலாம். சம்பவ இடத்தில் உருகிய டூராலுமினியம் கிடைத்தால், அதை என்னிடம் கொண்டு வாருங்கள்' என்று சொல்லாமல் இருந்திருந்தால் இந்த கேஸ் இன்னமும் நமக்கு கண்ணாமூச்சி காட்டிக் கொண்டிருக்கும்.''

விவேக் சொல்லிக் கொண்டிருக்கும்போதே விஷ்ணு பக்கத்து அறையிலிருந்து கதிர், சைலேஷ்பாபு, விமல், விக்டர், மோகன் பிரசாத்தோடு வெளிப்பட்டான்.

சைலேஷ்பாபுவின் கைகளில் மட்டும் விலங்கு. போலீஸ் கைங்கர்யத்தால் உதடும் மூக்கும் வீங்கியிருந்தது.

விவேக் சைலேஷ்பாபுவை நெருங்கி தனது இடது கை ஆட்காட்டி விரலால் அவன் மோவாயை நிமிர்த்தினான்.

"சைலேஷ்பாபு...! இந்த நாட்டுக்கு சேவை செய்ய நினைக்கிறவங்கதான் ராணுவத்தில சேர்வாங்க. ஆனா நீ துரோகம் செய்யறதுக்காகவே சேர்ந்திருக்கே. துரோகம் ஆரம்பத்துல ஜெயிக்கிற மாதிரி இருக்கும். அதுக்கப்புறம் அது எப்ப தலை நீட்டினாலும் மரண அடிதான் விழும். உன்னை மாதிரியான புத்திசாலி இளைஞர்கள் இந்த நாட்டுக்குத் தேவை. ஆனா அந்த புத்திசாலித் தனம் துரோகத்துக்குத் துணை போய்விடக் கூடாது. உனக்கு தண்டனை கிடைக்கும். அந்த தண்டனைக் காலம் முடிந்த பின்பாவது நீ திருந்தணும்..."

சைலேஷ்பாபு கண்ணீரோடு விவேக்கைப் பார்த்து உதடுகள் துடிக்கச் சொன்னான்.

"இந்த நிமிஷத்திலிருந்தே நான் திருந்திட்டேன் ஸார்..."

விவேக் "குட்" சொன்ன விநாடி -

செல்போன் சர்ட் பாக்கெட்டுக்குள்ளிருந்து கூப்பிட்டது.

எடுத்தான்.

"எஸ்..."

"விவேக்...! நான் ராமமூர்த்தி..."

"சொல்லுங்க ஸார்..."

"சயன்டிஸ்ட் புஷ்பநாத்தைக் கைது பண்ணி, பரங்கிமலை ராணுவ பேரக்ஸுக்கு கொண்டு வந்தாயிற்று."

"வெல்டன் ஸார்..."

"இந்த வெல்டனை உங்களுக்குச் சொல்லச் சொன்னார் நம் ராணுவ அமைச்சர்..."

**(முற்றும்)**



www.cleanindians.com

## தரிசனம்...!



அசைந்து நடந்து
பாதையைக் கடந்து
அருகில் வந்து...
உன் இனிய
முக தரிசனம்
அமுதமாய்க் கிடைத்தது
தீபத் திருவிழாவை...
திகைப்புடன் பார்ப்பதுபோல்
இமைகளை மூடாமல்
இரண்டு கண்களிலும்
சேமித்துக்கொண்டேன்
"இப்பிறவிக்கு"
இதுவே போதுமடி...!

ராஜா செல்வராஜா,
கரடிவாவி.

## வரம்...

வஞ்சி மலரே...!
உன்னுடன் சேர்ந்து
சிரிப்பை சிந்தவோ?
உன்னுடன் இணைந்து
கண்ணீர் துடைக்கவோ...!
உன்னுடன் கலந்து
உலகை புரிந்துகொள்ளவோ...
புன்னகை நிரம்பிய
மோகனப் புன்னகையே...
'வரம்' தாராயோ...??